அக்டோபர், 1958
விளம்பி - ஐப்பசி
40 நயா பைசா

# மஞ்சரி

அஹிம்சையில் புது வழி

கூந்தல் சோதிடம்

சரத்சந்திரரின் உள்ளம்

டிரெடில்
(தமிழ்க் கதை)

அன்னையின் குரல்
(நாவல் சுருக்கம்)

# அமைதி எங்கே?

பல ஆறுகளின் நீர் புகுந்தபோதும் அசையாமல் இருக்கும் கடலைப்போல, எல்லா ஆசைகளும் தனக்குள் அடங்கிய ஞானி அமைதியைப் பெறுகிறான். ஆசைகளை நாடி அலைபவன் இந்த அமைதியைப் பெறுவதில்லை.

—பகவத் கீதை.


## மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள்:
ஸாமி, மகான், சுசி, சுப்பு

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 11] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: அக்டோபர் 1958 [இதழ் 10

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

**ஐ. நா-வும் சீனாவும்:** ஐக்கிய நாடுகளின் சபையில், நவ சீனா அங்கம் வகிக்க அநுமதிக்க வேண்டியது மிக மிக அவசியம்; அதுதான் நியாயம். சீனாவை நவீன முறையில் உருவாக்கிய பெருந்தலைவர்களில் ஒருவர் சியாங்-கே-ஷேக் என்பது உண்மையே. பல காலம் சீனாவை அவர் ஆட்சி புரிந்தார். இரண்டாவது உலக யுத்தகாலத்தில், அவர் ஆண்ட சீனாதான் போரிலே பங்கு கொண்டது. ஐ. நா. சபையில் ஸ்தாபித்த ஐந்து வல்லரசுகளில் ஒன்று அவருடைய அரசுதான். என்றாலும், இத்தனையும் இன்று பழங்கதையாய்ப் போய்விட்டன. சியாங்-கே-ஷேக்கின் ஆட்சியை எதிர்த்துப் போரிட்டு, சீனாவைக் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றி ஆட்சி புரியத் தொடங்கி ஏழெட்டு வருஷ காலம் ஆகிவிட்டது. ஃபார்மோஸா தீவுக்கு ஓடி அங்கே இன்று ஆட்சி புரிகிறார் சியாங்-கே-ஷேக். ஆட்சியாவது! அமெரிக்க பலத்தை ஆதரவாகக் கொண்டு, ஏதோ காலந்தள்ளுகிறார். மீண்டும் சீனா முழுவதையும் பிடித்து, ஒரு நாள் ஆளலாம் என்ற ஆசைக் கனவு அவருக்கு இருப்பது இயல்பு. ஆனால், இதற்காகப் பிற நாட்டு அரசுகள் - முக்கியமாக, அமெரிக்காதான் - அவரை ஆதரிப்பது, இன்றைய உலக நிலையில் மிக மிக விபரீதமாகும். தன் படைப் பலத்தையே கொண்டு, சியாங்-கே-ஷேக்கைப் பாதுகாக்க அமெரிக்கா முனைந்திருப்பதைப் போன்ற அபத்தமான செயல் வேறொன்று இருக்க முடியாது. இது மட்டுமல்ல; கம்யூனிஸ்ட் சீனாவைப் பிரிட்டன் உள்பட எத்தனையோ நாட்டு அரசாங்கங்கள் அங்கீகரித்தும், அமெரிக்கா இன்னும் அங்கீகரிக்காமல் முரண்டு செய்து வருகிறது. தவிர, ஐ. நா. சபையில் சீனாவுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்காதபடி அமெரிக்கா கட்சி கட்டிக்கொண்டு தடை செய்து வருகிறது. இதைப் போன்ற முரட்டுத்தனத்தை நாம் எங்கும் கண்டதில்லை. இந்தியா இந்த விஷயத்தில் ராஜிக்கு முயன்று வருவதைப் பல நாடுகள் பாராட்டுகின்றன. ஐ. நா. சபையில் கம்யூனிஸ்ட் சீனா அங்கம் வகித்தால் அதன்மீது உலக நாடுகளின் சபை தன் செல்வாக்கைச் செலுத்த முடியும். அப்போது, பல பிரச்னைகள் அமைதியாகத் தீர்ந்துவிடும். ஆயினும் ஏனோ அமெரிக்கா இதை எதிர்த்து வருகிறது. இது முற்றும் வருந்தத் தக்க விஷயம்.

* * *

**பூதானில் நேரு:** ஹிமாலயத்தின் தெற்குச் சரிவில் 18 ஆயிரம் சதுர மைல் பரப்புள்ள ஒரு சுதந்தர ராஜ்யம் பூதான். சுமார் மூன்று லட்சம் மக்களைக் கொண்டது. நம்முடைய பிரதம மந்திரி நேரு இப்போது அங்கே விஜயம் செய்தார். அவரைப் போன்ற பெருந்தலைவர் ஒருவர் அந்தச் சுதந்தர நாட்டுக்கு விஜயம் செய்தது இதுவே முதல் தடவையாகும். பூதான் தலைவர்களும் மக்களும் நேருவைப் பேருற்சாகத்

தோடு வரவேற்று உபசரித்தது மகிழ்ச்சிக்குரியது. பூதானின் அயல் நாட்டு உறவுகளுக்கு இந்தியாவே வழிகாட்டியாக இருப்பதற்கு அந்த நாடு ஏற்கனவே சம்மதித்திருக்கிறது. அந்த நாட்டு மக்கள் பௌத்தர்கள். பழமையிலும் சுயேச்சையிலும் பற்றுக் கொண்டவர்கள். தங்கள் சுய மொழியைத் தவிர, ஆங்கிலத்தையும் ஹிந்தியையும் பூதான் இளைஞர்கள் கற்று வருகிறார்கள். இந்தியாவிடம் பூதானியருக்கு அன்பு. ஏற்கனவே யிருந்த ஏகாதிபத்தியச் சீனா, இந்தப் பூதான்மீது தனக்கு அதிகாரம் உண்டு என்று சொல்லிக் கொண் டிருந்தது. இன்றைய கம்யூனிஸ்ட் சீனா, இந்தியாவோடு நட்புக்கொண் டிருப்பதால், அப்படி உரிமை பாராட்டாது என்று நம்பலாம். பூதான் மக்கள், நவீன வசதிகளற்றுப் பழைய வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆயினும், இளைஞர்கள் இந்தியாவுக்கு வந்து நவீனக் கல்வி பெற்று வருகிறார்கள். இதனால் பூதானிய மக்களின் வாழ்க்கை மாறத்தான் மாறும். ஆயினும், அந்த மாறுதல் சிறுகச் சிறுக நடக்கப் பார்த்துக்கொள்வது அவசியம். இதற்கு இந்தியாவும் உதவி புரியத் தயங்காது.

* * *

காலஞ் சென்ற பகவான் தாஸ்: சென்ற மாதம் (செப்டம்பர் 19-ஆம் தேதி) பாபு பகவான் தாஸ், காசியில் தமது இல்லத்தில் காலமான செய்தி மிகவும் வருத்த மூட்டுவது. பகவான் தாஸ் 1869 ஜனவரி 12-ஆம் தேதி பிறந்து தொண்ணூறு வயசு வாழ்ந்தார். சிறந்த படிப்பாளி. முனிவரைப் போல் வாழ்ந்த தத்துவதரிசி. ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் தத்துவ நூல்கள் பல எழுதினார். இவரும் டாக்டர் அன்னி பெஸண்டும் கூட்டாகப் 'பகவத் கீதை'யை ஆங்கிலத்தில் நேர்த்தியான நடையில் மொழிபெயர்த்திருப்பது பிரசித்தம். அடையாறு தியாஸஃபி இயக்கத்தில் பகவான் தாஸ் சிரத்தை கொண்டிருந்தார். 1921-இல் காந்திஜியின் சட்ட மறுப்பியக்கத்தில் சேர்ந்து, பகவான் தாஸ் சிறை சென்றார். காசி வித்யா பீடத்தின் தலைவரா யிருந்தார். இவர் பனாரிஸ் ஹிந்து யூனிவர்ஸிட்டியின் ஸ்தாபகர்களுள் ஒருவர். சென்னைக் கவர்னரா யிருந்து இப்போது பம்பாய்க் கவர்னராக இருக்கும் ஸ்ரீபிரகாசா, உத்தரப் பிரதேச லெஜிஸ்லட்டிவ் கவுன்ஸில் தலைவர் சந்திரபால் இருவரும் இவருடைய புதல்வர்கள். சாந்தா, சுசீலா என்ற இரண்டு பெண்களும் இவருக்கு இருக்கிறார்கள். கல்விக்கும் தேசத்துக்கும் சேவை புரிந்து, தூய வாழ்வு வாழ்ந்த பாபு பகவான் தாஸின் நினைவு பாரத மக்களின் மனத்தில் என்றும் பசுமையாய் இருக்கும்.

## கடமை உணர்ச்சி

இண்டியானா மாகாணத்தில் கிழக்குச் சிக்காகோ நகர மேயரை ஒரு மனிதன் தன் மைத்துனனுக்கு ஏதாவது வேலை கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான்.

அப்போது அவன் சொன்னது இது: ''அவன்தான் என் மாமியாரைப் போஷித்து வருகிறான். அவன் அவளைப் போஷிக்காவிட்டால் நான் போஷிக்க வேண்டி வந்துவிடும்.''

—ஃப்ரான்ஸெஸ் ராட்மான்

பண்டரிபுர சம்மேளனத்தில் நிகழ்ந்த
சிந்தனையைத் தூண்டும் பிரசங்கம்.

# அஹிம்சையில் புதுவழி

**விநோபா பாவே**

வாழ்க்கையை உருவாக்கும் சக்திகள் மூன்று; அவை ஆத்ம ஞானம், விஞ்ஞானம், இலக்கியம் இவையே. உலகத்தைப் பலர் பெரிதும் மாற்றியிருக்கிறார்கள். நாடுபிடித்து அவற்றைக் கட்டியாண்டவர்களே அவர்கள் என்று தோன்றுகிறது. பாபர் தலையெடுத்தாரென்றால், அவரால் இந்தியா - ஆசியாவேதான்-பாதிக்கப் பெற்றது. இதனால் இந்திய வரலாற்றில் மட்டுமல்லாமல் உலக வரலாற்றிலேயே அவர் இடம் பெற்று விட்டாரென்று சொல்லுகிறார்கள். இதே வகையில் ஆட்சித் துறையில் தம் ஆற்றலைக் காட்டிய அலெக்ஸாண்டர், கிளைவ் இவர்களுக்கே உலகில் செல்வாக்கு அதிகம் என்கிறார்கள். ஆனால் இப்படி எண்ணுவது முற்றும் தவறு. இந்தப் பாபரும் பிறரும் தோன்றிய காலத்திலும், இவர்கள் தாங்களாகவே எதையும் சாதித்துவிடவில்லை. ஓரளவு விஞ்ஞான சக்தி இவர்களுக்கும் உதவியே இருக்கிறது. இங்கிலாந்திடம் இருந்தது போன்ற நல்ல கப்பல்கள் இந்தியாவிடம் இல்லை. ஏன், வீர சிவாஜியே தம்மிடம் நல்ல கத்திகள் இல்லாததால் போர்த்துக்கீசியரிடமிருந்து அவற்றை வாங்கி வந்தார். இதனால் மராட்டி மொழியில் பீரங்கியைக் குறிப்பதற்கு 'ஃபிரங்கி' என்ற போர்த்துக்கீசியச் சொல்லே வழங்குகிறது. 'பீரங்கிக்கு முன் நம் கத்தியும் ஈட்டியும் என்ன செய்யும்?' என்ற கருத்துள்ள பழமொழி ஒன்று மராட்டியில் உண்டு. படையெடுத்து வந்த பாபரோ, அலெக்ஸாண்டரோ, நாடு கண்டுபிடிக்க வந்த மார்க்கோ போலோவோ, கொலம்பஸோ எவராயினும், அவர்களெல்லாம் அப்போது பிறருக்குக் கிடைக்காத விஞ்ஞான சக்தியின் உதவியினாலேயே எதையும் சாதித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குக் கிடைத்த வெற்றிக்கு விஞ்ஞானமே காரணம்.

உலகத்தை மாற்றும் இரண்டாவது சக்தி ஆத்மஞானத்தைக் கையாளும் வழியைக் காட்டுகிறது. இதனால் அந்த அந்தக் காலத்து மக்கள் ஆத்மஞானம் ஏவுகிறபடி விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி வந்தார்கள். உலகத்தில் மாமிசம் தயாராகி வந்தது. அது மலிவாகவும் கிடைத்தது. ஆனால் ஜயினர்கள் புலால் என்பதை விட்டுவிட்டார்கள். பிறகு இந்து மதத்திலும் இது மதிப்புப் பெற்றது. இந்துக்களுள் புலாலையே தொடாத சமூகங்கள் பல இருக்கின்றன. இந்த மாற்றத்துக்குக் காரணம் விஞ்ஞானமல்ல; ஆத்மஞானமே. மரண தண்டனையை நிறுத்த வேண்டுமென்று இப்போது உலகெங்கும் ஆலோசித்து வருகிறார்களே, இது விஞ்ஞானத்தின் விளைவா? அல்ல. ஆத்மஞானமே இதற்குக் காரணம். ஆத்மஞானத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடையில் அமர்ந்து எப்போதும் சிந்தனையில் ஆழ்ந்திருப்பது இலக்கியம். இலக்கியகர்த்தாக்களை ஞானதேவர், ''சொல்லாற்றல் வல்லோர்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இனி விஞ்ஞான யுகத்தில் சத்தியாக்கிரகத்தின் தன்மையும் அதன் உருவும் எப்படி அமையவேண்டும் என்பதுபற்றிச் சிறிது சொல்லுகிறேன். ஒருவன் குண்டாந்தடி கொண்டு தாக்க வருகிறான். எதிரே மிக அன்பும் கருணையும் உள்ள ஆண்களும் பெண்களும்

மூலம்: சர்வோதயம் (தமிழ்; செப்டம்பர் '58), தஞ்சாவூர்.

நிற்பதைக் கண்டதும், அவனுக்குத் தன் செயல் எவ்வளவு மடமையென்று தானாகவே விளங்குகிறது. இதே வகையில்தான், வேடனாயிருந்த வால்மீகி கோடரி கொண்டு நாரதரைத் தாக்க வந்த போது முனிவரின் அமைதியான உருவைக் கண்டார். உடனே வால்மீகியின் கைக்கோடரி தானே கீழே நழுவி விழுந்தது. வால்மீகி மாறிவிட்டார். ஆனால் ஒருவன் வானத்தில் பறந்தபடியோ தன் இடத்தில் இருந்துகொண்டேயோ அணுக்குண்டுகளை வீசினால், அதற்கு என்ன செய்வது? இதைச் சத்தியாக்கிரகம் எப்படிச் சமாளிக்கும்? சத்தியாக்கிரகியின் கண்ணிலே உள்ள கருணையும் சொல்லிலே உள்ள இனிமையும் இங்கே எப்படிப் பயன்படும்?

விஞ்ஞான சக்தி திரண்டெழுந்துள்ள இந்தக் காலத்தில் நாம் ஆத்மிகக் கடலிலும் ஆழ்ந்து மூழ்கியாக வேண்டும். விஞ்ஞானத்தின் உதவியினால் சிலர் வீட்டில் அமர்ந்தபடியே உலகத்தை அழிக்கும் சக்தியைப் பெற்றிருப்பதைப் போலவே, நாமும் இருந்த இடத்தை விட்டு நகராது அகில உலகையும் ஆட்கொள்ளக் கூடிய ஆற்றலை வளர்த்துக்கொண்டாகவேண்டும்.

அணுசக்தியை எதிர்த்து நின்று வெல்லக்கூடிய ஆத்மசக்தி ஒன்றை நாம் இப்போது கண்டுபிடித்தாக வேண்டும். இந்த வகையில் சிந்திக்கும்போது, நாடுகளின் எல்லைகள், மொழிகளின் வரம்புகள், சமயம் பற்றிய இந்தப் பேச்சுக்கள் எல்லாமே அர்த்தம் இல்லாதவையாகத் தோன்றுகின்றன. இந்த விஞ்ஞான யுகத்தில் பழைய முறையில் வேலை செய்வதில் பயனில்லை.

இப்படியெல்லாம் நான் சொல்லுவதைக் கேட்டுச் சிலர், 'ஏது, இப்போது இந்த விநோபா ஸ்ரீ அரவிந்தரைப் போல் அல்லவா பேசத் தொடங்கிவிட்டார்!' என்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாது. இது இன்று நேற்று ஆரம்பமானதல்ல; வெகு காலமாகவே நான் இந்த வகையில் எண்ணி வருபவன்தான்: விஞ்ஞானம் காரணமாக இப்போது அது தெளிவாகி வருகிறது. விஞ்ஞான யுகத்தில் நாம் மனத்தளத்திலேயே செயல் புரிந்துகொண்டு இருப்போமானால், மனமாற்றச் சுழலில் சிக்கி வெளியேறவே முடியாமல் தவிப்போம். ஆகவே, அந்தக் காலத்துப் பழைய ராஜதந்திரங்களும் பழைய இலக்கியங்களும் இப்போது பயன்பட மாட்டா. இன்று நீதி முறையே புதிய உருப் பெறப் போகிறது.

மகான்கள் தங்கள் தியானத்தில் கண்ட விஷயங்களைச் சொன்னார்கள். அவற்றை மக்கள் ஏற்று நம்பினார்கள். மகான்களின் உள்ளக் காட்சியையே ஆதாரமாகக் கொண்டு, இன்று அவற்றை அப்படி நம்ப மக்கள் தயாரில்லை. ''உண்மை நல்லது'' என்று மக்கள் என்னவோ சொல்லுகிறார்கள். ஆயினும், எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்மையையே அவர்கள் சார்ந்திருக்கச் சித்தமாயில்லை. 'தரைக்குத் தொண்ணூறு டிகிரி கோணத்தில்தான் சுவர் அமைய வேண்டும்' என்பதில், வீடு கட்டும் கொத்தனுக்குச் சந்தேகமே இல்லை. இதைப்போல், 'உண்மை எப்போதுமே நல்லது' என்ற உறுதி மனிதனுக்கு ஏற்படவில்லை. சத்தியம், அகிம்சை இவற்றின் நிலையும் இதுவே. தர்மத்துக்கு அடிப்படையாக விஞ்ஞானம் அமையவேண்டும். அப்போது தான் தர்மம் நிலைத்து நிற்கும்.

இப்போதெல்லாம் இந்த ரீதியில் நான் சிந்தித்து வருகிறேன். மூன்று வருஷத்துக்கு முந்தி இருந்த செயல் திறனை இன்று என்னிடம் காணாதது இதனால்தான். 'நிவிர்த்தி' அதாவது, 'துறவு மனப்பான்மை' இப்போது என்னிடம் அமைந்து வருகிறது. நான் சொல்லும் துறவு 'பிரவிர்த்தி'க்கு, அதாவது 'செயல்'லுக்கு மாறானதல்ல. என் துறவு, சக்தியைத் தேடுவது. இதை என் 'சத்தியாக்கிரக சோதனை'யாகக் கொள்கிறேன்.

இப்போதுதான் ராஜஸ்தானிலிருந்து நண்பர் ஒருவர், சத்தி

யாக்கிரகம்பற்றிய ஒரு பிரச்னை குறித்து என் அபிப்பிராயம் கேட்டு எழுதியிருக்கிறார். அங்கே ஒரு கிராமத்தில் ஹரிஜனங்களைக் கிணற்றில் நீர் எடுக்க விடவேண்டு மென்று அவர் வற்புறுத்தி வருகிறார். இதற்காக உபவாசமும் தொடங்கியிருக்கிறார். கிராமத்தினர், 'ஹரிஜனங்களுக் கென்று பிரத்தியேகமாகக் கிணறு ஒன்று வெட்டித் தந்துவிடுகிறோம்; நீங்கள் தொந்தரவு செய்யாதீர்கள்' என்கிறார்களாம். அந்த நண்பர், 'கிராமத்தார் சொல்லுவதை ஏற்றுச் சமாதானமாய்ப் போவதா, அல்லது உபவாசத்தைத் தொடர்ந்து நடத்துவதா?' என்று கேட்டிருக்கிறார்.

இதுவரைக்கும் நாம் சிந்தித்து வந்துள்ள வகையில் ஆலோசனை கூறுவதென்றால், 'உபவாசத்தை நடத்த வேண்டியதுதான்; நிறுத்துவதாவது! புதிய கிணற்றை ஏற்றால், எந்தக் கிணற்றையும் உபயோகிக்க நமக்குள்ள உரிமை என்ன ஆவது?' என்றே கேட்கத் தோன்றும். ஆனால் நான் இப்படி ஆலோசனை கூறப் போவதில்லை. 'புதிய கிணறு கட்டித் தருகிறார்கள் என்றால், அதை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்றே எழுதப் போகிறேன். எதிரில் நெடுஞ்சுவர் நிற்பது தெரிந்தும், அதில் போய் மோதிக் கொள்ளலாமா? ஜாதிப் போராட்டமாக எண்ணி எடுக்கும் நடவடிக்கைக ளெல்லாம் ஜாதி வேற்றுமைகளை மேலும் உறுதிப்படுத்தியேவிடும். ஜாதி வேற்றுமையைச் சற்றும் ஒப்புக்கொள்ளாத ஹரிஜனங்களும் பிறரும் புதிய கிணற்றில் நீர் சேந்தத் தொடங்கும்போது எல்லோரிடையிலும் ஒருமைப்பாடு தோன்றி, மெல்ல மெல்ல அன்பும் வளரும்.

என்னுடைய இந்த ஆலோசனை பலவீனமானது என்று தோன்றலாம். ஆனால் இதில் பலவீனம் சிறிதுமில்லை; நல்ல தெம்பே உள்ளது. இது மனத்தையே மறந்து, மனம் இருப்பதையே கருத்தில் கொள்ளாது கூறும் யோசனை. நாம் வீணாக மனத்தை மனத்தோடு மோதவிடாமல் அதற்கும் மேலே எழுந்து யோசிக்க வேண்டும். அப்போது, 'புதிய கிணறு அமைக்குமாறு செய்வதே நல்லது; அதுவே அன்பின் வளர்ச்சிக்கு உதவும்' என்பது தெரியவரும். இரவு கழிந்ததும் இருள் நீங்குவதைப் போல, அப்போது எல்லா வேற்றுமைகளுமே அகலுவதைக் காண்போம்.

## புலனடக்கம்

எனது நாவை ஒருவாறு வசப்படுத்திக் கொண்டேன். என் எண்ணங்களை வசப்படுத்துவதற்குரிய படிகளை நான் கடக்கவேண்டும்.

விழிப்பு நிலையில் எண்ணங்கள் ஒன்றோடு ஒன்று மோதாதபடி என்னால் பாதுகாக்க முடியும். விழிப்பு நிலையில் தீய எண்ணங்களின் எழுச்சிக்கு மனம் இடம் தராமல் நிற்கிறது என்றும் சொல்வேன். உறக்கத்தில் மனத்தை வசப்படுத்தும் சக்தி குறைந்து நிற்கிறது. அந்த வேளையில் பொல்லாத கனவுகளால் பலதரப்பட்ட எண்ணங்களுக்கு மனம் இரையாகிறது. இந்த நிலையில் உள்ள ஒருவன் முழுப் பிரம்மசாரி ஆகமாட்டான்.

—காந்தியடிகள்

## அவமதித்தவன்

அவமதிக்கப் பெற்றவன் சுகமாய்த் தூங்குகிறான்; சுகமாய் விழித்தெழுகிறான்; சுகமாய் உலாவுகிறான். அவமதித்தவனே இந்த உலகில் அழிந்து போகிறான்.

—மநு

‘கண் கண்ட தெய்வம்’ என எண்ணற்ற இந்தியர் கொண்டாடும் வேங்கடமுடையான் கோயிலின் வைபவம்.

# திருப்பதி விமானம்

எஸ். வேதாந்தம்

திருக்கோயில்களுக்கு யாத்திரை செய்து வருவது ஹிந்து மதத்தின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று. தொன்றுதொட்டு வரும் ஐதிகங்களிலும் அறநூல்களிலும் ஆர்வங்கொண்ட எவரும் தம் வாழ்நாளில் ஒரு முறையாவது திருப்பதி வேங்கடாசலபதியைத் தரிசிக்காமல் இருக்கமாட்டார்.

திருமலைத் தேவாலயத்தின் மாண்பை உலகம் அறியும். ‘அதற்கு ஒப்புமில்லை; உயர்வுமில்லை’ என்பது ஆன்றோர் துணிபு. ‘மனித யத்தனத்தில் செய்யக்கூடிய எல்லாம் செய்தாகிவிட்டது; இனி வேறு வழியில்லை’ என்ற நிலைமை வாழ்வில் ஏற்படும்போது, தம்மையும் அறியாமல் வடக்குத் திக்கு நோக்கித் தம் கரங்களைக் கூப்பி, ‘‘வேங்கடாசலபதியே! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். உன்னைத் தரிசிக்க மலைக்கு வருகிறேன்’’ என்று கதறி, வாழ்விலும் வெற்றி கண்டு, தம் வேண்டுதலையை நிறைவேற்றும் ஆயிரக்கணக்கான மக்களைத் தினந்தோறும் திருமலையில் காண்கிறோம்.

பூலோகவாசிகளுக்காக ஸ்ரீ வைகுண்டத்தையே திருப்பதியாக, விஷ்ணு பகவான் மாற்றிக் கொண்டதாகவும், மானிட உருவில் ஸ்ரீநிவாசராகத் தோன்றி அரசகுமாரியான பத்மாவதியை மணந்து கொண்டதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

விக்கிரக ஆராய்ச்சியின்படி அங்கே எழுந்தருளியிருக்கும் திருவேங்கட மூர்த்தியின் வடிவம் விஷ்ணு-சிவனாய், ஹரி-ஹரனாய் ஒன்றித் திகழும் திருத்தோற்றமே. ஸ்திதி ஸம்ஹார மூர்த்திகள் ஒருருவில் ஒன்றிக் காட்சியளிக்கும் பிரதிமையை வேறெங்கும் காண்பதரிது. எனவே, சைவர் வைஷ்ணவர் இரு மரபினர்களும், ‘எம் கடவுள்; எம் கடவுள்’ என்று ஒருமித்துப் போற்றி வேங்கடாசலபதியைத் தொழுகிறார்கள். அந்தப் பிரதிமையில் நான்கு கரங்களைக் காண்கிறோம். இரண்டு பின்புறம்; மற்றிரண்டு முன்புறம். பின்புற ஹஸ்தம் ஒன்றில் சங்கும், மற்றொன்றில் சக்கரமும் திகழ்கின்றன. முன்புறத்தில் உள்ளவற்றில் ஒன்று அபய ஹஸ்தம்; மற்றது இடுப்பில் பதிந்துள்ளது. இந்த இரண்டு முன் கரங்களிலும் புஜங்க வலயம், அதாவது சர்ப்ப மாலையைக் காண்கிறோம்; இது பரமசிவனின் சின்னம் என்பதை அறிவோம். எனவே, திருப்பதியின் ஏழு குன்றங்களை இரு மதத்தாரும் புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதுவதில் வியப்பு ஒன்றும் இல்லை.

திருப்பதியில் காணும் இயற்கை வனப்பும் புனித நீர்வீழ்ச்சிகளும்



சுவாமி புஷ்கரிணி

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்), சென்னை.

இனிய மலைக்காற்றும் ஆண்டு முழுவதும் மக்களின் மனத்தைக் கவர்கின்றன. எண்ணற்ற மக்கள் இடையருது இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்துக்கு அன்ருடம் திரண்டு வருகிருர்கள். 'நித்தியோற்சவ வைபவத்தைத் திருப்பதியில்தான் காணலாம். மூல விக்கிரகம் சாளக்கிராமத்திஞலேயே உருவானதாகக் கூறுகிருர்கள்.



கீழ்த் திருப்பதி - மலையிலிருந்து யாத்திரிகர்கள் இறங்கி வருகிருர்கள்

பரமசிவன் வசிக்கும் மேரு பர்வதத்தின் பகுதியாய் ஆதியில் திருமலை ஒரு காலத்தில் விளங்கியதாம். ஆயிரம் தலைகள் கொண்ட சர்ப்ப ராஜஞன ஆதிசேஷனுக்கும் வாயு பகவானுக்கும் ஒரு காலத்தில் போர் மூண்டதில் மேரு மலை பிளவுபட்டு ஒரு பகுதி இந்த மாநிலத்தில் விழுந்ததாம். அதுவே திருமலை. விஷ்ணு துயில் புரியும் படுக்கையான ஆதிசேஷனின் ஏழு தலைகளைக் குறிப்பதே இதன் ஏழு குன்றங்கள் என்பது ஹிந்துக்களின் கொள்கை. திருமலைத் தேவாலயம் மிக மிகப் பழமையானது. பல யுக வரிசைகளில் பல பெயர்களுடன் இது விளங்கியதாம். கிருத யுகத்தில் ரிஷபாத்ரி என்றும், திரேதா யுகத்தில் அஞ்சனுசலம் என்றும், த்வாபர யுகத்தில் சேஷாசலம் என்றும், நம் கலியுகத்தில் வேங்கடாசலம் என்றும் இதற்குப் பெயர் ஏற்பட்டதாய்க் கூறுகிருர்கள். மகாபாரத இதிகாசத்தில் புகழ் வாய்ந்த பரீட்சித்து மகாராஜன் இந்த ஆலயத்தைத் தோற்றுவித்ததாகச் சொல்லுகிருர்கள். சிலப்பதிகாரம் இந்த க்ஷேத்திரத்தை ஒரு வைஷ்ணவ க்ஷேத்திரம் என்று குறிப்பிட்டிருக்கிறது.

தென்னுட்டில் ஆட்சி புரிந்து வந்த ராஜவம்சங்கள் இந்தத் தேவாலயத்தில் ஆற்றிய வழிபாடு சாலவும் சிறந்து விளங்கியது. 9-ஆம் நூற்ருண்டில் காஞ்சீபுரத்தில் இருந்துகொண்டு அரசு புரிந்து வந்த பல்லவர்களும், அடுத்த நூற்ருண்டில் தஞ்சைச் சோழ அரசர்களும், 14, 15-ஆம் நூற்ருண்டுகளில் விஜயநகர சாம்ராஜ்ய மகாராஜாக்களும் சிற்றரசர்களும் இந்தத் தேவாலயத்துக்குத் தொண்டாற்றி, ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு எண்ணற்ற காணிக்கைகளும் மானியங்களும் வழங்கினுர்கள். எல்லாருடைய காணிக்கைகளையும் மிஞ்சியவை விஜயநகர அரசர்களின் நன்கொடைகள். விஜயநகர ராஜ்யத்தைக் கீர்த்தியுடன் அரசாண்ட கிருஷ்ண தேவராயர், அவருடைய பத்தினிகள் இவர்களுடைய சிலைகள் இன்றும் திருமலைத் தேவாலயத்தில் திகழ்கின்றன. வேங்கடபதிராயர், அச்சுதராயர், அக்பர் சக்கரவர்த்தியின் புகழ்பெற்ற அமைச்சர் ராஜா தோடர்மல் இவர்களுடைய சிலைகளும் அங்கே காட்சி அளிக்கின்றன. விஜயநகர சாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப் பிறகு தேசத்தின் பல பாகங்களிலும் இருந்த சீமான்களும் சிற்றரசர்களும் தம் வணக்க வழிபாட்டைச் சிரத்தையுடன்



மீண்டும் தங்கம் வேய்ந்த
ஆனந்த நிலய விமானம்

முடிய தாமரைப் புஷ்பம் போன்றது. இந்த விமானத்தின் உச்சியில், பல வித ஆகம பூஜைகள் செய்து புனிதமான கனக கலசம் ஒன்று வைத்திருக்கிறார்கள். தினந்தோறும் வேங்கடேசப் பெருமாளைத் தரிசிக்க வரும் பக்தர்கள் தெய்விகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் இந்த விமானத்தையும் தரிசிக்கத் தவற மாட்டார்கள். குறிப்பாக, காலையில் குளிர்ந்த காற்றுடன் வீசும் சூரிய ஒளியிலும் மாலையில் சூரிய அஸ்தமன சமயத்திலும் இந்த விமானத்தை நோக்கினால், நம் மனத்தில் சொல்ல முடியாத பரவசம் ஒன்று ஏற்படுகிறது. விமானத்தின் வடக்குப் பக்கத்திலுள்ள

செலுத்தி எல்லையற்ற மானியங்களைத் தேவாலயத்துக்கு வழங்கினார்கள். மகாராஷ்டிர தளபதி ரகோஜி போன்ஸ்லே என்னும் பரம பக்தர் இந்தத் தேவாலயத்துக்கு நிலையான நிர்வாக அமைப்பை நிறுவினார். மைசூர், ஹைதராபாத், கட்வால் இந்தச் சம்ஸ்தானங்களின் மன்னர்களும் ஏராளமான மானியங்களை வழங்கியிருக்கிறார்கள்.

வேங்கடேசப் பெருமானின் கோயில் கர்ப்பக்கிருகத்தின்மீது கம்பீரமாக மின்னிக்கொண்டிருக்கும் தங்க ஆனந்த நிலய விமானம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. இந்தியாவிலேயே பெருமையோடு விளங்கும் நான்கு தங்க விமானங்களில் இது முதல் இடம் பெறுகிறது. ஸ்ரீரங்கம் பெரிய கோயில், மதுரை அழகர் கோயில், சிதம்பரம் நடராஜர் ஆலயம் இவற்றில் மற்ற மூன்று விமானங்களும் இருக்கின்றன. திருப்பதி விமானத்தின் உயரம் 40 அடி. இதன் உருவம்

விமான வேங்கடேசுவரரை, வியாச மதத்தை ஸ்தாபித்த வியாச தீர்த்தர் என்ற பக்திமான் பிரதிஷ்டை செய்ததாகக் கூறுகிறார்கள். சரித்திரத்தை நோக்கும்போது, 'பொன் வேய்ந்த பூபதி' என்று பாரதம் போற்றும் ஜயவர்ம சுந்தர பாண்டியர்தான், திருப்பதி, ஆனந்த நிலய விமானத்துக்குப் பொன்வேய்ந்தார் என்று புலப்படும். வீரத்தினால் வென்ற பொருளைப் பக்தியினால் காணிக்கையாகச் செலுத்தினார் இந்தத் தமிழ் மன்னர். பிற்காலத்தில் பதின்மூன்றாவது நூற்றாண்டில் விஜயநகர அரசர்களில் ஒருவரான சாளுவமங்கித் தேவரும் (கி. பி. 1359), அதற்குப் பிறகு சாளுவ நரசிம்மர் காலத்தில் கோடி கன்னிகாதானம் கும்பகோணம் தாதாசாரியார் என்ற பக்திமானும் இந்த விமானத்தைப் பழுது பார்த்து மீண்டும் தங்க முலாம் பூசினார்கள். கடைசியாக, கி.பி. 1518-இல் இந்தியாவின் தேவா



கீழ்த் திருப்பதி - மலையடிவார முன்வாசல்

லயச் சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயர், இந்த விமானத்துக்கு மீண்டும் பொன்வேய்ந்தார். பல போர்களில் தாம் பெற்ற வெற்றிகளுக்குக் காணிக்கையாகப் பல தடவை இந்தப் புண்ணியவான் 'துலாபுருஷதானம்' என்ற பெயரால், தம் எடைக்கு எடை தங்கம் அளித்திருக்கிறார். இந்த இருபதாம் நூற்றாண்டில், மேல்நாட்டு நாகரிகத்தில் மயங்கிப் பழைய கலாசாரத்தையும் தெய்விகத்தையும் மக்கள் அழியவிட்டுவிட்டார்களோ என்று தோன்றும் இந்த நாளில்கூட, ''எங்கள் முன்னோர்கள் அறிவாளிகள். அவர்கள் செய்த எந்த நல்ல காரியத்தையும், தெய்விக சக்தி வாய்ந்த பாரதத்தின் புதல்வராகப் பிறந்த ஒரு காரணத்துக்காகவாவது நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம்'' என்று எடுத்தியம்புவது போல், அறுநூறு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த விமானத்தை மீண்டும் பொன் வேய்ந்து, சரித்திரத்தில் நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிட்டார்கள் இந்திய மக்கள். ஒரு வித்தியாசம்: முன்பு முடி அரசர்கள் பொன் வேய்ந்தார்கள்; இன்று குடி அரசன் ஒவ்வொருவனும் தன்னால் இயன்ற சிறு காணிக்கைகளின் மூலம் தன் கடமையை நிறைவேற்றிவிட்டான். நம் முன்னோர்களையும் மிஞ்சிவிடுவது மாதிரி அவர்கள் பூசியதைப்போல் இரண்டு பங்கு அதிகத் தங்கத்தை இப்போது இந்த விமானத்தில் பூசியிருக்கிறார்கள். நிகழும் 1958-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ஆம் தேதி, அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணதேவராயர் பொன் வேய்ந்த அதே நாள் அதே நாழிகையில் நடந்த கும்பாபிஷேகத்தின்போது ஒவ்வோர் இந்தியனும், ''என் முன்னோருக்கிருந்த கடமை உணர்ச்சியில் நான் பின்வாங்கவில்லை'' என்று பெருமை கொண்டிருப்பான் என்பதில் ஐயமில்லை.

வடநாடு தென்னாடு, ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லாமல், இறைவனின் படைப்பில் எல்லாரும் சகோதர சகோதரிகளே, எல்லாரும் சமமே என்று எடுத்துக்காட்டும் க்ஷேத்திரம் திருப்பதி ஒன்றுதான். இதற்கு அங்கே தினம் காஷ்மீரத்திலிருந்து குமரி வரையில் பாரதத்தின் பல பாகங்களிலிருந்தும் பல தரப்பட்ட யாத்திரிகர்கள் விஜயம் செய்வதே சான்றாகும். கவலைகளால் மன அமைதி இழந்தவருக்கு மகிழ்ச்சியை ஊட்டி வாழ்வில் நம்பிக்கையைக் கொடுக்க ஓர் ஆகாச கங்கையும், வியாதியால் அல்லல் படுவோ

ருக்கு அந்தக் குறையைப் போக்க ஓர் ஆழ்வார் தீர்த்தமும், வறுமையால் வாடுவோருக்கு உதவி புரிய வேங்கடேசப் பெருமானும், காதலால் வாடுவோருக்கு மணம் புரிவிக்க ஓர் அலமேலுமங்காபுரமும் சேர்ந்தாற்போல் இந்த க்ஷேத்திரத்தில் அமைந்திருக்கின்றன. ஸ்ரீ வேங்கடேசப் பெருமானுக்கு ஸ்ரீ ராமநுஜரே பெரும் பணி புரிந்தார்.

மூவாயிரம் ஜனத் தொகையைக் கொண்ட இந்தச் சிறிய நகரத்தில் தினம் ஒன்றுக்குச் சராசரி ஏழாயிரம் பேர் வெளியூர்களிலிருந்து விஜயம் செய்கிருர்கள். புரட்டாசிச் சனிக்கிழமைகளிலும் திருவிழாக் காலங்களிலும் பத்தாயிரம் பேர்களுக்குமேல் விஜயம் செய்கிருர்கள். அந்த யாத்திரிகர்களுக்கெல்லாம் நவீன வசதிகளும் சமையல் பாத்திரங்களும் தங்குவதற்கு இடமும் மலைக்குப் போவதற்குப் பஸ்வசதியும் அளிக்கும் காரியத்தை மிகவும் திறம்படத் தேவஸ்தானத்தார் கவனித்து வருகிருர்கள். திருப்பதி ஒரு தனி ராஜ்யமோ என்று சொல்லும்படி ரஸ்தாப் போக்குவரத்து, மின்சாரம், சிற்றுண்டிச்சாலை, தங்கும் இடங்கள், ஆஸ்பத்திரிகள், கூட்டுறவுப் பண்டகசாலைகள், பசு வளர்க்கும் கோவர்த்தன சாலைகள், ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், உயர்தரப் பள்ளிக்கூடங்கள், கலாசாலை, சர்வகலாசாலை, வேத சாஸ்திரப் பள்ளிக்கூடம், சம்ஸ்கிருத காலேஜ் இப்படிப்பட்ட பல ஸ்தாபனங்களையும் தேவஸ்தானத்தாரே, வேங்கடேசுவரரின் வருமானத்திலிருந்து திறம்பட நிர்வகித்து வருகிருர்கள்.

'தெய்விகமும் கலாசாரமும் இல்லாவிட்டால் இந்தியாவே இல்லை' என்ருர் மேல்நாட்டு அறிஞர் ஒருவர். 'எந்த ஓர் இடம் பெருமையையும் நம்பிக்கையையும் அழகையும் தெய்விகத்தையும் ஒருங்கே பெற்றிருக்கிறதோ அதுதான் என்னுடைய வாசஸ்தலம்' என்று பகவான் கூறுவதே போல, திருப்பதி நமக்குக் காட்சி அளிக்கிறது.

## சிங்கக் குகையில்

சமீபத்தில் லண்டனில் ஓர் ஆங்கிலேயன் உயில் எழுதித் தாக்கல் செய்தான். அதில் கண்டிருந்த ஒரு ஷரத்து இது: ''என் மனைவியின் கல்லறையிலேயே என்னையும் புதையுங்கள். அதன்மீது சின்னமாக நிறுத்தும் கல்லில் 'சிங்கக் குகையில் டானியேல்' என்ற வாசகத்தைப் பொறித்துவிடுங்கள்.''

—'ட்ரஸ்ட்ஸ் அண்ட் எஸ்டேட்ஸ்'

## முயன்று பாருங்கள்

அறிவுத் துறைகளில் வேலை செய்வோருக்கு, பிரிட்டிஷ் உடற்கூற்று நிபுணர் ஹ்யூஸ் பர்ட்வாட்டர் என்பவர் ஒரு யோசனை சொல்லுகிருர். அவர்கள் தங்கள் நாசித் துவாரங்களை அடிக்கடி 'மஸாஜ்' செய்துகொள்ள வேண்டுமாம். அப்படிச் செய்துகொண்டால், ரத்தம் மூளைக்குப் பாயுமாம். அதனுல் சிந்தனையிலே தெளிவு ஏற்படுமாம்.

—'டாகென்ஸ் நையேட்டர்'

# மாறிய நடை

**எல்லார்வி**

கும்பகோணம் ரமணாசிரமத்திலே (1931-இல்) உற்சவம். கடைசி நாளன்று பிரபல மிருதங்க வித்துவான் பழநி முத்தையா பிள்ளை அவர்கள் (மிருதங்க வித்துவான் பழநி சுப்பிரமணிய பிள்ளை அவர்களுடைய தகப்பனார்) உற்சவத்திலே கலந்துகொள்ள வந்தார். இது போன்ற உற்சவங்களில் சங்கீத மேதைகள் இசைக் கைங்கரியத்தில் வலிய ஈடுபடுவது உண்டு. முத்தையா பிள்ளை அவர்களும் அந்த நோக்கத்துடனேதான் வந்தார்.

ஆனால் அவருடைய வாசிப்புக்குப் பாடக் கூடியவர்களின் கச்சேரிகள் முன் தினங்களில் நிறைவேறிவிட்டன. ஆனால் வாசிக்காமலே திரும்பிச் செல்ல, பிள்ளை அவர்களுக்கு மனம் இல்லை. திருவீழிமிழலை கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்களைப் பாடும்படி கூறினார். அவர் முந்தின நாள் கச்சேரி செய்துவிட்டார். உற்சவ ஈடுபாட்டினால் மறுநாளும் அங்கே தாமதித்திருந்தார். பிள்ளை அவர்களின் வாசிப்புக்குப் பாடுவதே கடினம். அதிலும் முன்னாள் கச்சேரி செய்த களைப்பு வேறு. இருந்தும் மரியாதைக்குரிய பெரியவரின் சொல்லைத் தட்டமாட்டாமல் இசைந்தார்.

கச்சேரி ஆரம்பமாயிற்று. எவ்வளவுதான் சிரமம் இருந்தாலும் மேடைக்கு வந்த பிறகு, பின்வாங்க முடியுமா - அதிலும் முத்தையா பிள்ளை அவர்கள் அதி உற்சாகத்துடன் வாசிக்கிறபோது? கல்யாணசுந்தரம் பிள்ளை முழுத் திறமையையும் உபயோகித்து உழைத்து மிக நன்றாகவே பாடினார். விவகாரபூர்வமான கச்சேரி; மேதைகள் கேட்டு இன்புறும் 'கிளாஸிக்கல்' கச்சேரி.

கடைசிக் கட்டம்: திருப்புகழ். 'நிராமய புராதன' என்ற அருமையான திருப்புகழைக் கல்யாணசுந்தரம் பிள்ளை 'கண்ட நடை'யிலே பாடிக்கொண்டே போனார்; முத்தையா பிள்ளை அவர்கள் அழகிய தத்தகாரங்களை அமைத்துத் 'திஸ்ர நடை'யில் வாசித்துக்கொண்டே போனார். ஒவ்வோர் அடி முடிவடைகிறபோதும் சொல்லுக்கும் தாளத்துக்கும் ஓர் அட்சரம் இடித்துக்கொண்டே வருகிறது. அவரோ பெரியவர். இதை எப்படி அறிவிப்பது? பொறி பறக்கச் செயல் ஆற்றிக்கொண்டிருக்கையிலே, அறிவிக்க வாய்ப்புத்தான் ஏது? கல்யாணசுந்தரம் பிள்ளை மிகவும் சிரமப்பட்டார். ஆறு அட்சரத்துக்குள் ஐந்து அட்சரத்தைப் புகுத்தி எப்படியோ காலப் பிரமாணத்தைச் சரிக்கட்டிச் சரிக்கட்டிப் பாடிக்கொண்டே போனார்.

சபையைப் பார்த்தபடி அதி உற்சாகத்துடன் வாசித்துக்கொண்டே வந்த முத்தையா பிள்ளை அவர்கள் கடைசி அடியிலே விஷயத்தை உணர்ந்துகொண்டார். உடனே தீயிலே கால் வைத்தவர்போல், ''ஆகாகா!'' என்றார். அவருடைய முகத்திலே இருந்த உற்சாகம் மங்கிவிட்டது.

கச்சேரி முடிந்த பின்பு எல்லோரும் பேசிக்கொண்டிருக்கையில், முத்தையா பிள்ளை அவர்கள் கல்யாணசுந்தரம் பிள்ளையிடம், ''நான் கவனியாது போய்விட்டேன், தம்பி. அதனால் வீணாக நீ அளவு கடந்த சிரமத்தை அநுபவிக்க நேர்ந்ததே!'' என்று அங்கலாய்த்தார்.

இரவுச் சாப்பாட்டுக்கு மேல் ஜாகையிலே அனைவரும் படுக்கச் சென்றார்கள். முத்தையா பிள்ளை அவர்களுக்கு மனத்தில் குறை; சஞ்சலம்; உறக்கம் வருகிற வழியாக இல்லை.

திடீரென்று எழுந்து உட்கார்ந்தார். ''தம்பி, இங்கே வா'' என்றார். 'இன்னும் என்ன?' என்ற கவலையுடன் அவர் அருகே

கல்யாணசுந்தரம் பிள்ளை வந்தார். ''அதோ அங்கே கஞ்சிரா இருக்கிறது; எடு'' என்றார் முத்தையா பிள்ளை.

கல்யாணசுந்தரம் பிள்ளை, ''எல்லாரும் தூங்குகிற நேரம் ஆயிற்றே'' என்று மெல்லச் சொல்லிக்கொண்டே, கஞ்சிராவைக் கொண்டு வந்து கொடுத்தார்.

முத்தையா பிள்ளை, ''பரவாயில்லை. இப்படி உட்கார். உட்கார்ந்து அந்தத் திருப்புகழைக் 'கண்ட நடை'யிலே மறுபடியும் பாடு'' என்றார்.

கல்யாணசுந்தரம் பாடினார்; முத்தையா பிள்ளை அற்புதமாய்க் கஞ்சிரா வாசித்தார். ''இப்படி இருக்கவேண்டிய திருப்புகழ் எப்படி ஆகிவிட்டது!'' என்றார். அதன் பிறகுதான் அவருக்கு நிம்மதியாக உறக்கம் வந்தது.

பின்னால் ஒரு சமயம் நாயனா பிள்ளை அவர்களிடம் முத்தையா பிள்ளை இந்த விவரத்தைக் கூறி, ''தம்பி எப்படியோ சமாளித்து விட்டது'' என்றார்.

நாயனா பிள்ளை புன்முறுவலுடன், ''இல்லை என்றால் நம்மிடம் தயாரானதற்கு என்னதான் அடையாளம்?'' என்றார்.

## ராமனும் சீதையும்

ராமாயணக் கதை எல்லாருக்கும் தெரியும். ஆனால் இந்தியாவெங்கும் அங்கங்கே உள்ள மக்கள் ராமனையும் சீதையையும் தங்கள் வாழ்க்கையோடு பிணைத்துப் புது முறையில் கண்டார்கள். ராமனை அரசகுமாரனாகவோ கடவுளாகவோ அவர்கள் கருதவில்லை.

குஜராத்தில் மக்கள் பாடும் நாடோடிப் பாட்டு ஒன்றில், ராமனும் சீதையும் இல்லறத்தை நடத்தும் சாதாரண தம்பதிகளாக இருக்கிறார்கள். ஒரு நாள் லவங்கத் தடியால் ராமன் சீதையை அடித்துவிட்டான். சீதையும் பூப்பந்தினால் அவனை அடித்தாள். அவள் கோபத்துடன், ''ராமா, உன் தொல்லையை என்னால் பொறுக்க முடியவில்லை. நான் வேறொருவர் வீட்டுக்குப் போய் இயந்திரத்தில் மாவரைத்துப் பிழைத்துக்கொள்கிறேன்'' என்றாள்.

''நீ மாவரைக்கச் சென்றால் நான் இயந்திரமாக உன்னிடம் வருவேன்'' என்கிறான் ராமன்.

''சரி, நான் உரலில் நெல்லிடிக்கப் போகிறேன்.''

''நான் உரலாகிவிடுவேன்.''

''நான் குளத்து மீனாகிவிடுவேன்.''

''அப்படியானால் நான் நீரலையாவேன்.''

''நான் வானத்து மின்னலாவேன்.''

''அப்போது நான் முகிலாவேன்.''

''நான் சாம்பலாய்ப் போகிறேன்.''

''சாம்பல் பூசும் சாமியாராக நான் மாறிவிடுவேன்'' என்று ராமன் சொன்னதுமே, சீதைக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவள் நாணத்துடன் உள்ளே போய்விட்டாள்.

—ஜுகமந்தர் தாயல் (ஜீவன ஸாஹித்ய)

# சம்ஸ்கிருதம் - ஓர் உலக சக்தி

காகாஸாஹப் காலேல்கர்

இந்தக் கட்டுரையின் ஆசிரியர், குஜராத் வித்தியாபீடத்தில் பேராசிரியராக விளங்கியவர்; இலக்கியத்தைப் பொறுத்தவரையில் மகாத்மா காந்தியடிகளுக்கு ஆலோசகராக இருந்தவர்; காந்திஜியின் 'நவஜீவன்' பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தவர்; காந்தி வழியைப் பின்பற்றுகிறவர்; இன்று காந்தி மெமோரியல் மியூசியத்தின் டைரெக்டராகக் கடமையாற்றுகிறவர். இவருடைய தாய்மொழி மராட்டி; ஆயினும், குஜராத்தியிலும் ஹிந்தியிலுங்கூட இவர் புகழ் பெற்ற எழுத்தாளர். பழங்காலத்து முனிவரைப் போன்ற சிந்தனையாளர். பாரத நாடு முழுவதும் யாத்திரை செய்து இந்த நாட்டுத் தெய்விகக் காட்சிகளை அழகாக எழுத்திலே சித்திரித்தவர். சம்ஸ்கிருத மொழியைப்பற்றிய இவருடைய கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவிக்கிறது இந்தக் கட்டுரை.

சம்ஸ்கிருதம், இந்திய மொழிகள் அனைத்தையும் பிணைக்கும் பொதுச் சக்தியாக விளங்குகிறது. உண்மையில் பார்க்கப்போனால் அது பாரத நாட்டிலுள்ள மொழிகளோடு மட்டுமன்றி, வெளிநாட்டு மொழிகளோடும் தோழமை கொண்டிருக்கிறது.

உலகத்து மக்கள் பேசும் மொழிகள் யாவற்றையும் நான் பயின்றிருப்பதாகப் பெருமை கொள்ள முடியாது; ஆயினும், உலகிலே எந்த மொழியும் கடந்த காலத்தில் சம்ஸ்கிருதத்தின் அளவுக்கு, மக்களின் ஈடுபாட்டையும் அன்பையும் பாராட்டையும் பெற்றதில்லை என்பதைத் துணிந்து கூறலாம். நவீன காலத்தில் சம்ஸ்கிருதம் பயிலும் பழக்கம் உலகம் எங்கும் பரவியிருக்கிறது. பலவேறு நாடுகளிலுள்ள மொழிவல்லுநர்கள் சம்ஸ்கிருதத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அந்த மொழியின் இலக்கணமும் அமைப்பும் விஞ்ஞான முறையில் திகழ்வதைப் போற்றுகிறார்கள். ஆரியர்களின் அறிவு இயக்கத்துக்கு அழியாச் சான்றாகவும் ஞானக் கருவூலமாகவும் பொலியும் சம்ஸ்கிருதத்தில் அதிக கவனம் செலுத்துவதிலே, உலகெங்குமுள்ள மனத்தத்துவ அறிஞர்களும் தத்துவஞானிகளும் முனைந்திருக்கிறார்கள்.

பிராகிருத மொழிகள் பலவற்றுக்கு மெருகு கொடுத்து, அவற்றுக்கெல்லாம் பொதுவான ஓர் அழகிய மொழியாக, ஆரியர்கள் தமது பெருமுயற்சியினால் சம்ஸ்கிருதத்தைத் தோற்றுவித்தார்கள் என்பது சரித்திர உண்மை; ஆயினும், அதனைத் தேவபாஷை என்று கூறுவது விந்தையாகத்தான் இருக்கிறது. சம்ஸ்கிருதம் என்ற பெயரே, 'செம்மையாக்கப்பெற்ற மொழி' என்பதைக் குறிக்கிறது. ஆரியப் பண்பாடு உயர்ந்த நிலையில் இருந்தபொழுது, மொழிகள் அனைத்தையும் இணைக்கும் பொது முயற்சியாக, வெற்றிகரமான மொழியாக உருவெடுத்தது சம்ஸ்கிருதம் என்பதை இந்தப் பெயர்

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: செப்டம்பர் '58), சென்னை-1.

நிரூபிக்கிறது. இன்று உலகப் பொதுமொழியாக எஸ்பரன்டோவை ஆக்க முயன்றுவருகிறார்கள்; வெற்றியடைந்த ஓர் எஸ்பரன்டோவாக விளங்கியது சம்ஸ்கிருதம்.

தெய்வநதியான கங்கையைப் போன்றது சம்ஸ்கிருதம். கங்கை, மனிதன் உண்டாக்கிய ஆறு. இமய மலைத் தண்ணீரை உத்தரப் பிரதேசம், பிஹார், வங்காளம் ஆகிய ராஜ்யங்கள் வாயிலாகக் கடலுக்குக் கொண்டு சென்று, சகரனுடைய மக்களின் சாபத்தைத் தீர்க்க மூன்று தலைமுறை மன்னர்கள் இந்தியாவில் பாடுபட்டார்கள்.

பழைய பாரதத்து மொழிகள் யாவும் சம்ஸ்கிருதச் சொல்வளத்தில் பங்கு கொண்டு அதைச் செழிப்பாக்கியிருக்கின்றன. சம்ஸ்கிருத மொழியின் வளைந்து கொடுக்கும் தன்மையும் வல்லமையும் வியக்கத் தக்கவை. அதன் இலக்கணமும் மொழியியலும் ஆரிய மூளையின் உன்னதச் சாதனைகள். இந்தியாவிலுள்ள பலவேறு இனங்களின் சிந்தனைகளும் சாதனைகளும் அடங்கிய ஒப்பற்ற கருவூலமாகச் சம்ஸ்கிருத இலக்கியம் விளங்குகிறது.

மொழியியல், இலக்கணம், ஒலியியல், மொழிவளர்ச்சிச் சரித்திரம், பொருளடியாக வெவ்வேறு மொழிகளிடையே உள்ள ஒருமைப்பாடு ஆகியவை யாவும், சம்ஸ்கிருதத்துக்குத் தாம் கடமைப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்கின்றன. பார்க்கப்போனால், சம்ஸ்கிருதத்தைக் கற்ற பின்புதான், உலகத்துப் புலவர்கள் மொழிப்பயிற்சி விஷயத்தில் தெள்ளிய பார்வையையும் நேர்வழியையும் பெற்றார்கள் என்பது உண்மை. மொழியியலைப் பொறுத்தவரையில் கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த மிகப் பெரிய ஆராய்ச்சி என்னவென்றால், சம்ஸ்கிருதத்துக்கும், பெஹலவிக்கும், ஆவெஸ்தாவுக்குமிடையே ஒற்றுமை இருப்பதை மட்டும் கண்டதல்லாமல், சம்ஸ்கிருதத்துக்கும் லத்தீனுக்கும் கிரேக்க மொழிக்குமிடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதையும் கண்டு பிடித்ததுதான். இன்று, ஐரோப்பாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் வழங்கும் எல்லா மொழிகளையுமே ஒப்பிட்டுப் பயிலும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. வட யூரேஷிய மொழிகளுக்கும் சம்ஸ்கிருதத்துக்கு மிடையே முக்கிய ஒற்றுமைகள் இருப்பதாகவும் தெரியவருகிறது. எனவே, யூரேஷிய மொழிகள் யாவற்றையும் பிணைக்கும் பொதுச் சக்தியாக இருக்கிறது சம்ஸ்கிருதம். மங்கோலிய இனத்து மொழிகளை இதற்கு ஒருகால் விலக்காகக் கூறலாம்.

இந்தியாவில், பெரியவையும் சிறியவையுமான எல்லா மொழிகளையும் ஒன்று சேர்த்துப் பிணைத்து, சம்ஸ்கிருதம் அவற்றின் மீது அரசு செலுத்தியிருக்கிறது. வங்காளி, அஸ்ஸாமிய மொழி, உடியா, நேப்பாளி, மராட்டி, குஜராத்தி, ராஜஸ்தானி, ஸிந்தி, பஞ்சாபி, காஷ்மீரி, ஹிந்தியும் அதன் பிரதேச மொழிகளும்-ஆகிய வட இந்திய மொழிகள் யாவுமே சம்ஸ்கிருதத்திலிருந்து நேரே தோன்றியவை; அதன் பெண்கள்.

தென்னாட்டிலுள்ள திராவிட மொழிகளிலுங்கூடச் சம்ஸ்கிருதத்தின் பேராற்றலைக் காணலாம். சொல்வளத்தில் மட்டுமன்றி முக்கிய அமைப்பிலுங்கூட இந்தத் திராவிட மொழிகள் சம்ஸ்கிருதக் குடும்பத்தைச் சேர்ந்தவையே என்று ஒரு நாளைக்கு ஆராய்ச்சி தெரிவிக்குமானால், நாம் வியப்புற வேண்டியதில்லை.

திராவிட இனத்தைச் சார்ந்த மொழிகளுக்குள், தென்கோடியிலுள்ள மொழியான மலையாளத்தில் ஏராளமான சம்ஸ்கிருதச் சொற்கள் இருப்பது குறிப்பிடத் தக்கது. மலையாளத்தில் சம்ஸ்கிருதச் சொற்களும் திராவிடச் சொற்களும் தாராளமாகவும் அழகாகவும் இழைந்து, பவழமும் முத்தும் கோத்த மாலைபோல மணிப்பிரவாள நடை (மணிமிடை பவழம்) அமைந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

அரேபிய-பார்சிய லிபி கொண்ட உர்தூ மொழியிலும் சம்ஸ்கிருத

ஆதாரமுள்ள சொற்கள் நிறைய இருக்கின்றன. உர்தூவிலுள்ள வினைச்சொற்கள் யாவும் சம்ஸ்கிருத தாதுக்களிலிருந்து தோன்றியவையே. இதைக் கண்டு நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், மொத்தத்தில் பர்சிய மொழி, சம்ஸ்கிருதத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட தங்கையாகவே இருக்கிறது.

இன்று நாம் ஒரு பொது மொழியை வளர்த்து, அதனால் புதிய தேசீய ஒற்றுமையையும் வல்லமையையும் உண்டாக்க வேண்டும் என்று பேசுகிறோம். இது பாராட்டத் தக்க முயற்சி; தீவிரமாக முனையவேண்டியதுதான். எல்லாவற்றிலும் ஊடுருவிய சம்ஸ்கிருதம் ஏற்கனவே இந்த ஒற்றுமையைச் சாதித்திருப்பதனால், அதைக் கொண்டு நம் செயலை எளிதாக்கிக் கொள்ளலாம்.

இந்தியாவிலுள்ள பக்தப் பெரியார்களும் கவிகளும் சம்ஸ்கிருதத்தில் வேதம், இதிகாசம், நாடகம், வேதாந்தம் முதலிய விஷயங்களை நன்கு பயின்ற பின்பே தம்முடைய நூல்களைத் தமது சொந்த மொழியில் மக்களுக்கு விளங்கும்படி எளிய நடையில் எழுதினார்கள். சம்ஸ்கிருத மூல நூல்களிலுள்ள இனிமையும் செழிப்பும் குன்றாதபடியே அவர்கள் அவற்றைத் தழுவினார்கள்.

ஒற்றுமைக்குரிய பல அம்சங்களை ஆராய்ந்து பார்க்கையில், முஸ்லிம்களின் ஆட்சிக் காலத்தில் பர்சிய மொழி இந்தியப் பண்பாட்டுக்கு ஆக்கம் தந்திருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இந்தியாவில் ஆங்கில ஆட்சி சிறிது காலமே இருந்தபோதிலும், ஆங்கில மொழியும் இலக்கியமும் நமக்குத் தந்துள்ள பொது அறிவை நாம் புறக்கணிக்க முடியாது. இவையெல்லாம் ஓரளவு ஒற்றுமையை உண்டாக்கின; ஆயினும், சம்ஸ்கிருத மொழியும் இலக்கியமும் பாரத நாட்டின் வாழ்விலும் நம்பிக்கைகளிலும் உண்டாக்கியுள்ள ஒற்றுமை பிரம்மாண்டமானது. சம்ஸ்கிருத மொழியினால் இந்திய மொழிகளுக்குக் கிடைத்துள்ள ஒற்றுமையையும் வளத்தையும் நுட்பத்தையும் கொண்டு பார்க்கும் போது, மற்றுமுள்ள வேறு கருவிகளினால் விளைந்த ஒற்றுமை ஏதுமே இல்லை எனலாம்.

சம்ஸ்கிருத மொழியும் இலக்கியமும் இந்தியப் பண்பாட்டுக்கு அடிப்படைப் பாறையாகவும் எழிற் கட்டிடமாகவும் என்றுமே இருந்து வருகின்றன; இனியும் இருக்கும். ஆதிகாலத்தில் வந்த கிறிஸ்துவப் பாதிரிமாருங்கூட, பைபிளைச் சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தாலன்றித் தங்கள் முயற்சி பரவாது என்பதை உணர்ந்தார்கள். பர்சிய இலக்கியத்திலும் சிந்தனையிலும் மணியாகத் திகழும் உமர் கயாமின் ருபையாத்துகள் சம்ஸ்கிருதத்தில் இருப்பதைக் காணலாம். எந்த இந்திய மொழியிலும் தோன்றும் உன்னதமான கருத்துக்கள் உடனே சம்ஸ்கிருதத்தில் உருப் பெற்று வந்தன; எது மூலக்கருத்து, எது மொழிபெயர்ப்பு என்று கண்டு பிடிக்க இயலாதபடி அவை உருவாயின.

பர்சிய - அராபிய மொழிகளில் இருந்த ஆட்சி முறைக்குரிய சொற்களையும் ராணுவத்துறைச் சொற்களையும் ஒரு பண்டிதர் சம்ஸ்கிருத சுலோகங்களில் அமைத்தார். சத்திரபதி சிவாஜி அந்த நூலுக்கு ஆதரவு கொடுத்தார். 'ராஜ்ய வ்யவஹார கோசம்' என்று அதற்குப் பெயர். சமீப காலத்திலுங்கூட இந்த ஆர்வம் இருந்திருக்கிறது. டிபரன்ஷியல் அண்டு இன்டெக்ரல் கால்குலஸ் அடங்கிய நவீன கணிதத்தைப்பற்றிச் சம்ஸ்கிருதத்தில் ஒரு புத்தகத்தை நான் பார்த்திருக்கிறேன். நம்முடைய இந்தக் காலத்திலும், சம்ஸ்கிருதத்தில் எல்லாவற்றையும் நிலைக்கச் செய்ய வேண்டும் என்ற ஆசை மங்கிவிடவில்லை. மகாத்மா காந்தியடிகளின் சரித்திரமும் சிந்தனைகளும் அழகிய சம்ஸ்கிருத காவியமாக உருவெடுத்திருப்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம். ஆகவே, பலர் நம்மிடம் சொல்வது போல, சம்ஸ்கிருதம் செத்துப் போன பாஷையல்ல; அது இன்று

பேசும் மொழியாக இல்லை என்று சொல்லலாம்.

கத்தோலிக்கக் கிறிஸ்துவத்தின் வாயிலாக ஐரோப்பாவில் சமய வாழ்வையும் பண்பாட்டையும் லத்தீன் மொழி இணைத்தது; அது போலவே இந்திய மக்களின் சமய வாழ்வு அனைத்தையும் ஒன்றுபடுத்திப் பண்பாட்டில் ஐக்கியத்தைச் சம்ஸ்கிருதம் உண்டாக்கியது. சநாதனமான வைதிக இலக்கியம் மட்டுமன்றி, பௌத்தர்கள், சமணர்கள் ஆகியவர்களின் கருத்துக்களும் சாத்திரங்களும் சம்ஸ்கிருதத்திலேயே அமைந்து நிரந்தரமாக நிலவுகின்றன. சாக்த நூல்களும் வைணவ பக்தி நூல்களும் சம்ஸ்கிருதச் செய்யுளுருவில் இருக்கின்றன.

அண்டை நாடுகளில் சம்ஸ்கிருதத்தின் ஆற்றல் எப்படிப் பரவியிருக்கிறது என்று பார்ப்போம். முகலாய ஆட்சி உச்ச நிலையில் இருந்த காலத்தில், பர்சியப் புலவர்கள் சம்ஸ்கிருத இலக்கியத்தைப் பர்சிய மொழியில் ஆக்கினார்கள். இன்று ருஷியர்கள் மகாபாரதத்தைத் தங்கள் மொழியில் எவ்வளவு உற்சாகத்தோடு ஆக்குகிறார்களோ, அத்தகைய உற்சாகத்தோடு அந்தக் காலத்தில் செயலாற்றினார்கள்.

சமீப காலத்தில் ஈரான் சர்க்காரும் துருக்கிச் சர்க்காரும் வேண்டிக் கொண்டதனால், இந்தியப் பண்பாட்டுறவுக் குழுவினர் அந்த நாடுகளுக்குச் சம்ஸ்கிருதப் புலவர்களை அனுப்பியிருக்கிறார்கள். அந்த நாட்டினர் இந்தியாவின் பழைய இலக்கியங்களைச் சம்ஸ்கிருத வாயிலாகக் கற்க மிகவும் ஆவலோடு இருக்கிறார்கள்.

சம்ஸ்கிருதத்திலுள்ள இந்திய மனத்தத்துவ நூல்களும் தரிசன சாத்திரங்களும் ஐரோப்பாவில் சமூகத் துறையிலும் தத்துவத் துறையிலும் சிந்தனை மாற்றத்தை விளைவித்திருக்கின்றன. இந்தியாவில் வழிவழியாகக் கோயில்கள், விக்கிரகங்கள், வழிபாட்டு முறைகள், நகர அமைப்புக் கலை, இசை, நாடகம், நடனம், ஓவியம் முதலிய கலைகள் எவ்வாறு வளர்ந்து வந்திருக்கின்றன என்பதைச் சம்ஸ்கிருத மூல நூல்களைக் கொண்டே பயின்று அறியும் ஆசை உலகெங்கும் வளர்ந்துகொண் டிருக்கிறது.

சம்ஸ்கிருத மொழியை முறையாகப் பயில ஆரம்பித்துள்ள வெளி நாடுகளில், முன்பு கனவிலும் காணாத பல புதிய துறைகளில் அமைதியான மாற்றம் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. சம்ஸ்கிருத மொழியின் வல்லமையும், வளமும், ஊடுருவும் தன்மையும் இன்றும் நிரம்ப இருக்கின்றன. இந்த வகையில் அதைத் தேவபாஷை என்று மதிப்பது பொருத்தமே. உலகப் பண்பாட்டுக்குரிய இலக்கியமாகவே சம்ஸ்கிருத இலக்கியம் விளங்குகிறது.

ஆனால், சம்ஸ்கிருதம் செம்மையான முழுவடிவைப் பெற்ற அந்தக் கணத்திலேயே, வளரும் நிலையை இழந்ததனால் இறந்த மொழியாகி விட்டது என்பதை நாம் மறக்கலாகாது. சம்ஸ்கிருத இலக்கணமும் இலக்கியமும் வேதாந்தமும் காவியமும் இறுதியான பரிபூர்ண நிலையை எய்திவிட்டன என்பதை நாம் முற்றும் நம்பினோம்; அவ்வாறே விளம்பரப்படுத்தினோம். ஆனால் இது அந்த மொழிக்குத் துரதிருஷ்டமான நிலைமை; ஏனென்றால், முற்றும் வளர்ந்துவிட்ட ஒன்று, இனி வளர்வதற்கு வழியே இல்லை. சம்ஸ்கிருத மொழி இறுதியான பரிபூர்ண நிலையை எய்திவிட்டது என்பதை நாம் ஒப்புக் கொண்டபோது, என்னதான் உன்னதமான சாவாக இருந்தாலும், அது செத்துவிட்டது என்றே நாம் கூறியதாக முடியும்.

எனவே, காட்சிச்சாலையில் வைக்கும் பொருளாக நாம் சம்ஸ்கிருதத்தை நடத்துவது சரியல்ல. அறிவு உலகத்திலே இந்தியா கண்ட தத்துவ தரிசனங்களே இறுதியானவை என்று கூறுவதையும் நாம் நிறுத்தவேண்டும். சம்ஸ்கிருதம் வளர இப்போதும் நிறைய இடம் இருக்கிறது; மாந்தர் தங்கள் உயர்ந்த சிந்தனைகளை வெளியிடுவதற்குரிய பரந்த மொழியாகவும் கருவியாகவும் அது நன்கு

வளம் பெற முடியும். அந்த மொழியை எளிதாக்கி மக்களிடையே பரப்ப வேண்டும். செயற்கையானதும் பண்பட்டதுமான ஒரு நடையைச் சில புலவர்கள் கைப்பற்றி அவர்களுக்கு மட்டுமே அது ஆளான நிலையில், அந்த மொழியின் ஆற்றலும் வழக்கும் அழிந்தன.

சம்ஸ்கிருத மொழியின் அமைப்பு, அற்புதமான சக்தியும் வளைந்து கொடுக்கும் தன்மையும் வாய்ந்தது. புதிய சொற்களைப் படைக்கும் ஆற்றல் அதனிடம் ஏராளமாக இருக்கிறது. மனிதனுடைய உள்ளத்திலும் மூளையிலும் உதிக்கும் நுட்பமான சிறந்த உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் அவற்றுக்கு ஏற்ற நெளிவு சுளுவுடன் வெளிப்படுத்தும் வெவ்வேறு வகைச் சொற்கள் அந்த மொழியில் நிறைந்திருக்கின்றன. பாணினியும் அவருக்குப் பின் வந்தவர்களும் தொகுத்த இரண்டாயிரத்தே சொச்சம் மூல தாதுக்களோடு நாம் நின்றுவிட வேண்டியதில்லை. உலக மொழிகளை இன்று பயிலும் மொழி வல்லுநர்கள் கண்டுபிடித்து வழங்கக்கூடிய புதிய தாதுக்களையும் நாம் இந்த மொழியில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பல வகையான மனித இனங்களிடையே ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் இன்பத்தையும் உண்டாக்கும் உலக சக்தியாகச் சம்ஸ்கிருதம் நிலவுகிறது என்பது என் கருத்து. மாந்தரை இணைக்கும் பல சக்திகளிலே அது ஒன்ருக இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அமைதியையும் முன்னேற்றத்தையும் நாடும் பல நாட்டு மக்களின் வாழ்விலும் சமூக ஒற்றுமையையும் சிந்தனை ஒற்றுமையையும் விளைக்கும் பல சக்திகளிலே ஒன்ருகச் சம்ஸ்கிருதம் திகழும். இந்தச் செயலிலே தனக்கு ஏற்ற உயர் நிலையை அந்த மொழி பெறுமாக.

## ரோம் நகரில் நெல்லை முத்து

உலகின் 'அழகு ராணி' யாக ஒரு காலத்தில் செல்வச் செருக்கிலே மிதந்தது ரோம் நாடு. அந்த நாட்டுப் பெண்களின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காகக் கடல் கடந்து, அந்த நாட்டு இளைஞரும் வணிகரும் பாண்டிய நாட்டுக்கு அந்தக் காலத்தில் ஓடோடியும் வருவார்களாம்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கிளியோபெட்ரா என்ற ரோம அரசியின் உள்ளத்தைக் கொற்கை முத்துக் கொள்ளை கொண்டதாம். இந்தச் செய்தியைக் கூறும் அந்தக் காலத்து வரலாற்று ஆசிரியர் பிளினி என்பவர் முத்து வாணிபத்தைப்பற்றிப் பொதுவாக எழுதியிருக்கும் விஷயங்கள், இந்திய நாட்டுக்கே பெருமை தருபவை. 'ரோம் நாட்டு மங்கையருக்கு முத்துப் பைத்தியமே பிடித்திருக்கிறது' என்கிருர். அது காரணமாக, அந்த நாட்டின் செல்வம் கொள்ளை போகிறது என்று அவர் அங்கலாய்க்கிருர். 'நாடு மொட்டையாகிறது; இந்த நிலை மாறவேண்டும்' என்றே அவர் அன்று கூக்குரலிட்டார். நம் நாட்டுக் கட்டாணி முத்தல்லவா அந்த நாட்டுக் கன்னியரை இப்படி ஆட்டிவைத்திருக்கிறது! இன்றுவரைக்கும் தன் தரம் குறையாமலிருக்கும் நமது முத்தின் பெருமையே பெருமை!

—'நெல்லை' (சென்னைச் சர்க்கார் வெளியீடு)

பாரத நாட்டிலே மிகப் பெரும் பகுதிகளில் கொண்டாடும் விழாக்களில் ஒன்றான விநாயக சதுர்த்தியின் விமரிசையைப் பம்பாயிலேதான் பார்க்கவேண்டும்.

# பம்பாயில் பிள்ளையார் விழா

கன்னட மூலம்: **லீலாவதி சந்திரசேகர்**
தமிழாக்கம்: **ஜயலட்சுமி சீனிவாசன்**

கல்கத்தாவில் பூஜா விழாவை எப்படிக் கொண்டாடுவார்களோ அதேபோல் சில விஷயங்களில் அதையும் மிஞ்சும்படியான சம்பிரமத்துடன், பம்பாயில் பிள்ளையார் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

ஸ்ரீஜயந்தி நாளில் வீடுதோறும் உயர உறி கட்டி அதில் சித்திர விசித்திரமாகச் சிங்காரம் செய்த பானைகளை அடுக்கி வைப்பார்கள். சிறுவர் கூட்டமாக ஓடிவந்து பஜனை செய்தவண்ணம் ஸ்ரீ கிருஷ்ண லீலா விநோதங்களை நடிப்பார்கள். கடைசியில் ஒருவர் மேல் ஒருவர் ஏறிக்கொண்டு இந்தப் பானைகளை உடைக்கும் காட்சி பார்ப்பவரைப் பரவசப்படுத்தும். மாடி, ஜன்னல், வராந்தா இவற்றிலிருந்து வர்ணத் தண்ணீரும் வர்ணப்பொடிகளும் மழைபோல் பொழிந்தாலும், அவற்றையெல்லாம் லட்சியம் செய்யாமல், இந்தச் சிறுவர்கள் தைரியமாக ஸ்ரீ கிருஷ்ண பகவானின் பால்ய லீலைகளை நிரூபிப்பது வியக்கத்தக்க நிகழ்ச்சியாகும்.

ஆனால் ஸ்ரீ கணபதியின் பண்டிகையை வேறு வகையில் விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். கோபாலனின் பால்ய லீலைகளை நடித்து ஸ்ரீஜயந்தியைக் கொண்டாடினால், பாட்டு, நாட்டியம், நாடகம், பஜனை இவற்றுடன் வித்யா கணபதியின் சதுர்த்தி விழா நடைபெறும்.

சதுர்த்தி வர இரண்டு மாதத்துக்கு முன்னதாகவே தொழிற்சாலைகளைத் துப்புரவு செய்வார்கள். கணபதியின் விதம் விதமான உருவங்களை அமைக்கத் தொடங்குவார்கள். அச்சிலேயே சம்பூர்ண கணபதியை வார்ப்பதும் உண்டு. அப்படி இல்லாமல், அங்கங்களையெல்லாம் வேறு வேறாக அச்சில் வார்த்துக்கொண்டு பிறகு சேர்த்து உருவாக்குவதும் உண்டு. பிறகு குஞ்சத்தால் வர்ணம் தீட்டி, ஜிகினா ஒட்டி, வஸ்திரங்களால் அலங்கரித்து விடுவார்கள்.

ஒவ்வொரு கலைஞனுக்கும் ஒவ்வொரு வகையான கைத்திறமை இருக்கிறது. நின்றுகொண்டிருக்கும் கணபதி, உட்கார்ந்திருக்கும் கணபதி, மூஷிக வாகன கணபதி, பத்மபீட கணபதி, உமா மகேசுவர கணபதி, அம்மாவின் துடைமேல் அமர்ந்திருக்கும் கணபதி, மாதங்கீ ஸமேதனான கிருகஸ்த கணபதி, அசுர ஸம்ஹார கணபதி, வேத விநாயகர், ரதாரூடரான கணபதி இப்படியெல்லாம் எத்தனையோ வகைகளில் பிள்ளையாரைக் கலைஞர்கள் அமைப்பார்கள்.

கடைவீதிகளை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வந்தால், இன்னும் பல விநோதமான கணபதிகளையும் காணலாம். காந்திக்குல்லாய் அணிந்து பஞ்சகச்சம் கட்டி ஜுப்பா தரித்த பிள்ளையார், பெரிய தலைப்பாகை கட்டிச் சால்வை போர்த்த மகாராஷ்டிர கணநாயகர், வெறும் தலையுடன் விளங்கும் நாகரிக கணேசர் இப்படியும் எத்தனையோ பார்க்கலாம். சில கலைஞர்கள் நம் நாட்டுத் தேசபக்தர்களை மனத்தில் வைத்துக்கொண்டு, அவர்களுடைய சாயலில் கணபதி தயாரிப்பதும் உண்டு.

குஜராத்தி, மராட்டி, மதராசி, மைசூர்க்காரர் இப்படி யாராக

இருந்தாலும், ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் ஆண் பெண் குழந்தை குட்டி அடங்கலும் சேர்ந்து சென்றே கடையில் பிள்ளையாரைப் பொறுக்கி எடுத்து வாங்கிக்கொண்டு வருவார்கள். இதுவே ஒரு பெரிய விழாப்போல் இருக்கும். மாதுங்கா, தாதர், சௌபாட்டி, கிர்காம், கால்பா தேவி இந்த இடங்களிலெல்லாம் ஏராளமான மக்கள் கும்பலாய்க் கூடி வெளியே கடைவீதிக்குப் போய் வருவார்கள்.

மனத்துக்கு உகந்த மூர்த்தியை வாங்கியபின், கொட்டுமேளத் துடன் வீட்டுக்கு எடுத்து வந்து மண்டபத்தில் அமர்த்துவார்கள். மண்டபத்தின் உள்ளும் புறமும் சிங்காரிக்கும் வேலையை வீட்டுத் தலைவரே ஏற்பார். சில குடும்பங் களில் வீட்டுத் தலைவியின் மீதே இந்தப் பொறுப்பு விழுவதும் உண்டு.

வீடுதோறும் விநாயக சதுர்த் தியை வெகு அழகாகக் கொண் டாடுவார்கள். விசாலமான கட் டிடங்களிலும் வீதிகளிலும் கடை களிலும், பெரிய பெரிய மண்டபங் கள் கட்டிப் பொதுவாகவும் கண பதியைப் பூஜிப்பார்கள். மில்களி லும் தொழிற்சாலைகளிலும் கணே சருக்கு மண்டபம் கட்டுவார்கள். வித்தியா மந்திரங்களில் வித்தியா கணபதியை அமைப்பார்கள். கிளப்பு, மைசூர் அசோசியேஷன், ஆஸ்திக சமாஜம், மகாராஷ்டிர சங்கம் - இப்படிப் பல இடங் களிலும் பிள்ளையார் பூஜை நடை பெறும்.

நாம் சாதாரணமாகப் பண் டிகைக்கு மறு நாள் மாலையில் பிள்ளையாரை விசர்ஜனம் செய் கிறோம். பம்பாயிலோ எந்த வீட்டிலும் குறைந்தது ஏழு நாளா வது பிள்ளையாரை வைத்திருப்பார் கள். ஏழு நாளைக்கு மேலும் பத்து நாளோ பதினைந்து நாளோ வைத் துக் காலை மாலையில் பூஜிப்பதுண்டு.

விழாவின் கடைசி நாளில், வேத பாராயணம், ஹோமம் எல் லாம் இனிதே நடைபெறும். மங்கள ஆரத்தி எடுத்து, சகல மரியாதை களுடனும், மகாகணபதியைக் கடலில் கொண்டுபோய் விட்டு வருவார்கள். வழி அனுப்பும் இந்த நிகழ்ச்சியை விழாவின் சிகரம் என்று சொல்லலாம். முக்கியமான தெருக்களிலெல்லாம் மக்கள் கூட்டங் கூட்டமாகக் குழுமி இருப் பார்கள். எல்லா ஜாதி ஜனங்களும் குழந்தை முதல் பெரியோர் வரை யில் சௌபாட்டி, மஹீம், ஜுஹு போன்ற கடற்கரைகளில் நிறைந்து, ஒரே மூச்சில் ஜய கோஷம் செய்துகொண்டிருப்பார் கள். கொட்டுமேளம் முழங்க, பஜனை செய்துகொண்டு, அலங் கரித்த தள்ளுவண்டியிலோ, தேரிலோ விமானத்திலோ பிள்ளை யாரை அமர்த்தி ஊர்வலமாய்க் கொண்டுபோவார்கள். பையன் களின் தலைமேல் ஆசனத்தோடு அமர்ந்து செல்லும் கணபதி உருவங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியாது. நாலணாவுக்கு வாங்கிய பிள்ளையாரிலிருந்து மிகப் பெரிய பிள்ளையார்வரைக்கும் பல உருவங்களைக் காணலாம்.

சமுத்திர ராஜனிடம் கண பதியை ஒப்படைத்துவிட்டுத் திரும்பும்போது, ஒரு மாதிரியாகத் தான் இருக்கும். பல சிறு குழந்தை கள் கணபதியை விட்டுப் பிரிய மாட்டாமல் அழுவதும் உண்டு. பெரியவர்களுக்கும் நெஞ்சு அடைக் கும். எவ்வளவோ ஆசையுடன் முழுக் கலைத்திறமையையும் காட்டி உருவாக்கிய பிள்ளையாரை, உற்சாகத்துடன் கடை கடையாக அலைந்து திரிந்து வீட்டுக்கு வாங்கி வந்த கணபதியை, இட்டிலி, கொழுக்கட்டை நிவேதனத்துடன் பூஜை செய்து கொண்டாடிய கணேசரை, வைபவமாக ஆரத்தி எடுத்து ஊர்வலமாகக் கொண்டு சென்று, கடைசியில் கடலில் விட்டு வரும் வழக்கம், நம் இந்திய நாட் டுத் தியாகப் பண்பையே எடுத் துக் காட்டுவதாகத் தோன்றுகிறது. இந்தப் பண்பு நமக்குள் வேரூன்றி வளர்ந்து, நம் மதம், கலை, சரித் திரம், தினசரிக் கடமை எல்லா வற்றுக்கும் அஸ்திவாரமாக என்றேன்றும் நிலைத்து நிற்க வேண்டும்.

LIC-40 TAM

# வருங்காலத்திற்கு நம்பிக்கையூட்டுவது ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்

உங்கள் குழந்தைகளின் வருங்கால
நன்மைக்காக இப்பொழுதே
இன்ஷ்யூர் செய்துக்
கொள்ளுங்கள்



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

'குழந்தை மனசு வேண்டும்'
என்கிறார்களே, அது இதனால்தான்.

# குழந்தைகளின் தீரம்

## ஜேனட் எட்வின்

பல ஆண்டுகளுக்கு முன்பு சீன தேசத்துச் சக்கரவர்த்தியின் முன்னிலையில் ஒரு சிறுவன் நின்றான். அவன் தந்தை தூக்குத் தண்டனை பெற்றுச் சிறையில் இருந்தார். குற்றமற்ற அந்த மனிதருக்காகப் பல நண்பர்களும் அதிகாரிகளும் வாதாடியபோதும், சக்கரவர்த்தி தமது தீர்மானத்தை மாற்றிக்கொள்ளாமல் இருந்தார். கடைசி முறையாக அந்தச் சிறுவனைத் தன் தந்தைக்காகப் பேசும்படி அரசரிடம் அனுப்பி வைத்தார்கள். இளைஞன் சக்கரவர்த்தியை நோக்கி, ''அரசரே, என் தகப்பனாருக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் நானே மூத்தவன். எங்கள் குடும்பத்துக்குப் பணம் சம்பாதிக்க வேண்டிய தகப்பனார் உங்கள் கட்டளையால் சிறையில் இருப்பதால், எங்கள் தாய் மிக விசனமாயிருக்கிறாள். பணம் சம்பாதிக்க எங்கள் வீட்டில் எவரும் இல்லை. தகப்பனார் இல்லாமல் நாங்கள் எப்படிக் குடும்பம் நடத்த முடியும்? ஆகவே, என் தகப்பனாருக்குப் பதில் என்னைத் தூக்கிலிட்டுத் தயை செய்து அவரை விடுதலை செய்து எங்கள் வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள். நான் ஒருவன் இறந்து போவதால் எங்கள் குடும்பத்துக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விடாது. என் தகப்பனாருக்காகச் சாக நான் மகிழ்ச்சியுடனேயே சம்மதிக்கிறேன்'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான். சிறுவனுடைய வார்த்தைகள் சக்கரவர்த்தியின் மனத்தைத் தொட்டன. உடனே அவர் திடமான குரலில், ''அருமைச் சிறுவா, நீ சிறந்த மகன். உன்னைப் போன்ற இத்தகைய சிறந்த மகனின் தகப்பனார் குற்றவாளியாக இருப்பது சாத்தியமே இல்லை'' என்று கூறிச் சிறுவனுடன் அவனுடைய தந்தையை அனுப்பி வைத்தார். ஒரு சிறுவன் காட்டிய தீரமும் உயர்ந்த பண்பும் அவனுடைய தந்தையின் உயிரையே காப்பாற்றி விட்டன.

* * *

வெகு காலத்துக்கு முன்பு, ஆங்கிலேயருக்கும் அமெரிக்கருக்கும் போர் நடந்தபோது, சில ஆங்கிலப் போர்வீரர்கள் ஓர் அமெரிக்கச் சிறுமியின் பசுவைத் திருடித் தங்கள் கூடாரத்துக்கு இழுத்துச் சென்றார்கள். சிறுமி தன் குதிரைமீது ஏறி, ஆங்கிலப் போர்வீரர்களைப் பின்தொடர்ந்து, நேராக ஆங்கிலச் சேனாதிபதியின் கூடாரத்துக்குள் சென்று, தன் அருமைப் பசுவை உடனே விடுவிக்கக் கட்டளையிடும்படி வேண்டினாள். அமெரிக்க நாட்டுச் சிறுமியின் தைரியமும் சொல்திறமையும் ஆங்கிலத் தளகர்த்தரின் உள்ளத்தைக் கவர்ந்தன.

அப்போது அவர், ''சிறுமியே, பகைவரான எங்கள் மத்தியில், உன் தந்தையின் துணைகூட இல்லாமல், நீ ஏன் தனியாக வந்தாய்?'' என்று கேட்டார்.

உடனே சிறுமி, ''தளகர்த்தரே, என் தகப்பனார் உங்கள் சேனையை எதிர்த்து வெகு தூரத்தில் இப்போது போர் புரிந்துகொண்டிருக்கிறார்!'' என்று தெளிவாய்க் கூறினாள். அதைக் கேட்டு நகைத்த சேனாதிபதி, ''அப்போது நீயும்

மூலம்: வித்யாதனம் (தமிழ்: மே '58), 1-டி, ரித்தெர்டென் ரோடு, வேப்பேரி, சென்னை - 7.

என் எதிரி அல்லவா?'' என்று கேட்டார்.

''ஆம்; நானும் உங்கள் பகை நாட்டைச் சேர்ந்தவள்தான். ஆனால் நான் பகைவரிடமிருந்தும், உங்கள் வீரர்களைப் போல் கண்ணியமில்லாமல் திருடமாட்டேன்!'' என்று தைரியமாய்க் கூறினாள். சேனாதிபதி இதைக் கேட்டுக் கோபம் கொள்வாரோ என்று, பக்கத்தில் இருந்த ஆங்கில அதிகாரிகள் நடுங்கினார்கள். ஆனால், சேனாதிபதியின் முகத்தில் புன்னகையே அரும்பியது. தம் காலில் அணிந்துகொண்டிருந்த இரண்டு வெள்ளி வளையங்களைக் கழற்றிச் சிறுமியிடம் கொடுத்து, அவள் தன் எதிரியானாலும் உண்மை பேசும் வீரம் பெற்றிருப்பதால், அவளைத் தாம் மிகவும் மதிப்பதாகக் கூறி, அந்தப் பரிசைத் தம் ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்ளச் சொன்னதுடன், பசுவை அவளுடன் உடனே அனுப்பும் படியும் கட்டளையிட்டார்.

சிறுமி தன் பசுவின் மேல் வைத்த பிரியமும், அவளுடைய தைரியமும், உண்மை பேசும் பண்பும் எவ்வளவு வியப்பூட்டுகின்றன!

* * *

ஃப்ரான்ஸ் தேசத்தில் வசித்த ஒரு தாய் தன் பிள்ளைகளிடம், தங்கள் வீட்டுக்கு விருந்தாளி எவராவது வந்தால், அவர்களை முதலில் உபசரித்து விருந்தளித்த பின்பே தாங்கள் சாப்பிட வேண்டும் என்று பல முறை சொல்லியிருந்தாள். பிள்ளைகளின் தகப்பனார் வெளி வேலைகளில் அதிகமாக ஈடுபட்டிருந்ததால், குடும்பத்தினருடன் அதிக நேரம் தங்குவதில்லை.

ஒரு நாள் தகப்பனார் சாப்பாட்டு வேளையில் வீட்டுக்கு வந்தார். உடனே அவருடைய கடைசி மகள் தன் தாயை நோக்கி, ''அம்மா! இன்று அப்பாதான் நம் விருந்தாளி. அவரை முதலில் உபசரித்து விருந்து அளிக்கலாம்'' என்று கூறினாள். இந்தச் சொற்கள் தகப்பனாரின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன. தாம் தம் குடும்பத்தில் ஒரு விருந்தினனைப்போல், சொற்ப நேரமே தங்குவதை உணர்ந்தார். தம் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் மனைவிக்கும் குடும்ப ஆலோசனைகளுக்கும் நியாயமாக அளிக்க வேண்டிய நேரத்தைத் தாம் அளிக்கவில்லை என்றும், இது தவறு என்றும் உணர்ந்தார். மறு நாள் முதல் அவர் 'குடும்ப விருந்தாளி'யாக இராமல் குடும்பத் தலைவராயிருந்து தம் கடமையைத் தக்கபடி நிறைவேற்றினார்.

சிறுமி விளையாட்டாய்க் கூறிய மொழிகளே, தகப்பனார் தம் குடும்பப் பொறுப்பை உணர ஒரு தூண்டுதலாக அமைந்தது!

## ரகசியம் எங்கே?

நீ ஒருவனே தனித்திருப்பதாய் எண்ணி, நல்வினை தீவினைகளை நோக்கிக்கொண்டிருக்கும் புராண புருஷனை அறியாதிருக்கிறாய். நீ செய்யும் தீவினைகள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கும் அந்தப் பரம புருஷனது சந்நிதியிலேயே நீ தீவினை புரிகிறாய்.

தான் ரகசியமாகச் செய்யும் தீவினைகளை ஒருவரும் அறிய மாட்டார்கள் என்று மனிதன் எண்ணிக்கொள்கிறான். ஆனால் தேவர்களும், உள்ளத்தில் உறையும் இறைவனும் அவற்றை அறிகிறார்கள்.

—மகாபாரதம்

# மீண்டும் மெதூஸலாவுக்கு

ரா. ஸ்ரீ. தேசிகன்

ஞானம் கடல் போன்றது. மனிதன் பேரொளி பெற்றுப் பெருஞ்சாதனை புரியவேண்டுமானல், ஆயிரம் வயசு வாழ வேண்டும். இந்தக் கனவு நனவாவதைச் சித்திரிக்கும் ஷாவின் நூல் கருத்தைக் கட்டுரையாளர் விளக்குகிறார்.

'மீண்டும் மெதூஸலாவுக்கு' என்று தாம் எழுதிய சிறந்த நாடகத்தைக் கற்பனை உலகமாக ஷா கருதுகிறார் என்பதை, அவர் கண்ட அரசியல் நூல் (Every body's Political What is What) வாயிலாக நாம் உணர்கிறோம். பல கற்பனை உலகங்களாக இந்த நாடகத்தைத் தாம் கருதுவதாக அந்த நூலில் அவரே குறிக்கிறார். இந்த நூல் தோன்றியதற்குக் காரணம் டார்வின் எழுதிய குருட்டு அல்லது தற்செயல் பரிணாமவாதந்தான் (The Theory of Evolution). இந்த நூல் அதற்கு ஒரு மறுப்பாகும்.

சூழ்நிலையால் ஒன்றும் ஏற்பட்டு விடாது. எல்லாம் குருட்டுப் போக்கில் நிகழ்ந்து விடவில்லை. வாழ்க்கைப் போராட்டத்தில் எல்லாம் தோன்றுகின்றன என்ற வாதத்தை ஷா மறுக்கிறார். எது தகுதியா யிருக்கிறதோ அதுதான் நிலைத்து நிற்கும் என்பதும் ஷாவுக்கு உடன்பாடில்லை.

தற்செயலாக ஒன்றும் நிகழவில்லை; ஒரு சங்கல்பத்தால்தான் எதுவும் நிகழ்கிறதென்று தோன்றுகிறது. டார்வின் கண்ட தத்துவத்தில் மனத்துக்கு இடமில்லை; ஆத்மாவுக்கு இடமில்லை.

குருட்டுச் சக்தித் தத்துவத்தை லமார்க் என்ற பிரெஞ்சுத் தத்துவ தரிசி எதிர்த்தார். நம்முடைய திடமான சங்கல்பத்தால்தான் நமக்கு அவயவங்கள் தோன்றுகின்றன. கண்களை விரும்புகிறோம்; கண்கள் தோன்றுகின்றன. செவிகளை விழைகிறோம்; செவிகள் கிளம்புகின்றன. அறிவு விழித்தே நாம் செய்த ஒன்று சகஜமாய்ப் போய்விடுகிறது; பிறகு நம்மை அறியாமலே அது தன் அலுவலைச் செய்கிறது. நம்முடைய இதயத்தை நாம்தான் ஓடச் செய்தோம். நினைவோடு செய்த ஒன்று, நம்மை அறியாமலே பின்னல் தானுக நடக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம் தரலாம். நாலும் ஐந்தும் கூட்டுவதற்கு விரல்களை விட்டு எண்ணிய நாட்கள் உண்டு. ஆனால் அப்படி நாம் இப்போது செய்யவில்லை. சில கணக்கு மேதாவிகளைப் பார்க்கிறோம். ஏதாவது ஒரு கணக்கைக் கொடுத்தால் அதற்கு விடையைச் சட்டென்று அவர்கள் தந்துவிடுகிறார்கள். இத்தகைய மாந்தர்கள் வருங்காலத்து மனிதர்களின் விடிவெள்ளிகள் என்று சொல்லிவிடலாம். ஜன சமுதாயம் முன்னேறுமானல், கணக்கில் 'கால்குலஸ்' (Calculus) என்ற உயர்தரப் பிரிவை முதலிலேயே - அதாவது, குழந்தைகளுக்கு மிகச் சிறு பிராயத்திலேயே - கற்பிக்கத் தொடங்கிவிடலாம் என்று ஷா நினைக்கிறார்.

லமார்க் தத்துவத்தைத்தான் சாமுவல் பட்லர் உலகத்துக்குச் சாற்றுகிறார். சாமுவல் பட்லரின் அடிச்சுவட்டை ஷா பின்பற்றுகிறார்.

தற்செயலாய் நாம் உலகத்தில் பிறந்து விடவில்லை. நாமே நாம் உவக்கும் ஒரு சரீரத்தைப் பெறு

கிறோம். பிறவியும் நம்முடைய முயற்சியால்தான் எழுகிறது. நாம் நம்முடைய திட சங்கல்பத்தினால் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளத் தவறினால் இயற்கை அன்னை வேறு புதிய படைப்புக்களைச் செய்துவிடுவாள். எத்தனையோ விலங்குகள் உலகத்தில் தோன்றி மறைந்துவிட்டன. மனித இனமும் ஒரு காலத்தில் மறைந்து வேறு இனம் தோன்றக் கூடும். மனித இனந்தான் படைப்பில் இறுதிக் காட்சி என்று இயம்புவதற்கில்லை. இயற்கைச் சூழலில் இன்னும் எத்தனை வித மான படைப்புக்களின் கரு மறைந்து கிடக்கிறதோ யார் அறிவார்!

மெதூஸலா என்பவன் 969 ஆண்டு இவ்வையகத்தில் உயிர் வாழ்ந்தான் என்று பைபிள் மொழிகிறது. அவனைப் போல நாமும் உயிர் வாழ முடியும். தூக்கம் ஒரு பழக்கம். அந்தப் பழக்கத்தை நாம் சில சமயம் வென்று விடுகிறோம். அதைப் போலவே மரணமும் ஒரு பழக்கம். செத்துச் செத்து மரணமும் ஒரு பழக்கமாயிற்று. இதை வென்றால்தான், நம்முடைய கனவுகள் - லட்சியங்கள் - உருவாகும். வாழ்வின் மர்மம், ரகசியம், லட்சியம் இவற்றை அறிவதற்கு முன்பே நாம் மாண்டுவிடுகிறோம். வாழ்வின் ரகசியம் நம் மனத்தகத்தே உதயமாகலாம்; ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு முன்பே நாம் மாண்டுவிடுகிறோம். மரணத்தை நம்முடைய ஆத்ம சக்தி கொண்டு- திடமான சங்கல்பம் கொண்டு - வெகுதூரம் தள்ளிவைத்தோமானால், அநேக உயர்ந்த லட்சியங்களுக்கு உருக் கொடுத்து இந்த உலகை ஓர் அமர நாடாக அமைத்துவிடலாம்.

பாரதத்தில் இத்தகைய ஒரு சம்பவத்தைப் பார்க்கிறோம். பீஷ்மருக்குத் தட்சிணயனத்தில் இறக்க விருப்பமில்லை. 'தட்சிணயனத்தில் மாண்டவர்கள் சந்திரனுடைய மார்க்கத்தைப் பின்பற்றுவதால், மீண்டும் உலகத்தில் பிறப்பார்கள். உத்தராயணத்தில் உயிர் துறப்பவர்கள் சூரிய மார்க்கத்தைப் பின்பற்றிப் பேரின்ப வீட்டை அடைவார்கள்' என்று நினைக்கிறார்கள். உத்தராயணம் வருகிற வரையில் காயம்பட்டுக் கிடக்கிற பீஷ்மர், தம்முடைய ஆத்ம வலிமையைக் கொண்டு உயிர் வாழ்ந்தார் என்று பாரதம் கூறுகிறது.

சிருஷ்டிக் கிரமங்கூட டார்வின் கருத்தைப் போலத் தற்செயலாய் நிகழ்ந்து விடவில்லை. உதாரணமாக, ஒட்டைச் சிவிங்கி உயரத்திலுள்ள இலைகளை விரும்புகிறது; இதனால் அதற்குக் கழுத்து நீள்கிறது. சிருஷ்டிக் கிரமத்தை உபநிஷத் நன்றாகச் சித்திரிக்கிறது. பிரம்மத்துக்குத் தனித்து நிற்க விருப்பம் இல்லை. அது தவம் புரிகிறது; சங்கல்பம் செய்கிறது. அந்தச் சங்கல்பத்தில் பிரபஞ்சம் தோன்றுகிறது. பரிணாமத்தில் எது இறுதியில் மலர்ந்து வருகிறதோ, அது ஆதியில் அந்தப் பொருளில் கரந்து நின்றிருக்க வேண்டும். அது தளிராய்ச் செடியாய் மரமாய் மலராய்க் காயாய்ப் பழமாய் விரிகிறது. இந்தப் பழம் அந்த விதையில் கலந்துதானே நிற்கிறது? இதை ஆங்கிலத்தில் 'எக்ஸ்ஃபோலியேஷன்' அல்லது 'டெலியாலஜி' என்று கூறுவார்கள். இயற்கையின் தோற்றத்தில் வித்துச் சிதைந்து விடுகிறது. ஆனால் ஆதி காரணமான பகவான் என்ற வித்துச் சிதையாமல் கரந்தே இருந்தபடி, எல்லாவற்றையும் இயங்கும்படி செய்கிறது. டார்வின் கண்ட பரிணாமம் தற்செயலாய் நிகழ்கிற அல்லது குருட்டுப் பரிணாமமாகும். ஆனால் லமார்க், பட்லர், ஷா இவர்கள் கண்டது சங்கல்ப பரிணாமம் (Creative evolution) ஆகும்.

மனிதன் தன் ஆத்ம சக்தி கொண்டு - திடமான சங்கல்பம் கொண்டு - வாழ்வை நீடிக்கச் செய்ய முடியும் என்ற கருத்துத்தான் 'மீண்டும் மெதூஸலாவுக்கு' என்ற நாடகத்தில் கோயில் கொண்டிருக்கிறது. சித்தர்களிடம் கூண்டோடு கைலாசம் என்ற கருத்து வேரூன்றி நிற்கப் பார்க்கிறோம். ஆனால் இது முடியுமா?

மாயோனான கண்ணனுக்கே தகனம் நடந்ததே! ஞானிகளெல்லாம் உலகை விட்டு மறைந்துவிட்டார்களே! தோன்றினது மறையாமல் என்ன செய்யும்? உலக அன்னையான சீதை பூமிக்குள் மறைந்து விட்டாளே! ராகவன் சரயு நதியில் இறுதியில் இறங்கிவிட்டானே! தம்பிமார்கள் கீழே விழுந்து இறக்க, திரும்பிப் பார்க்காமலே தர்மபுத்திரர் ஒருவரே தம் உடலுடன் உத்தம உலகத்துக்குப் போனார் என்று பாரதம் கூறுகிறது. எத்தகைய அமர கீதமும் காலத்தில் இறந்து விடுகிறதே! எவ்வளவோ அழகு வாய்ந்த பெண்ணின் உருவமும் சிதைந்து புழுக்களுக்கு இரையாகி விடுகிறதே! இதைவிட வேறு சோக நாடகமும் வையகத்தில் வேண்டுமோ? இதை நினைக்குந்தோறும் இதய வீணையின் நரம்புகளின்மீது புகலரும் சோகக் குரல் படராமல் என்ன செய்யும்? உடலெல்லாம் பழைய உடைபோலக் காட்சி அளிக்கிறது. பழைய உடை போனால் என்ன? ஆத்மாவுக்குப் புதிய உடலாம் நல்ல ஆடைகள் தோன்றிக்கொண்டிருக்கும் என்ற ஆறுதல் ஒரு புறம் இருந்தாலும், இந்த வாழ்வின் சோக நாடகத்தின் இயல்பை - உள்ளத்தை மூடுகிற சோக முகிலின் இயல்பை - நாம் மறக்க முடியுமோ?

'மீண்டும் மெதுாஸலாவுக்கு' என்ற நாடகத்தின் முதல் காட்சி, ஈடன் என்ற நந்தவனத்தில் தொடங்குகிறது. ஓர் இளமான் குட்டி அந்த நந்தவனத்தில் இறந்து கிடக்கிறது.

ஆடம்: ஈவ்! ஈவ்!

ஈவ்: எதற்காக அழைக்கிறீர்கள்?

ஆடம்: விரைவாய் வா. ஏதோ ஒன்று நிகழ்ந்துவிட்டது.

ஈவ்: [பரபரப்புடன் வந்துகொண்டே] என்ன? எங்கே? [ஆடம் அந்த மானைச் சுட்டிக் காட்டுகிறான். ஈவ் அதை நண்ணுகிறாள். ஆடத்துக்குத் தைரியம் பிறக்கிறது. அவளைப் பின் தொடர்கிறான்.] அதன் கண்களுக்கு என்ன நேர்ந்தது?

[ஆடம் அதைக் காலால் உதைக்கிறான். அது விழித்தெழுந்திருக்கவில்லை.]

ஈவ்: காலால் உதைக்காதீர்கள். ஏன் அது விழித்தெழவில்லை?

ஆடம்: எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அது தூங்கவில்லை.

ஈவ்: தூங்கவில்லையா?

ஆடம்: தூங்குகிறதா, தூங்கவில்லையா என்பதைப் பரீட்சை செய்து பாரேன்.

[ஈவ் அதை அசைத்து உருட்டிப் பார்க்க முயலுகிறாள்.]

ஆடம்: அதை ஒன்றும் எழுப்ப முடியாது.

ஈவ்: ஏதோ ஒரு விசித்திரமான நாற்றம் கிளம்புகிறதே. சீ! [தன்னுடைய கையை உதறுகிறாள். இறந்த அந்த மானிட மிருந்து விலகுகிறாள்.] நீங்கள் கண்டபோதே அது இப்படித்தான் இருந்ததா?

ஆடம்: இல்லை. அது இங்கும் அங்கும் விளையாடிக்கொண்டிருந்தது. தடுக்கித் தலைகுப்புற விழுந்துவிட்டது. அப்புறம் அது அசையவில்லை. அதன் கழுத்தைப் பார், கோணிப் போயிருக்கிறது!

முதல் முதலாக அந்த வனப்பு வாய்ந்த பூம்பொழிலில் மரணம் புகுந்துவிட்டது. சாத்தானுடைய காரியம் அது. பாவம் என்பது ஆண்டவனுடைய கட்டளையை நிறைவேற்றாமல் இருப்பதே என்பதை அவர்கள் உணர்கிறார்கள். பாவங்களின் பரிசு மரணந்தான் என்ற உண்மையும் அவர்களுடைய மனத்தில் மின்னலடிக்கிறது. ஆடமும் ஈவும் மரணத்தைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்துவிடுகிறார்கள். மரண பயம் அவர்களுடைய உள்ளத்தில் புகுந்துவிட்டது. ஈவ் முந்தி இறந்தாலும் ஒரு கஷ்டந்தான்; ஆடம் முந்தி இறந்தாலும் ஓர் இன்னல்தான்.

ஈவுக்குப் பிள்ளைகளும் பேரன்களும் கொள்ளுப் பேரன்களும் தோன்றுகிறார்கள். ஆனால் இவள் கண்ணுக்கு முன்பே அவர்கள் அழிவதைக் காண்கிறபோது, இவளுடைய உள்ளத்தில் புகலரும் சோகவெள்ளம் ஒன்று பாய்கிறது 'இப்படி அழிவுற்றால், என் மக்கள்

எப்படி இயற்கையின் ரகசியங்களை அறிவார்கள்? ஒவ்வொரு கலையையும் கற்பதற்கே நாள் போதாதே!' என்று துயருறுகிறாள்.

மனிதன் உண்டியோடும் உடையோடும் வாளா இருந்து விடுவதில்லை. நமக்கு ஓர் அமிழ்தம் கிடைக்கும். அதைக் கொண்டே நாம் உயிர் வாழ முடியும். அப்போது ஒரு தொழிலும் வேண்டாம்; நூற்று நெய்ய வேண்டாம்; உழ வேண்டாம். போரும் கொலையும் உலகத்தை விட்டு அகன்றுவிடும்.

ஷா படைத்த 'கடவுளை நாடிய ஒரு கறுப்புப் பெண்'ணும் பேரொளியைத் தன் அகவுயிரிலேயே கண்டுவிடுகிறாள்.

ஈவ் விதியை நொந்துகொண்டு நூல் நூற்கிறாள். ஆடமோ, அமைதி இல்லாமல் உழுகிறான். இந்தக் காட்சியுடன் 'மீண்டும் மெதூஸலாவுக்கு' என்ற நாடகத்தின் இரண்டு அங்கங்கள் கொண்ட முதல் பாகம் முடிவடைகிறது.

இரண்டாம் பாகத்தில் பார்னபஸ் சகோதரர்களின் தத்துவம் விளக்கப் பெறுகிறது. பேராசிரியரான கான்ராட் பார்னபஸ், ஒரு சமயம் பாதிரியாயிருந்த ஃப்ராங்க்ளின் பார்னபஸ் இருவரும் உடன் பிறந்தவர்கள். இரண்டு பேரும், ''மனிதனுக்கு எழுபது வயசு போதாது. 'கல்வி கரையில; கற்பவர் நாள் சில.' எனவே, குறைந்த பட்சம் முந்நூறு ஆண்டுகளாவது வேண்டும்'' என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஃப்ராங்க்ளின் கூறுவது இங்கே நோக்குதற்குரியது: ''இத்தகைய சிந்தனைத் துறையில் நாம் தனியாக இல்லை. இந்தப் பரிணாமத்தை உண்டு பண்ணுவது ஒரு சக்தியோ தெய்வமோ ஏதோ ஒன்றென்று வைத்துக்கொள்ளுங்கள். அது நம் மூலம் நம் கனவை நிறைவேற்றப் பார்க்கும். இது நடக்காவிட்டால் வேறு படைப்புக்களைக் கொண்டு, இந்தக் கனவுகளை அந்தச் சக்தி நிறைவேற்றிவிடும். படைப்பில் மனிதன்தானா இறுதிக் காட்சி?''

நாடகத்தின் மூன்றும் பாகத்தில் இந்தச் சகோதரர்கள் கண்ட கனவு சில மனிதர்களிடையே உருவாகத் தொடங்கிவிடுகிறது. ஆர்ச்பிஷப், லூட்ஸ்டிரிங் (Lute string) என்ற இரண்டு பேரும் இந்த நிலையை அடைந்துவிட்டார்கள். கான்ரட் பார்னபஸ் எழுதிய புத்தகம் இந்தத் துறையில் அவர்களை இறங்கும்படி செய்தது.

லூட்ஸ்டிரிங் கூறுவது சிந்திப்பதற்குரியது: ''என் கணவன் இறந்த பிறகும், என் குழந்தைகள் எல்லாம் பெரியவர்களாகி உலகத்தில் திரிந்த பிறகும், என் உண்மையான வயசுக்கு இருபது ஆண்டு குறைந்தவளாகவே நான் இருந்தேன். மனிதன் வயசை நீடித்துக் கொண்டு இளம் வயசுக்காரனாகவே வாழலாம் என்ற உண்மை ஒரு மின்னல் ஒளியில் என் மனத்தின்மீது பாய்ந்தது.''

நான்காம் பாகத்தின் முதல் அங்கத்தில் வயசு முதிர்ந்த ஒரு கனவான் அளிக்கும் சோகக் காட்சி சித்திரிக்கப்பெற்றிருக்கிறது. இந்தக் கனவான் முந்நூறு ஆண்டு வாழ்கிற மக்களின் ஊருக்குப் போகிறான். ஜூ என்ற பாத்திரத்துக்கும் இந்தக் கனவானுக்கும் நடக்கிற சம்பாஷணையில் சில கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. மெதூஸலாவுக்குப் பிறகு முதல் முதல் 300 ஆண்டு உலகத்தில் வாழ்ந்தது ஓர் ஆங்கிலேயன் என்று இந்தக் கனவான் மொழிகிறான். இந்தக் கனவானின் மூலம் ஷா தம் கருத்தை வெளியிடுகிறாரோ என்று தோன்றுகிறது. ஜூ இப்படி மொழிகிறாள்: ''குறுகிய வாழ்வு வாழ்கிறவர்களுக்குத் துயர்தான் விரியும். நூறாண்டுக்குக் கீழேயே மரிக்கிற உங்களுக்கு நாங்கள் உபதேசம் செய்ய வரவில்லை. உங்களை நாங்கள் ஆளவும் வரவில்லை. அற்பாயுள் கொண்ட உங்களை அழித்துவிடப் போகிறோம். தக்கபடி மாந்தர்கள் நடந்துகொள்ளாமல் போனால், கழனிகளில் பொல்லாக் களைகளைப் பிடுங்குவதுபோலப் பிடுங்கி அழித்துவிடுவோம். இந்தத் தொழிலில் எங்களுக்குச் சற்றும் இரக்கம் என்பதில்லை.''

இந்தப் பகுதியின் இரண்டாம் அங்கத்தில் நெப்போலியனைக் கொண்டுவந்து நிறுத்தி அவனைப் பேசச் செய்கிறார் ஷா. தெய்வ வாக்குக்கும் (Oracle) நெப்போலியனுக்கும் ஒரு சம்பாஷணை நடக்கிறது.

நெப்போலியன்: என்னை ஒரு சக்தி ஆட்டி வைக்கிறது. நான் அந்தச் சக்தியை ஆட்டி வைக்கவில்லை. அதுதான் என்னை அழைத்துச் செல்லுகிறது. அது பேசுகிற போது, நான் ஒரு பெரியவனாய்ப் பொலிகிறேன். பிற தருணத்தில், நான் ஒன்றுமே இல்லை.

தெய்வ வாக்கு: அந்தச் சக்தியைப் பின்பற்றுவதுதானே?

நெப்போலியன்: அந்தச் சக்தி ரத்தத்தைச் சிந்தும்படி செய்கிறது.

தெய்வ வாக்கு: நீ ஒரு ரண சிகிச்சை செய்கிறவனா அல்லது பல் வைத்தியம் செய்கிறவனா?

நெப்போலியன்: கடல்போலக் குருதி வெள்ளத்தைக் கொட்டுகிறேன். பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் மடிகிறார்கள். இது தான் நான் புரியும் தொழில்.

தெய்வ வாக்கு: மக்கள் இதை ஆட்சேபிக்கவில்லையா!

நெப்போலியன்: ஆட்சேபிப்பதா? எனக்குப் புகழ்மாலை அல்லவா சூட்டுகிறார்கள்!

தெய்வ வாக்கு: அப்படியா?

நெப்போலியன்: நான் என் கையால் ரத்தத்தைச் சிந்தவில்லை. ஒருவரை ஒருவர் வெட்டி மடிகிறார்கள். என்னுடைய புத்திசாலித்தனம் இந்தக் கொலைக்குத் திட்டம் போடுவதே. இதை ஒரு பெரும் புகழாக, சிறப்பாக மக்கள் போற்றுகிறார்கள். சமாதான காலத்தில் கட்டுண்டு கிடந்த கொடும் பேயின் தளைகளை நான் அவிழ்த்து விடுகிறேன்; அது தலை விரித்தாடுகிறது.

இந்தச் சம்பாஷணையில் டாக்டர்களையும் போர் வீரர்களையும் ஷா நிந்தித்துப் பேசுவது விளங்கும்.

ஐந்தாம் பாகத்தில் 'சிந்தனைக் கெட்டிய வரையில்' என்ற காட்சி வருகிறது. கி. பி. 31920-ஆம் ஆண்டின் சித்திரம் ஷாவின் கண் முன் விரிகிறது. புராண புருஷனுக்கும், புராணப் பெண்ணுக்கும், புதிதாய்த் தோன்றியவனுக்கும் ஒரு நீண்ட சம்பாஷணை நடக்கிறது. இந்தச் சம்பாணையில் ஷாவின் கனவு விரியக் காண்கிறோம்.

புதிதாய்த் தோன்றியவன்: [புராண மனிதனைப் பார்த்து] உன்னுடைய விதி என்ன?

புராண மனிதன்: அமரனாயிருப்பதே.

புராணப் பெண்: ஒரு காலம் வரும். அப்போது மனிதர்கள் இருக்க மாட்டார்கள். கலப்பற்ற ஞானந்தான் இருக்கும்.

ஒரு குரல்: கலப்பற்ற ஞானமயமா யிருந்தாலும் அதற்குத் தலை வேண்டாமா?

புராண மனிதன்: சரித்திர காலத்துக்கு முந்திய மனிதன் வால் இல்லாமல் மனிதனே இருக்க முடியாதென்று நினைத்தான்; நான் இப்போது வால் இல்லாமல் இருக்கிறேன். வால் இல்லாமல் எப்படி வாழ்கிறேனோ அதைப் போலவே தலையில்லாமல் ஞான வடிவாயும் நான் வாழ முடியும்.

புராணப் பெண்: இப்போது மனிதன் சதையும் குருதியுமான உடல் மீது நம்பிக்கை வைப்பதில்லை. அவை அழிகின்றன.

புராண மனிதன்: இந்த உடல் நம்மைச் சிறை செய்கிறது; அமர நாட்டில் சஞ்சரிக்க முடியாமல் நமக்குத் தளை இடுகிறது.

உடல் அற்று, தலை அற்று, கருவிகரணங்கள் அற்று, எல்லாம் அற்றுப் புவனம் யாவும் ஒரு ஞானமயமாய் - சின்மயமாய் - விளங்கும் என்ற கனவை ஷா காண்கிறார். இந்த அறிவு வடிவத்தைத்தானே நம் சான்றோர்கள் தபோவனத்தில் கண்டார்கள்? சின்மயத்தைக் கண்ட சங்கரரின் கருத்தொலியை ஷா கண்ட தத்துவத்தில் நாம் கேட்கிறோம். 'சின்மயானந்தமே' என்று சதா புலம்பிய தாயுமானவருடைய தெய்வ வாக்கையும் நாம் மறப்போமோ? அறிவொளியை நாடுகிற அனைவருக்கும் நாம் அஞ்சலி செய்வோமாக!

புரளிச் சோதிடந்தான் என்றாலும், இதிலே உண்மை உண்டு.

# கூந்தல் சோதிடம்

பிரசாத்

ஜாதகத்தைப் பார்த்து வருங் காலத்தைப்பற்றிச் சொல்லும் நிபுணர்கள் பலர் இருக்கிறார்கள். கைரேகை பார்த்து உங்கள் அவல வாழ்க்கையின் ரகசியத்தை அம்பலம் ஆக்குகிறவர்களும் இருக்கிறார்கள். முன் காலத்தில் உள்ளங்கால் ரேகைகளைப் பார்த்து மனிதர்களுடைய அதிருஷ்ட துரதிருஷ்டங்களைப் பற்றிச் சொல்லுபவர்கள்கூட இருந்தார்களாம்.

இந்தக் காலத்தில் புதிய சோதிட சாஸ்திரிகள் தோன்றியிருக்கிறார்கள். பெண்களின் கூந்தல் அலங்காரத்தையே ஆதாரமாகக் கொண்டு அவர்களுடைய நற்குணங்களையும் தீய குணங்களையும் சொல்லுவதில் அந்தச் சோதிடர்கள் திறமை பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவர் சில நாளைக்கு முன் எனக்கு அறிமுகம் ஆனார். அவர் தம் சாஸ்திரத்தைப் பற்றி இப்படிச் சொன்னார்: "இதோ பாருங்கள் ராசியை. நாரதமுனிவர் இந்தப் பனையோலைச் சுவடிகளில் பிருகன்னளைக்குக் கூந்தல் அலங்காரத்தைப் பற்றிய மர்மங்கள் எல்லாவற்றையும் விவரித்திருக்கிறார். குறிப்பிட்ட இன்ன பாணியில் கூந்தலை முடித்த பெண்ணின் மனசு இன்ன மாதிரி இருக்கும் என்பதைப் படத்துடன் எடுத்துக் காண்பித்திருக்கிறார். ஓரிரண்டு உதாரணங்கள் மட்டும் தருகிறேன், பாருங்கள்."

இதைச் சொல்லி, அவர் ஓர் ஏட்டுச் சுவடியைப் பிரித்துப் போட்டு, பழங்காலச் செய்யுள் நடையில் எதையோ படித்து விட்டு, எனக்குப் புரியும்படியான இந்த நாள் வசனநடையில் அதை விளக்கிப் படம் எழுதியும் காட்டினார். அந்த விவரத்தை இங்கே தருகிறேன்; படித்துப் பாருங்கள்:

(1) தலைமயிரைப் பின்னல் பெரிய பெரிய கால்களாக்கிச் சப்பட்டையாய் மாலையைப்போல் படியக் கட்டிய பெண், சாப்பாட்டு ராமனை ஊர் சுற்றும் கணவனைக்கூட மனோதைரியத்துடன் எதிர்த்துத் தன் கைப்பொம்மை ஆக்கிவிடுவாள்.





மூலம்: குறவஞ்சி (கன்னடம்: ஜுலை '58), பங்களூர்.



இவள் சாதாரணமாக, தலைப்பை இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு எப்போதும் சண்டைக்குத் தயாராக நிற்பாள். இவளுக்குப் பிடித்தமான பூக்கள், மனோரஞ்சிதமும் அந்தி மந்தாரையும். பிடித்த ராகம் கலஹலப்ரியா; தாளம் ஆதி. பிடித்த சாகித்தியம் நவீன இலக்கியம்.

ருசி, மண்டையைப் பிடிக்கும் காரம்.

(2) கூந்தலைப் பின்னி, அந்தப் பின்னலை உருண்டை வடிவில் எடுத்துக் கட்டி, அதன்மேல் அதே அளவு பருமன் உள்ள பூச்சரத்தை வைத்துக்கொள்ளும் பெண், கர்நாடகப் பழக்கங்களை விட்டுவிடத் தைரியம் அற்றவள். அலங்கரித்துக் கொண்டு மினுக்குவதில் ஆசை உள்ள நடுவயசுப் பெண்மணி. வாட்ட சாட்டமான உடல் அமைப்பு உள்ளவள். மரியாதை, கௌரவம் இவற்றைப் பிறரிடமிருந்து பெற விரும்புகிறவள். முதுமையை எட்டவிருக்கும் சஞ்சலப் பார்வை உள்ள கணவனை வசீகரிக்க, இவள் போடும் வலையே இந்தக் கூந்தல் அலங்காரம்.

இவள் சாதாரணமாகத் தலைப்புக்குச் சுதந்தரம் கொடுத்து விடுவாள். ஆனாலும் அதைக் கைக்குள் கட்டுப்படுத்தியே வைத்திருப்பாள். இவளுக்குப் பிடித்த பூக்கள் சாமந்தியும் மல்லிகையும். விருப்பமான ராகம் மதன குதூஹலம். தாளம் மிச்ர சாபு. பிடித்த இலக்கியம் புரந்தரதாசர் கிருதிகள். பிடித்த உணவு கருக வறுத்தவை.

(3) கூந்தலை இரண்டு பின்னல் பின்னிக்கொண்டு, வகிட்டையும் சற்று ஒரு பக்கமாகவே எடுத்துக் கொண்டு அலங்கரித்துக் கொள்பவள், சாதாரணமாக ஏழையாய் இருப்பாள். அதை மறைக்கவே ஜோடிப் பின்னல். வருங்காலத்துச் சந்ததி விருத்தியைத் தெரிவிக்கும் முன்னெச்சரிக்கையே இந்தப் பின்னல்கள். 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்று சொல்லிக்கொள்வதாகச் சிலரைப் பற்றி நாம் ஒரு பழமொழி சொல்லுகிறோமே அதுபோல, வாழ்க்கையில் மண்ணைத் தின்றாலும் பின்னலுக்கு மண் ஒட்டவில்லை என்று இவள் பெருமைப்பட்டுக் கொள்வாள். இவளுடைய அலங்காரம் கணவன் கண்டு மகிழ்வதற்கு அல்லவே அல்ல! அவனை மகிழ்விக்கவே வேண்டாம். வறுமை நிறைந்த வாழ்க்கையில் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டா? மனசுக்குப் பிடிக்காத நிகழ்ச்சிகள் தான் நிறைந்திருக்கும்.

தலைப்புக்கு இவள் பரிபூர்ணமான சுதந்தரம் கொடுத்திருப்பாள். மயக்கும் பார்வை உள்ளவள். இவளுக்கு இஷ்டமான ராகம் அடாணா. தாளம் அட



தாளம். பிடித்த சாகித்தியம் சினிமா நோட்டீசு. பிடித்த உணவு பொரித்த பண்டங்கள். விருப்பமான பூக்கள் ரோஜாவும் மனோ ரஞ்சிதமும்.

(4) கூந்தலை இழைய இழைய எண்ணெய் தடவி வாரிவிடுவது, கூந்தலை உயர்த்தியே வாரிவிடுவது, பிறகு கூந்தலை உயர்த்தி ஒரு ரிப்பனைக் கொண்டு கட்டிவிடுவது. கூந்தல் நீர்வீழ்ச்சியைப் போலும், குதிரை வாலைப்போலும் தோன்றும். இப்படி அலங்கரித்துக் கொள்கிறவள் குதிரைபோல் நடக்கும் புதுமைப் பெண்ணின் லட்சணம் நிரம்பியவள். இவளைப் போன்ற பெண்கள், குதிரைகளைப் போல் விறைப்பாக வளர்ந்திருப்பார்கள். நின்று பேசினால் குதிரை உதைப்பதுபோல் இருக்கும். கொஞ்சிக் குலாவ ஆரம்பித்தால் மூர்ச்சையே போட்டு விட்டாளோ என்று தோன்றும். இழுத்துப் போட்ட மேலாக்கு, லகானைப் போலவே தென்படும்.

இவளுக்குப் பிடித்த பூக்கள் காட்டு மல்லிகையும் போகன் வில்லாவும். பிடித்த ராகம் மால் கோஸ். ஜம்பை தாளம். பிடித்த இலக்கியம் திருடர் கதைகள். ருசியானது கொள்ளு ரஸம்.

இப்படி நாலு வகைக் கூந்தல் அலங்காரத்தின் மாதிரிகளை, பிருகன்னளையாய் மாறிய அர்ஜுனனுக்கு நாரத மகாமுனிவர் அறிவித்தார். இவற்றைக் கற்றதனாலேயே பிருகன்னளை விராட ராஜாவின் அந்தப்புரத்தில் சிங்காரிக்கும் திறமைக்காகப் புகழ் பெற்றாள். இவற்றைப் படிப்பவர்களுக்கும் படிக்கக் கேட்டவர்களுக்கும் இம்மை மறுமைகளில் சுகம் உண்டாகும்.

## மகளின் சீர்திருத்தம்

ஒரு நாள் மாலையில் எங்கள் பதினாலு வயசுப் பெண் நேரங்கழித்துச் சாப்பாட்டுக்கு வந்தாள். உடனே நாங்கள் ஆளுக்கு ஆள் அவளைத் திட்டினோம். 'வீட்டு ஒழுங்கை மீறுகிறாயே,' 'ஏராளமாய் லிப்-ஸ்டிக் தடவிக்கொள்கிறாயே,' 'அறையை இப்படியா அலங்கோலமாய்ப் போட்டுவிட்டுப் போவாய்' என்றெல்லாம் தூற்றினோம். அவளும் எதிர்த்து, ''அடுக்குள் குப்பையை யெல்லாம் என் மீது கொட்டுகிறீர்களே நீங்கள். இது சரியா?'' என்றாள்.

அன்றுமுதல் அவள் என்ன தவறு செய்தாலும், அவளைத் திட்ட இதுதான் தருணம் என்று நாங்கள் எல்லாருமாய்ச் சேர்ந்துகொள்வதைக் கைவிட்டோம். மிகவும் நயமாகவே அவளுடைய பிசகைச் சொல்லுவோம். இது நல்ல பலன் தந்தது. தன் கடமைகளைச் சரியாய்ப் புரிவதில் அவள் அக்கறையாய் நடந்து வருகிறாள்.

—மிஸஸ் யங், ஈஸ்டன், 'பேரெண்ட்ஸ் மகஸீன்'.

## விஷயம் தெரிந்த மனிதன்

விஷயம் தெரிந்த மனிதனாக உங்களுக்குப் படுகிறவன் யார் தெரியுமா? உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் எவனுக்குத் தெரியுமோ அவன்தான்.

—'பைப் ட்ரீம்ஸ்'

# டிரெடில்

ஜெயகாந்தன்

தமக்கென்று தனியாக வகுத்துக்கொண்ட ஒரு பாணியில் கதை எழுதுகிறவர் ஜெயகாந்தன். இவருடைய 'ஒரு பிடி சோறு' என்ற புதிய சிறு கதைத் தொகுப்பிலிருந்து எடுத்தது இந்தக் கதை. இந்தத் தொகுப்பில் உள்ள அத்தனை கதைகளும் வேகத்தோடு இனிமை கலந்த தனி நடையில் பிரத்தியட்ச வாழ்க்கையை நேர்த்தியாகச் சித்திரிக்கின்றன.

டிரிங்..டிரிங்..டிங்..

- மை பிளேட் சுற்றுகிறது.

சர்ர்..சர்ர்..சர்...

- மை ரோலர்கள் மேலும் கீழும் ஓடுகின்றன.

டங்..டட்டங்க்!'

- இம்ப்ரஷன்!

டடக்..டடக்-டடக்..டடக்..

- மூங்கில் குச்சி போன்ற ஒரு கால் பெடலை மிதிக்கிறது - ஆம், அந்த யந்திரத்தின் உயிர் அதில் தான் இருக்கிறது!

இந்தச் சப்தபேத சம்மேளனத்தின் அர்த்தம்? - இருண்ட குகை போன்ற அந்தச் சிறிய அச்சுக்கூடம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதுதான்!

அந்த அச்சுக்கூடத்துக்கு வயசு இருபதுக்குமேல் ஆகிறது. அங்கே நடக்கிற சராசரி வேலை கலியாணப் பத்திரிகை அச்சடிப்பதுதான். சில சில சமயம் 'பில் புக்'குகள், 'லெட்டர் பேடு'கள், 'விஸிட்டிங் கார்டு'கள் இத்தியாதி வேலைகளும் இடம் பெறும். அங்கிருப்பதெல்லாம் அந்த 'டிரெடி'லைத் தவிர நாலைந்து 'ஜாப் டைப் கேஸ்'களும் ஒரு சிறிய 'கட்டிங் மெஷி'னுந்தான்! - சின்னப் பிரஸ்தானே? அப்படி, என்ன பிரமாத லாபம் கிடைத்துவிடப் போகிறது?

ஆனால், பிரஸ்ஸின் முதலாளியான முருகேச முதலியார் மட்டும் இருபது வருஷங்களுக்குப் பின் எப்படியோ தமக்கென்று ஒரு சின்ன வீடு கட்டிக்கொண்டு விட்டார்!

கம்பாஸிட்டர் + பைண்டர் + மெஷின்மேன் எல்லாம், அதோ, டிரெடிலின் அருகே நின்று 'வதக், வதக்' என்று காலை உதைத்துக் கொள்கிறானே விநாயக மூர்த்தி, அவன்தான்!

மாதம் இருபது ரூபாய்க்குப் பஞ்சமில்லை. சில சமயம் முதலியாரின் 'மூடு' நன்றாக இருந்தால், டீ குடிக்க 'நாஸ்டா' பண்ண என்ற பேரில் கிடைக்கும் எக்ஸ்ட்ரா வரும்படியையும் சேர்த்தால் நிச்சயம் மாதம் முப்பது ரூபாய்க்கு மோசமில்லை!

விநாயக மூர்த்தி அந்த அச்சுக்கூடத்தில் 'ஸ்டிக்' பிடித்துக்

காப்பிரைட்: ஒரு பிடி சோறு (தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு); வெளியிட்டது: புத்தகப் பூங்கா, 25, ஹாரிங்டன் சாலை, சென்னை-30 ரூ. 2-50.

'கம்போஸ்' செய்ய ஆரம்பித்தது பன்னிரண்டு வருஷங்களுக்கு முந்தி. அவன் முதல்முதல் செய்த கம்போஸ் ஒரு கலியாணப் பத்திரிகைதான். அன்று முதல் எத்தனையோ பேருக்கு அவன் கையால் எத்தனையோ விதமான கலியாணப் பத்திரிகைகள் அச்சடித்துக் கொடுத்திருக்கிறான். ஆனால் தனக்கு..!

'எத்தினி பேருக்கு நம்ப கையாலே கலியாண நோட்டீஸ் அடிச்சிக் குடுத்திருக்கோம்.. ஹ்ம்..' - இவ்விதம் நினைத்துப் பெருமூச்சு விடும் விநாயகத்துக்கு இப்போது வயசு முப்பது ஆகிறது.

'இந்த ஓட்டல்லே போடற ஆறணாச் சோத்தை எவ்வளவு நாளைக்குத் துன்னுக்கிட்டுக் கெடக்கறது?'...

விநாயகத்தின் கை 'பிரேக்'கை அழுத்திற்று; 'பெட'லை உதைத்த கால் நின்றது; டிரெடிலின் ஓட்டம் நின்றது...

அருகில் உள்ள மை டின்கள் வைக்கும் ஸ்டாண்டின் சந்தில் அவனுடைய விரல்கள் எதையோ துழாவின. விரலில் சிக்கிய பொடி மட்டையைப் பிரித்து ஒரு சிமிட்டா பொடியை உறிஞ்சியவுடன், பொடியைத் துடைத்த புறங்கை அவன் மூக்கின்மீது மையைப் பூசியது!

அதை அவன் கவனிக்கவில்லை. அருகே காயப் போட்டிருக்கும் பத்திரிகைகளில் ஒன்றை அவன் எடுத்துப் பார்த்தான்:

''மய்யிதான் இன்னா ஈவனா சப்ளை ஆயிருக்கு!... எதுக்கும் அந்தக் கீழ் ரோலரை மாத்திட்டா ஸம்முனு இருக்கும்.. இம்ப்ரஷன் கொஞ்சம் கொறைக்கலாமா?... த்ஸ.. உம்.. பரவாயில்லே.. ஐயையோ!.. இந்த எழுத்து இன்னா படலையே!... மொக்கையா, இன்னா எழவு?.. கொஞ்சம் ஒட்டிக்கினா சரியாப் பூடும்..''

இந்தச் சமயத்தில், ''ஏய், இன்னாடா மிசினை நிறுத்திட்டே? அந்த ஆளு இப்ப வந்துடுவாண்டா!'' என்று முதலியார் குரல் கொடுத்தார்.

''ஒரு நாலணா குடு. ஸார்! காத்தாலே நாஸ்டா பண்லே. போயிட்டு வந்து மிச்சத்தைப் போடறேன்..''

''சீக்கிரம் வா, வேலெ நெறையாக் கெடக்கு!'' என்று நாலணாவை எடுத்து மேசைமீது வைத்தார் முதலியார்.

''ஆவட்டும். ஸார்!''

இது அவனுடைய வழக்கமான பதில்.

காசை எடுத்துக்கொண்டு டீக் கடைக்கு நடந்தான்.

ஒரு நாள்.....

பிரஸ்ஸில் விநாயகத்தைத் தவிர வேறு யாருமில்லை.

அன்றைய வேலையில், இரண்டு கலியாணப் பத்திரிகைகளைக் கம்போஸ் செய்து 'புரூப்' போட்டு வைப்பதும், திருத்தி வைத்திருக்கும் வாழ்த்துப் பத்திரத்தைக் 'கரெக்ஷன்' செய்து அச்சேற்ற வேண்டியதுந்தான் பாக்கி.

''அதுக்கு வேறே பேப்பர் வெட்டணும்'' என்று முனகியபடியே டிரெடிலில் மாட்டியிருந்த 'செஸ்'ஸைக் கழற்றும்போது, அவனுக்குத் திடீரென்று ஓர் ஆசை, சாதாரண ஆசை, சிறு பிள்ளைத்தனமான ஆசை முளைத்தது.

செஸ்ஸைக் கழற்றி ஸ்டோன் மீது போட்டான். அதுவும் ஒரு கலியாணப் பத்திரிகைதான்! மேட்டரில் மாப்பிள்ளையின் பெயரை அடுக்கியிருந்த டைப்களைப் பிரஷ்ஷால் துடைத்தான். மை நீங்கிய வெள்ளீய அச்சுகள் பளபளத்தன.

'சிரஞ்சீவி ஸ்ரீதரனுக்கும்' என்ற எழுத்துக்கள் கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல் இடம் வலம் மாறித் தெரிந்தன.

'சிரஞ்சீவி ஸ்ரீதரனுக்கும்..'

'ஷூட்டிங் ஸ்டிக்'கை ஓரத்தில் நிறுத்தி 'மல்டி'க் கட்டையால் 'மடார், மடார்' என்று இரண்டு போடு போட்டு, வால் கட்டைகளைச் சற்றுத் தளர்த்திய பின், 'பிஞ்ச'ரை எடுத்து பார்டரை அடுத்திருந்த 'குவாடு'களை அழுத்தி, டைப்புகளை

நெம்பி, 'சிரஞ்சீவி' ஸ்ரீதரனுக்கும் என்ற பன்னிரண்டு எழுத்துக்களையும் லாகவமாக வரிசை குலையாமல் தூக்கிக் கேஸ் கட்டைமீது வைத்தான்.

அவன் உதடுகளில் லேசாக ஒரு குறும்புச் சிரிப்பு நெளிந்தது.

அவன் கைகள் பரபரவென்று வேறு பன்னிரண்டு எழுத்துக்களைக் கேஸிலிருந்து பொறுக்கி விரலிடுக்கில் நிறுத்தின.

பயல், சிரஞ்சீவியைச் சாப்பிட்டு விட்டான்!

கி. விநாயக மூர்த்திக்கும் என்று சேர்த்துப் பார்த்துத் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

'சிரஞ்சீவி ஸ்ரீதரனுக்கும்' இருந்த இடத்தில் 'கி. விநாயக மூர்த்திக்கும்' என்ற எழுத்துக்கள் இடம் பெற்றன.

ஸ்டோன்மீது கிடந்த செஸ்ஸை முடுக்கி, இரண்டு முறை தூக்கித் தூக்கித் தட்டிப் பார்த்துவிட்டு, டிரெடிலில் மாட்டினான். சற்று நேரம் மை இழைத்தபின் 'வேஸ்ட் ஷீட்' ஒன்றை எடுத்து டிரெடில் 'பெட்'டின்மீது வைத்து, சுருக்கம் நீங்குவதற்காக இரண்டு முறை விரலால் தடவி விட்டான்.

காகிதத்தில் சுருக்கம் இல்லாவிட்டால்கூட, பேப்பரை 'பெட்'டின் மீது வைத்ததும் டிரெடிலின் தாளகதிக்கு ஏற்றபடி அவசரத்தோடு அவசரமாய்க் காகிதத்தை ஒரு முறை தடவிக் கொடுப்பது அவனுடைய வழக்கம்!

அடுத்தாற்போல் இடது கை பிரேக்கை மாற்றியதும், டங்... டட்டட்டங்க் என்ற இம்ப்ரஷன் சப்தம் எழுந்தது.

'பெட்'டிலிருந்த காகிதத்தை எடுத்துப் பார்த்தான்.

'கி. விநாயக மூர்த்திக்கும் சௌபாக்கியவதி அநசூயாவுக்கும்' என்ற எழுத்துக்களைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தான்.

பத்திரிகையிலிருந்த பெற்றோர் பெயரோ, ஜாதிப் பட்டமோ அவனுடைய பிரக்ஞையில் இடம் பெறவே இல்லை!

'சரி; கையோட இதை டிஸ்டிரிபூட் போட்டுடுவோமே..'

செஸ்ஸைக் கழற்றித் துடைத்துச் சுத்தம் செய்து, மேட்டரை எடுத்துக் 'காலி'ப் பலகையில் வைத்துக்கொண்டு, டிஸ்டிரிபூட் போட முனைந்தான்.

''இன்னாடா, நீ பண்ற வேலையே ஏடாகோடமாக் கீதே! உன்னெ யார்ரா டிஸ்டிரிபூட் போடச் சொன்னாங்க?..நா இன்னா வேலெ சொல்லிட்டுப் போனேன், நீ இன்னா வேலெ செஞ்சிக்னு கீறே?..அதெ முடிச்சிப்பிட்டு அந்த வாய்த்துப் பத்திரத்தைக் கரெக்ஷன் செஞ்சி மிஷின்லே ஏத்திக்க..ஆமா, அது அவசரம்'' என்று முதலியார் இரைந்தார்.

''ஆவட்டும், ஸார்!'' என்று வேலையில் ஆழ்ந்தான் விநாயகம்.

''மணி இன்னா ஆனாலும் சர்த்தான், இன்னிக்கு அத்தெ முடிச்சிடணும்!..''

இது முதலியாரின் உத்தரவு.

மணி மூன்றுக்கு மேல் ஆகிவிட்டது. அச்சேற்றி முடித்த கலியாணப் பத்திரிகை மேட்டர் டிஸ்டிரிபூட் போட்டாகி விட்டது. வாழ்த்துப் பத்திர வேலை ஆக வேண்டும்.

கரங்கள் மும்முரமாய் வேலையில் முனைந்திருக்கின்றன; மனம் தனக்கும் ஒரு கலியாணப் பத்திரிகை அச்சடிக்கும் 'அந்த நாளில்' லயித்திருக்கிறது..

'சூளை அக்கா கையிலே சொன்னா. சொந்தத்திலே ஒரு பொண்ணெப் பார்த்து முடிச்சிடும்..'

சூளையில் விநாயகத்தின் ஒன்றுவிட்ட தமக்கை ஒருத்தி இருக்கிறாள்.

'ஹூம்.. பொண்ணுக்கா பஞ்சம்? பொழப்புக்குத்தான் பஞ்சம்!..மொதல்ல ஒரு நூறு ரூபாயாச்சும் வேணும். அப்புறம் மாசாமாசம் நாற்பது ரூபா வேணும்?..'

திடீரென்று அவனுக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்தது! சிரித்துவிட்டான்!

''சிரிப்பு இன்னாடா, சிரிப்பு?.. காலிப் பயலே!....வேலையைப்

பாருடா, கய்தே!'' என்று முதலியார் குரல் கொடுத்தார்.
''ஆவட்டும், ஸார்!''

இரவு மணி ஏழு!
டிரெடில் ஓடிக்கொண்டிருக்கிறது. இன்னும் வாழ்த்துப் பத்திரம் 'ஸ்டிரைக்' ஆகி முடியவில்லை. வீட்டுக்குப் புறப்பட்ட முதலியார், விநாயகத்தின் அருகே வந்து நின்று வேலையைக் கவனிக்கிறார். அவன் மேலெல்லாம் வியர்வைத் துளிகள் அரும்பி உதிர்ந்து வழிகின்றன,
டடக்..டடக்..டடக்..டடக்..
கால் வதக், வதக் என்று பெடலை உதைக்கிறது; கைகள் பறந்து பறந்து டிரெடிலில் பேப்பரைக் கொடுப்பதும் வாங்குவதுமாக இருக்கின்றன.
'பாவம், மாடுமாதிரி வேலை செய்யிறான்!' என்று மனசில் முனகிக்கொண்ட முதலியார், ''இந்தா, இதை ராத்திரிச் சாப்பாட்டுக்கு வச்சிக்க..இந்தா சாவி; வரும்போது பூட்டிக்கினு வா..நா போறேன்!'' என்று சாவியோடு ஓர் எட்டணா நாணயத்தையும் சேர்த்துக் கொடுத்தார்.
முதலாளியின் மனசைப் புரிந்துகொள்வதில் விநாயகம் அதிசமர்த்தன்.
''ஸார்!..'' என்று பல்லைக் காட்டினான்.
''இன்னடா, சும்மா சொல்லு?'' என்று முதலியார் சிரித்தார்.
டிரெடில் நின்றது!
''ஞாயித்திக்கெயமை எங்க அக்கா வூட்டுக்குப் போயிருந்தேன். ..அங்கே ஒரு பொண்ணு இருக்காம்...''
அதற்குமேல் அவனால் சொல்ல முடியாமல் போனதற்குக் காரணம், விஷயம் பொய் என்பதல்ல; வெட்கந்தான்!
''அடடே, கலியாண சமாச்சாரமா?..அடி சக்கை! நடக்க வேண்டியதுதான்!'' என்று முதலியாரும் குதூகலித்தார்.
''அதுக்கு அட்வான்ஸா ஒரு நூறு ரூபா..''
''உம்..உம்..அதுக்கென்ன; பார்ப்போம். நீ மத்த விஷயமெல்லாம் பேசி முடி!'' என்று சொன்னதும், விநாயகத்தின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை இல்லை.
வெளியில் போகும்போது, முதலியார் தமக்குள் சொல்லிக்கொண்டார்:
''பாவம், பயலுக்கு வயசாச்சி. பதினெட்டு வயசிலே நம்மகிட்டே வந்தவன்..நம்மைத் தவிர அவனுக்குத்தான் வேறே யாரு?..ஒரு கலியாணம்னு செஞ்சி வைக்க வேண்டியதுதான்!''

பிரஸ்ஸில் டிரெடில் ஓடிக்கொண்டிருக்கிறது.
டடக்..டடக்—டடக்..டடக்..
திடீரென்று விநாயகத்தின் பெருந்துடைக்கு மேலே அடிவயிற்றுக்குள்ளே, குடல் சரிந்து சுழன்றதுபோல் - குடல் குழாய் அறுந்து தொய்ந்ததுபோல் - ஒரு வேதனை..
''ஆ!'' என்று அவன் வாய் பிளந்தது; அவன் கால் டிரெடிலின் பெடலிலிருந்து 'படீ'ரென்று விலகியது.
கால் விலகிய வேகத்தில், தானே ஓடிய டிரெடிலின் பெடல் 'தட தட' என்று அதிர்ந்து ஓய்ந்தது!
விநாயகத்துக்கு மூச்சு அடைத்தது. கேஸ்மீது சாய்ந்து, பல்லைக் கடித்தபடி அடி வயிற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டான். நெஞ்சில் என்னவோ உருண்டு அடைப்பதுபோல் இருந்தது. மூச்சு விடவே திணறினான். மெள்ள மெள்ள நகர்ந்து அருகிலிருந்த பானையிலிருந்து ஒரு டம்ளர் தண்ணீர் எடுத்துக் குடித்தான்..
வலி குறைந்தது; ஆனால் வலித்தது!
'இன்னும் கொஞ்சந்தான்; போட்டு முடிச்சிட்டுப் போயிடலாமே..?'
முக்கி, முனகி, கால் மாற்றி, பெருமூச்செறிந்து, பல்லைக் கடித்தபடி, நிறுத்தி நிறுத்தி, ஒரு விதமாக வாழ்த்துப் பத்திரம் பூராவும் அடித்து முடித்துவிட்டான்.
டிரெடிலிலிருந்து செஸ்ஸைக் கழற்றக்கூடப் பொறுமை இல்லை..
கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு நடந்தான்.

நடக்க முடியவில்லை; வலி அதிகரித்தது..

வயிற்றில் ஏதோ ஒன்று, பெயர்ந்து வேறு எதனுடைய வழியிலோ வந்து அடைத்துக் கொண்டதுபோல்..

''அம்..மா..!''

அவனால் வலியைப் பொறுக்க முடியவில்லை.

துடித்துத் துடித்துச் சாடிப் போய் விழுந்தான்.

விநாயகத்துக்கு 'ஹெர்னியா' வாம்! டாக்டரும் முதலியாரும் சேர்ந்து அவனைச் சர்க்கார் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

அவனுக்கு ஒரு சுபயோக சுப தினத்தில் ஆப்பரேஷன் நடந்தது. அதைத் தொடர்ந்து காய்ச்சல் வந்தது. கடைசியில் ஒரு மாதத்துக்குப் பின் ஒரு விதமாய் அவனுக்கு விடுதலை கிடைத்தது!

ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறும்போது அவனுக்கு டாக்டர் சொன்ன புத்திமதி அவன் இருதயத்தினுள்ளே சப்தமில்லாமல் ஓர் அதிர்வேட்டை வெடித்தது!

''கல்யாணம் செய்துகொள்ளாதே!..உனக்கே தோணுது.. யாராவது கட்டாயப்படுத்தினாலும்..''

அவனுடைய காது அதற்கு மேல் எதையும் கிரகிக்கவில்லை.

விநாயகம் மீண்டும் வேலைக்கு வந்து விட்டான். இருண்ட குகைபோன்ற அந்தப் பிரஸ்ஸுக்குள் புகுந்து ஒரு மாசமாய்ப் பிரிந்திருந்த டிரெடிலைப் பார்த்தான்; கேஸைப் பார்த்தான்; ஸ்டிக்கைப் பார்த்தான்..

மனசில் என்ன தோன்றியதோ? டிரெடிலைக் கட்டிக்கொண்டு பெருமூச்செறிந்தான்..

''அதோ, அந்தக் கலியாணப் பத்திரிகை முடுக்கி வச்சிருக்கு, அதை மிஷின்லே ஏத்திக்கோ. நீ இல்லாம ஒரு வேலையும் நடக்கலேடா!..மத்தப் பசங்க எல்லாம் பிரயோசன மில்லே; ஒனக்கு அடுத்த மாசத்திலேருந்து சம்பளத்திலே பத்து ரூவா கூட்டியிருக்கேன். நீ கேட்டியே, கலியாணத்துக்குப் பணம்..பதினைஞ்சாம் தேதிக்கு மேலே வாங்கிக்க.. இன்னடா, சந்தோசந்தானே?'' என்று முதலியார் கண்களைச் சிமிட்டினார்.

அவன் தலையைத் திருப்பிக் கொண்டான்; அவனை அறியாமல் கைகளிரண்டும் முகத்தைப் புதைத்தன; உடல் குலுங்கியது.

அழுதானா?..

''பயலுக்கு ரொம்ப வெக்கம்!'' என்று சிரித்தார் முதலியார்.

அவன் மௌனமாக டிரெடிலின் அருகே சென்று யாரோ கம்போஸ் செய்து வைத்திருந்த யாரோ ஒருவருடைய கலியாணப் பத்திரிகையை மனசில் விருப்போ வெறுப்போ சற்றுமில்லாமல், யந்திரம் போல் மெஷினில் ஏற்றி, காகிதங்களை ஸ்டாண்டின் மீது எடுத்துக்கொண்டு, மை இழைக்க ஆரம்பித்தான்.

டடக்..டடக்..

அவனுடைய கால் பெடலை மிதித்தது.

டங்...டட்டங்..!

இம்ப்ரஷன்..

அச்சில் வந்தது ஒரு கலியாணப் பத்திரிகைதான்!

மெஷினை நிறுத்தினான்; கேஸ்களுக்கிடையில் செருகி வைத்திருந்த ஒரு காகிதத்தை எடுத்துப் பார்த்தான்..

'கி. விநாயக மூர்த்திக்கும் சௌபாக்கியவதி அநசூயாவுக்கும்.'

ஆமாம்; அந்த 'வேஸ்ட் ஷீட்'!

அன்று வயிறு குலுங்க அவனைச் சிரிக்க வைத்த அந்த விளையாட்டுப் பத்திரிகைதான்..

அதன்மீது, அவனுடைய கண்களில் ஊற்றுப் போல் சுரந்து கசிந்த இரண்டு வெப்பமிக்க கண்ணீர்த் துளிகள் விழுந்து தெறித்தன!..

''இன்னடா விநாயகம், மிஷின் நிக்குது..அவன் வந்துடுவானே"... அதுக்குள்ளே முடிச்சிடணும்!'' என்றார் முதலியார்.

''ஆவட்டும், ஸார்..!''

டடக்..டடக்—டடக்..டட...

ஆம்; இரண்டு 'டிரெடில்'களும் இயங்க ஆரம்பித்துவிட்டன!

ஆணும் பெண்ணும் தங்கள் குஞ்சுக ளிடத்தில் பரிவு காட்டும் பறவையினம்:

# அலையும் குரல் குயில்

## ஹ்யூ எம். ஹால்லிடே

கூறுப்பு அலகுள்ள குயிலின் முட்டை ஒன்று முள் புதரில் ஐந்தாறு சுள்ளிகளின்மேல் இருந்தது; இதைப் பார்த்ததும், 'குயில் எப்படியோ இந்த இடத்தைத் தேடிப் பிடித்ததே!' என்று அதன் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தேன். குயிலின் போக்கே அலாதி! அதை ஆராய்ந்தறிய யாராலும் முடியாது. தான் படுசுட்டி என்பதை எவ்வளவு அலட்சியமாக நிரூபித்துக் காட்டிவிடுகிறது தெரியுமா?

ஐரோப்பியக் குயில்கள் பிற பறவைகளின் கூட்டில் முட்டையிடும். கனேடியக் குயில்கள் தாமே கூடுகட்டிக் குஞ்சு பொரிக்கும். இருந்தாலும், அவைகளும் விநோதமானவை; சஞ்சல சுபாவம் உள்ளவை. பருவநிலை சரியாக இருக்கும் சந்தர்ப்பமாகப் பார்த்துக் குயில் கூடுகளைத் தேடிச் செல்வது நல்லது. அது கூவுவதோ, பாடுவதோ தனித் தினுசாக இருக்கும்; மே மாதவாக்கில் இப்படிக் கூவும்; அப்போதே குயில் கூடு எங்கே இருக்கிறது என்று கண்டு பிடிக்கலாம்; செப்டம்பர் மாசவாக்கில் மற்றப் பறவைகளெல்லாம் குஞ்சு பொரித்து அவற்றை வளர்த்துப் பெரியவையாக்கிய பிற்பாடும் குயில்களின் கூடுகள் தட்டுப்படும்.

மற்றப் பறவைகளைப்போலவே குயில்களும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்போது எவ்வளவோ தொல்லைப்பட வேண்டியிருக்கிறது. கூடு கட்டின விதம் மோசமாக இருப்பதனாலே இப்படித் தொல்லை ஏற்படுவதாகச் சொல்வதற்கில்லை; இயற்கையாகத் தோன்றும் பகையே இவ்வளவுக்கும் காரணம். இருந்தாலும், குயிலுக்கு அதிருஷ்டம் இருக்கிறது.

முதுகெலும்புள்ள 'டெண்ட் கேட்டெர்பில்லர்' என்ற புழுக்களை உண்ணும் பறவை வகையைச் சேர்ந்தது குயில். குயில் இவைகளை ஏராளமாய் உண்ணுவதைப் பார்த்தால்தான் ஊர்ந்து நெளியும் இந்த விகாரமான புழுக்கள் குயிலுக்கு எவ்வளவு அவசியம் என்று புரியும். ஆகவே, குயிலுக்காகவாவது இப்படிப் புழுக்கள் இருப்பது நல்லதுதானே?

'வேனில் காலத்தில் குயில் போன்ற ஒரு விசித்திரமான பறவையைக் காணவிட்டால் வெறிச்சென்று என்னவோ மாதிரி தானே இருக்கும்?' என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. தன் நீண்ட வாலும், மெல்லிய இறக்கைகளும், ஒல்லியான உடம்பும் குத்துச் செடிகளில் மறைந்ததும் அது பாடத் தொடங்கிவிடும். அதைப் பார்த்தால், ஏதோ நம்மிடமிருந்து தப்பி எங்கோ பத்திரமாக இருந்துகொண்டு நம்மைத் திட்டுகிறமாதிரி இருக்கும்.

தொடர்ந்து குயில் எட்டு அல்லது பத்துத் தடவை 'க்ளக்' 'க்ளக்' என்று உரக்கக் கூவுவது கிராமாந்தரங்களில் சர்வசகஜம்; இது மழை வருவதற்கும் அறிகுறிதான். அதன் 'அலையும் குரலை'க் கேட்டு நமக்குப் பழக்கமாகியிருந்தால்தான் இங்கே குயில் இருக்கிறது என்று கண்டுகொள்ள முடியும்; இல்லாவிட்டால், அது சாத்தியமில்லை. ஆகவே, குயில்கள் ஊர் ஊராகச் சுற்றும் இயல்புள்ள பறவைகளாக இருந்தாலும், நாம் எதிர்பார்ப்பதைவிட அவை நம் அண்டை அயலில் ஏராளமாக

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 17-8-'58), கல்கத்தா.

இருக்கலாம். ஒண்டேரியோ மாகாணத்தின் காடடர்ந்த பகுதியில் சில பருவங்களிலே பாட்டையில் மற்றப் பறவைகளைவிட ஏராளமான குயில்கள் செத்துக் கிடப்பதைப் பார்த்தேன். பாட்டையின் அக்கம் பக்கம் அடர்ந்த காட்டில் தாழ்ந்த புதர்களில் இந்தக் குயில்கள் வாழும். பாட்டைக்குக் குறுக்காகப் பறக்கும்போது இவைகளின் விசேஷ சாமர்த்தியமெல்லாம் மோட்டாரின் வேகத்துக்கு முன் பலிப்பதில்லை என்று இதிலிருந்தே தெரியும்.



குயில் வாழும் புதரை நெருங்கி வந்து கவனித்தால் பசுமை தீட்டிய வெண்கலம் போன்ற அதன் உருவம் இலைச் செறிவுக்கிடையே மறைவதைக் காணலாம். எந்தப் பக்கமாகத் தொடர்ந்து போய் அதைக் கவனிக்கலாம் என்று புரியாமல் திகைக்கும்போது, உரத்து அது கூவுவது காதில் ஒலிக்கும். மேலே பார்த்தால், அடர்ந்த புதரில் சுமார் பத்தே அடி தூரத்தில், அது ஒரு திகிலும் இராமல் மறைந்துகொண்டிருப்பது தெரியும். ஆனல் அதன் பின்பாகந்தான் நமக்குத் தெரியும்; அதைப் பார்த்தால் எங்கோ பறக்கத் தயாராக இருப்பதுபோல் இருக்கும் தலையை ஒரு பக்கமாகத் திருப்பிக்கொண்டு, விழிகளைச் சுற்றிச் சிவப்பு அல்லது மஞ்சள் வட்டம் திகழ (இது குயிலின் வகையைப் பொறுத்தது), நம் பக்கமே கூர்ந்து கவனிக்கும். அந்தப் பார்வையில் பேராவல், சந்தேகம் இரண்டும் கலந்திருக்கும். இன்னும் சற்று நெருங்கி வந்து அதைக் கவனிக்கப் போனல், புதர் வழியாக எங்கோ சட்டென்று மறைந்துவிடும். பிறகு தொலைவில் அது, ''கவ், கவ், கவ், கூ கூ கூ, கவ், கூ, கூ, கவ், கவ்'' என்று கூவுவது கேட்கும்.

குயிலில் மஞ்சள் அலகுள்ளது, கறுப்பு அலகுள்ளது என்று இரண்டு வகை உண்டு. ஒரு வகைக் குயிலின் பாட்டும் ஸ்வர வரிசைகளும் மனசில் நன்ருகப் பதிந்திருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பேன்; அப்புறம் கவனித்தால், இவ்வளவு நேரமும் வேறு வகைக் குயில் பாடினதைத்தான் கேட்டுக்கொண்டிருந்தேன் என்று தெரியும். ஒரு நண்பர், '' 'கவ்-கவ்-கவ்' என்று மஞ்சள் அலகுள்ள குயில் கூவும்; கறுப்பு அலகுள்ள குயிலோ 'கு-கு-கு' என்று கூவும்'' என்று பாகுபடுத்திக் கூறுகிருர். ஆனல் எனக்கு ஒன்றுதான் நிச்சயமாகத் தெரியும்: பாடுவது குயில் என்பதுதான். ஒரு மறைவில் உட்கார்ந்து பார்ப்பதற்கு வசதியான சிறு துளைகளின் வழியாகக் கவனித்துக்கொண்டிருந்தேன். மஞ்சள் அலகுள்ள குயில் ஒன்று பிரமாதமாகப் பாடிக்கொண்டிருந்தது. திருப்பித் திருப்பி

அதே மாதிரி பாடியது. அதைக் குறித்து வைத்துக்கொண்டேன். இதோ பாருங்களேன்: 'க்-க்-க்-க்-க்-க்-க், கு-கு-கு-கு-கு-கு, கவ்-கவ்-கவ்-கவ், க்ளியோப், க்ளியோப்-க்ளியோப்'.- இதுதான். கறுப்பு அலகுள்ள குயில் சில சமயம் தொடர்ந்து வேகமாக, 'குக்' 'குக்' என்று கூவுவது உண்டு; அல்லது 'கு-கு-கு, கு-கு-கு, கு-கு-கு' என்று கூவலாம்; 'கவ்-கவ்-கவ்' என்றும் கூவும்; மஞ்சள் அலகுள்ள குயில் கூவுவதைவிட இது ஓரளவு மென்மையாக இருக்கும்.

மஞ்சள் அலகுள்ள குயில் பாடும் விதமே கறுப்பு அலகுள்ள குயில் பாடுவதைக் கேட்டதும், 'இதென்ன, கறுப்பு அலகுள்ள குயில் ஏதாவது கவன மறதியாக இருந்த சமயத்தில் மஞ்சள் அலகுள்ள குயிலின் கூட்டில் முட்டை இட்டுவிட்டதோ? அப்புறம் அந்தக் கறுப்பு அலகுக் குயிலின் குஞ்சை மஞ்சள் அலகுக் குயில் வளர்க்கவே இந்த மாதிரி பாடக் கற்றுக்கொண்டதோ?' என்று தான் ஆச்சரியப்பட்டேன். இப்படி ஒரு வகைக் குயில் பாடுவது போலவே இன்னொரு வகைக் குயிலும் பாடுவது சகஜம். இளவேனிலின்போது பல வார காலம் இப்படி மாலை நேரத்திலெல்லாம் தொடர்ந்து சிட்டுக் குருவிபோல் ராபின் என்ற ராட்டினக் குருவி பாடக் கேட்டிருக்கிறேன். ஆகவே, ஒரு வகைக் குயில் பாடுவதையே இன்னொரு வகைக் குயிலும் பாடுவதில் விநோதம் என்ன? ஜூன், ஜூலை மாதங்களில் வெட்ட வெளியிலே இரவுப் பொழுதைக் கழித்துப் பாருங்கள். குயிலின் தொண்டையிலிருந்து எழும் ஸ்வர வரிசைகளை அடிக்கடி கேட்கலாம்; இதிலிருந்து குயில் இரவிலும் நன்றாகச் சுற்றி அலைகிறது என்று தெரியும். அது நாடோடியாகத் திரியும் பறவை; மற்றப் பறவைகளைப்போல் அப்படி ஒன்றும் ஒரே இடத்தில் பற்றுதல் கொண்டு நிலைத்து இருப்பதில்லை. சென்ற ஆண்டில் குயில் இருந்த இடத்தில் இந்த ஆண்டு இராதிருக்கலாம்.

'குயில் எதிலும் அக்கறையில்லாமலும் சோம்பியும் வாழும் பறவை வகையைச் சேர்ந்தது; நேரம், இடம் இவைகளைப்பற்றி அதற்குக் கவலையே இல்லை' என்று தோன்றும். கூட்டில் எத்தனை நேரமானாலும் உட்கார்ந்திருக்கும்; வலியப் பிடித்துத் தள்ளினாலொழிய நகராது. ஏன், தன் முட்டை, குஞ்சு இவைகளைக்கூட மறந்துவிட்டிருப்பதுபோலத்தான் இருக்கும். அது இன்னதுதான் செய்யும் என்று சொல்வதற்கில்லை. சில சமயம் குஞ்சுகளைக் கவனித்துக்கொண்டும், சில சமயம் முட்டைகளை அடை காத்துக்கொண்டும் இருக்கும். பறவைகளுக்குரிய பழக்க வழக்கங்களையும் குயில் அநுசரிப்பதில்லை; தன் இஷ்டம் போல் நடந்துகொள்ளும். ஆகவே, அதன் போக்கைக் கவனிக்க வெகு ரசமாக இருக்கும். ஆனாலும், மிகவும் நெருங்கி வந்து கவனித்தால், அதுவும் ஏதாவது புதருக்குள்ளிருந்து நம்மையே பார்த்துக்கொண்டிருக்கும்; நாம் வந்த இடத்தை விட்டு மறைகிற வரையில் அசையாது. அப்புறந்தான் தன் அலுவலைக் கவனிக்கக் கிளம்பும். ஏற்கனவே மறைத்திருக்கும் தட்டி அல்லது புதருக்குள்ளிருந்து நாம் கவனிப்பதுதான் பொருத்தமானது; இந்தமாதிரி சஞ்சல சுபாவம் உடைய பறவைகளின் போக்கை அப்போதுதான் நன்றாகக் கவனிக்க முடியும்.

கறுப்பு அலகுக் குயிலின் கூட்டுக்குச் சரியாக மூன்றடி தொலைவில் ஒரு தட்டிக்குப் பின் ஒளிந்து கொண்டு ஒரு சமயம் கவனித்தேன். அப்போது பெட்டைக் குயில், ஒரு வெட்டுக்கிளியை அலகில் எடுத்து வந்தது. மறுபடியும் அங்கிருந்து புறப்பட்டுக் கிளம்பியதும் திரும்பி வந்து பல நிமிஷ நேரம் குஞ்சுகளையே கவனித்துக்கொண்டிருந்தது. குயில் கூட்டைச் சுற்றி, எல்லாம் முன்போலவேதான் இருந்தன. நான் ஒளிந்திருக்கிறேன் என்று சந்தேகப்படுவதற்கும் ஒன்றுமில்லை. ஆனாலும், ஆண் குயில் முன்போல் அமைதியாக இல்லை;

ஏதோ அதிருப்தியோடு இருந்தது. அந்தத் தட்டியையே அவநம்பிக் கையோடு பார்த்துக்கொண் டிருந் தது. இரையோடு கூட்டண்டை வந்தபோது பரபரப்போடு இருந் தது; நடுநடுவே குஞ்சுகளின் வாயில் இரையை வைக்கும்போது துணிவு குன்றிவிடும். பலதரம் குஞ்சுகளை நெருங்கப் பார்த்துக் கடைசியில் கப் என்று ஒரு தாவு தாவி இரை கொடுத்தது.

இரண்டும் குஞ்சுகளிடம் பற்று உள்ளவை; குஞ்சுகளை அக்கறை யாகக் கவனிப்பவை. இந்தமாதிரி பறவையைப் போய், "வேறு பறவையின் கூட்டில் முட்டையிட்டு விட்டுப் போய்விடும்" என்று சொல்கிறார்களே, அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. பறவை களைப்பற்றிய பல புத்தகங்களில் குயில்கள் இந்தமாதிரி செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் வேண்டுமென்றே அவை இப்படிச் செய்வதாக நம்ப முடியவில்லை. பாடும் பறவைகள் பலவற்றின் கூடு களைப் போய்ப் பார்த்திருக்கிறேன். அப்படி ஒன்றும் குயிலின் முட்டை எதையும் வேறு பறவையின் கூட் டில் காணவில்லை. குயிலின் கூட் டில்தான் குயில் முட்டை இருந் தது. எந்த இடத்தில் கட்டினாலும் பரவாயில்லை என்பது போல் பல குயில்கள் அவ்வளவு அற்பமாய்க் கூடு கட்டுகின்றன; இருந்தாலும், ஏற்கனவே கட்டி வைத்திருக்கும் கூடும் அவைகளுக்கு மிகவும் வசதி யாக இருக்கலாம். குயிலுக்குக் குஞ்சு களிடம் நல்ல பாசம் இருப்பதாகவே தெரிகிறது. கனேடியக் குயில் வேறு பறவைகளிடம் தன் முட்டைகளை வைத்து வளரும்படி விடுவதே இல்லை. ஆனால் குயில் இனத்தைச் சேர்ந்த கவ்பேர்டு என்ற பறவை யும், ஐரோப்பியக் குயிலும் இப்படி வேறு பறவைகளின் கூட்டில் முட்டையை வைத்து விடும். கனேடியக் குயிலின் குஞ்சுகள் விரைவிலேயே வளர்ச்சி பெற்றுத் தேர்ந்து விடுகின்றன. ஒரே வாரத்துக் குஞ்சு கூட்டை விட்டு வெளியேறிவிடும்; அப்புறம் கூட் டுக்குத் திரும்பாது. 'இரண்டே வாரத்துக் குஞ்சுதான்; பறக்க முடி யாது' என்றாலும், கிளையின் மேல் அது ஏறும்போது பார்க்கவேண் டும்! ஆச்சரியமாக இருக்கும்; கம் பங் கூத்தாடி உடற்பயிற்சி செய்து காட்டுவதுபோல் குச்சிக்கிளைகளின் வழியாக நடந்து செல்லும். ஏழு நாளைக் குயில்குஞ்சு ஒன்று கால் தவறி விழப்போயிற்று; ஒரு காலால் மேல் குச்சியில் தொங்கிக் கொண்டே, இன்னொரு காலால் கீழ்க்குச்சி ஒன்றை எட் டிப் பிடித்தது. தன் அலகு, கழுத்து, இறக்கை இவைகளைக் கொண்டு சமாளித்துக் கீழ்க் குச்சி யில் நின்றது. குயில் குஞ்சுகளைப் பொரித்த கையோடு பார்க்க வேண்டும்; கன்னங் கறேலென்று சின்னஞ் சிறுக்கக் குஞ்சு இருக்க வேண்டிய ரீதியில் இருந்தாலும் பார்க்க வேடிக்கையாக இருக்கும். வாயில் உறிஞ்சும் கிண்ணங்கள் என்று சொல்லும் சிறு சதை வளர்ச்சிகள் இருக்கும்; எனக்குத் தெரிந்தமட்டும் அவை எதற்கும் பயன்படுவதாகப் புலப்படவில்லை. 'குறி வைக்கும் இடங்கள்' - அதா வது பெரிய குயில்கள் இரையைச் செருகுவதற்கு ஏற்ற இடங்கள் - என்றும் இந்தச் சதை வளர்ச்சி களுக்குப் பெயர் வழங்குகிறது.

குயில் குஞ்சுகள் விறுவிறு என்று வளர்ந்துவிடுகின்றன. உடம்பு முழுவதும் கறுப்புச் சிறகுகள் வளர்ந்து, சிறு முள்ளம் பன்றி போல் தோன்றும். ஏன், சில சம யம் முள்ளம்பன்றி தன்னைக் காத்துக்கொள்ள மயிரைக் குத் திட்டு வைத்துக்கொள்வதுபோல் இவையும் அதே காரணத்துக்காகச் சிறகைக் குத்திட்டு நிறுத்துவ துண்டு. பொரித்த ஏழெட்டு நாளைக் கெல்லாம் குஞ்சின் சிறகுகள் உள்ளே ஏதோ அழுத்தம் காரண மாகவும், சிறகுக் காம்புகள் உளுத் துப்போவதாலும் வெடித்து உதிர்ந்து விடுகின்றன; விகாரமாய் முதுகெலும்பு குத்திட்டதுபோல் நின்ற குஞ்சு, சில மணி நேரத்துக் கெல்லாம் தன் பெற்றோர்களைப் போலவே கண்ணைக் கவரும் மான் நிறச் சிறகுகளுடன் விளங்குகிறது; வால் குட்டையாய், சிறகின் நிறம் சற்றுக் கருமை மிகுந்திருப்பது

தான் இதற்கும் பெரிய குயிலுக்கும் உள்ள வித்தியாசம். மற்றப்படி, பெரிய குயில்களைப் போலவே ஒவ்வொரு காலிலும் நாலு விரல்களும், நீண்டு சற்றே வளைந்த அலகும் இதற்கு உண்டு; அதே மாதிரிதான் முதுகெலும்புள்ள புழுக்களையும் ஏராளமாக இது தின்கிறது. மற்றப் பெரும்பாலான பறவைகள் இந்தப் புழுக்களை உண்பதில்லை; இவற்றைக் கண்டால் அவ்வளவு வெறுப்பு!

குடியானவர்களின் சிறந்த நண்பன் குயில். மேட்டு நிலத்திலும், குத்துச் செடிகளிலும், புதர் அடர்ந்த பழத்தோட்டங்களிலும் அது கூடு கட்டும். சிலந்திப் புழுவோ, 'டெண்ட் கேட்டெர் பில்லர்' போன்ற புழுக்களோ, இலையை அரித்துத் தின்னும் பிற புழுக்களோ ஏராளமாகத் தலையெடுக்கும்போது குயில் தன் குடும்பத்தோடு வந்து அவைகளை ஆசை தீர உண்ணும். இந்தப் புழுக்களுக்கு முதுகெலும்பு பாதுகாப்பாக அமைந்திருக்கிறது. முதுகெலும்பு படைத்த புழுக்களைத் தின்று ஜீரணித்துக்கொள்ள வசதியான (ஜீரண) உறுப்பு அமைந்த பறவை வகையைச் சேர்ந்தது குயில். வயிறு நிறைய இப்படி எலும்பு குவிந்துவிட்டால் அதை எப்படியோ ஒரு விதமாக வெளியே தள்ளிவிடுகிறது!

## அணுவிஞ்ஞானிகளின் சம்பாஷணை

நெவாடா மாகாணத்தில் உள்ள லாஸ் வேகாஸ் என்ற இடத்தில் அணு விஞ்ஞானிகளின் மகாநாடு ஒன்று சமீபத்தில் நடந்தது. அப்போது, அவர்களில் ஒருவர் ஓய்ந்த வேளைகளிலெல்லாம் சூதாட்ட மேஜையை விட்டு அகலாமல் பொழுது போக்கிக்கொண்டிருந்தார்.

அவருடைய சகாக்கள் சம்பாஷணை செய்துகொண்டிருந்தபோது, ''ஹாட்ச் கிஸ் அவர்களைப் பார்த்தீர்களா? நாளை என்ற ஒன்றே இல்லை என்பது போல் அல்லவா விளையாடிக்கொண்டிருக்கிறார்'' என்றார் ஒருவர்.

"இருக்கலாம். ஒருகால் அவருக்கு ஏதோ விஷயம் தெரிந்திருக்கலாம்'' என்று கவலை பாயப் பதில் அளித்தார் இன்னொருவர்.

—ஸ்டான்லீ டெல்க், 'காரொனெட்.'

## மறு கன்னத்திலும் அறைந்தால்—

ஒரு நாள் இரவு ஒரு பாதிரியார் பிரசங்கம் செய்தார். 'மறு கன்னத்தைக் காட்டு' என்ற பைபிள் வாக்கியத்தை முதலில் படித்தார். பிறகு பைபிளை மூடி வைத்துவிட்டு விளக்கம் செய்யத் தொடங்கினார்.

''ஹூம். கேளுங்கள், சகோதர சகோதரிகளே, எதிரி உங்களை ஒரு கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டுங்கள் என்று நம்முடைய திருமறை சொல்கிறது. அந்தக் கன்னத்திலும் அவன் உங்களை அறைய விடுங்கள் என்பதே அதன் கருத்து. ஆனால், சகோதர சகோதரிகளே, மூன்றாவது அறையை-நான் சொல்லுகிறேன், மூன்றாவது அறையை - அடுத்தாற்போல் கொடுக்கவேண்டியது உங்கள் முறை.''

—லியோ கோல்டன், 'டாக்டர் போட்ட கட்டளை'.

# வெறி பிடித்த புலி

மூலம்: **ஸ்ரீராம் சர்மா** : : தமிழ்: **சௌரி**

ஆசிரியர் ஒரு வேட்டை நிபுணர். ஹிந்தியில் 'ஷிகாரீ ஸாஹித்யம்' (வேட்டை இலக்கியம்) இவரால் பிரபலம் அடைந்து வருகிறது. 'மாடர்ன் ரெவ்யூ' ஸ்தாபனத்தாரின் பிரபல ஹிந்தி இலக்கியப் பத்திரிகையான 'விசால் பாரத்'தின் பொறுப்பாசிரியர் இவர்.

கூடவால் பகுதியைச் சேர்ந்த டிஹரி என்ற ஊரில் ஹோலி பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடினார்கள். குளிர்காலத்தில் ஏற்பட்டிருந்த சுணக்கம் நீங்கிச் சுறுசுறுப்புப் பரவிக்கொண்டிருந்தது. மனிதர்கள், விலங்குகள், மரஞ் செடி கொடிகள் - எல்லாவற்றிலுமே யௌவன மதர்ப்புக் கிளர்ந்தது. புள்ளினங்கள் உல்லாசக் குரலில் கூவின. காடுகளும் புதர்களும் மலைச்சாரல்களுமாகப் பரந்து விளங்கும் இயற்கை அன்னை, குளிரும் கார்காலத்து உறக்கம் கலைந்து, கொட்டாவி விட்டாள். பாகீரதியும் அதன் கிளைநதி பிலகங்காவும் மிக ஒய்யாரமாகப் பிரவகித்துக்கொண்டிருந்தன.

இந்தப் பிராந்தியத்தில் 'ஷிமலாஸு' என்றொரு சிறு பகுதி; காடும் குகையும், புதரும் உள்ள மலைப் பிரதேசம் இது. ஒரு சிற்றருவியின் அருகே அமைந்திருந்த குகையொன்றின் வாயிலில் பெண் சிறுத்தை படுத்திருந்தது. (இதைச் 'சஞ்சலா' என்று அழைப்போம்.) படுத்திருந்த சஞ்சலா களைப்பும் சோர்வுமாகத் தென்பட்டது. நேற்று மாலை முதல் அது வேட்டைக்குப் போகவில்லை. அதனிடம் தோழமை கொண்ட ஆண் புலியான பாங்கடு தனியாகவே



காப்பிரைட்: 'ஜங்கல் கே ஜீவ்' - வன விலங்குகள் (ஹிந்திப் புஸ்தகம்); வெளியிட்டோர்: விசால் பாரத் புக் டிப்போ, கல்கத்தா. விலை ரூ. 5.

சென்றிருக்கிறது. பிரசவித்த சிரமம் சஞ்சலாவைச் சற்றுக் களைப்படையச் செய்திருக்கிறது; அலுப்புடன், குகைத் துவாரத்திலேயே படுத்திருந்தது. நான்கு குட்டிகளும் மூடிய கண்களுடன், இலக்குத் தெரிந்துகொண்டு, தாய்ப் பால் பருகிக்கொண் டிருந்தன.

நடுப்பகல் வரைக்கும் சஞ்சலா அந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. வெயில் சற்று உறைக்கத் தொடங்கியதும், மெள்ள எழுந்தது. தொலைவில் மனித நடமாட்டம் கேட்டது. இளம் உறுமல் மூலம் தன் எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டிக்கொண்டே, குட்டிகளைச் சஞ்சலா லாகவமாகக் கவ்வியது; ஒவ்வொன்றாகக் குகைக்குள் கொண்டு போய் விட்டது. மறுபடியும் வெளியே வந்து, சற்று நோட்டம் பார்த்து, பிறகு குகைக்குள்ளேயே திரும்பித் தன் குட்டிகளுக்கு அருகில் படுத்துக்கொண்டது.

சஞ்சலாவுக்குத் துணையான பாங்கடு பதுங்கிப் பதுங்கிக் குகைத் துவாரத்துக்கு வந்து சேர்ந்தது. ஆசைத் துணைவியையும் அன்புச் செல்வங்களையும் காண வேண்டும், கொஞ்ச வேண்டும் என்ற துடிப்பு அதற்கு. கிட்டத்தில் வந்ததும், சஞ்சலா உறுமிக்கொண்டே பாங்கடுவை அறையப் போயிற்று. பாங்கடு சட்டென்று உடலைக் குறுக்கிக் குனிந்துகொண்டதால் அடிபடாமல் தப்பியது. சஞ்சலா உறுமியபடியே எச்சரித்தது: ''இந்தப் பக்கம் நெருங்க உனக்கு இப்போது உரிமை கிடையாது, ஜாக்கிரதை!''

பின்வாங்கிய பாங்கடு, 'தலைவி'யின் ஆணைக்கு அடி பணிந்து, தூர இருந்தபடியே அதையும் குட்டிகளையும் கனிவுடன் பார்த்துக்கொண்டிருந்தது. சிறிது நேரமானதும், தன் அலுவலை நாடி வனத்துக்குள் மறைந்தது.

சஞ்சலா பெற்ற நான்கு குட்டிகளில், முதலில் பிறந்தது பநாபர். இது பிறந்த அரை மணி நேரத்துக்குப் பிறகு, இதற்கு ஒரு தங்கை பிறந்தது; அதற்குப்பின் இரு தம்பிகள் பிறந்தன.

எட்டாம் நாள், தாயிடம் பநாபர் பால் குடித்துக்கொண்டிருக்கும்போது, திடீரென்று அதற்கு விழிப்பு ஏற்பட்டது. முதல்முதலாக அது உலகத்தைக் கண்டது. அதற்கு இருப்புக் கொள்ளவில்லை. சஞ்சலா இப்போது பாங்கடுவோடு வேட்டைக்குச் செல்லத் தொடங்கியது. போகும்போது, உறுமல் மொழியில், குட்டியிடம் 'இந்தக் குகையை விட்டு வெளியே போய் விடாதே' என்று எச்சரித்துவிட்டுப் போவது வழக்கம். சில தினங்களுக்கெல்லாம், பிற சிறுத்தைக் குட்டிகளுக்கும் கண் திறந்தது. அவற்றுடன் பநாபர் விளையாடும்.

ஒரு மாதம் ஆயிற்று. ஒரு நாள் தாய் வர நேரமானதால், நான்கு சிறுத்தைக் குட்டிகளும் குகை வாயிலுக்கு வந்து காத்திருந்தன. தாய் தந்தையுடன் குகைக்குச் சற்றுத் தூரம் வரையில் அவை நடமாடி யிருக்கின்றன; ஆனால், தனியாகக் குகையை விட்டு ஓர் அடி கூட நகரக்கூடாதென்று தாய் உத்தரவிட்டிருந்தது.

அப்போது, ஒரு கருநாகம் எதிரே போய்க்கொண் டிருந்தது. பநாபரின் 'தம்பி'களில் ஒன்று வேடிக்கை பார்க்க அதன் பக்கம் போய் நின்றது. எதிரே நிற்கும் விலங்குக் குட்டியைக் கண்டதும், கருநாகம் ரோஷத்துடன் சீறிக்கொண்டு தாக்கியது. கடிபட்ட சிறுத்தைக் குட்டி கைகளைத் தரையில் அறைந்தது; பாம்பின் உடலில் ஓர் அடி லேசாகப் படவே, அது உக்கிரத்துடன் மறுபடியும் தாக்கியது. சிறுத்தைக் குட்டி தரையில் புரண்டு, தீனமாகக் கத்தியது. பநாபரும் மற்ற இரு உடன் பிறப்புக்களும் இந்த அவகேட்டைப் பார்த்துக்கொண் டிருந்தன. நெருங்கி வரத் துணிவு வரவில்லை. இந்தச் சமயத்தில், சஞ்சலாவும் பாங்கடுவும் வந்தன. சஞ்சலா நடந்ததை அறிந்துகொண்டு, ஆக்கிரோஷத்துடன் கருநாகத்தின் கழுத்தில் ஓர் அறை வைத்தது; அவ்வளவுதான், துடிதுடித்துக்



கொண்டு அந்தப் பாம்பு உயிரை விட்டது. கடிபட்ட சிறுத்தைக் குட்டியும் சிறிது நேரத்துக்கெல்லாம் இறந்துவிட்டது. சஞ்சலா தன் குட்டிகளைப் பார்த்து, சினத்துடன் உறுமியது: ''உங்களை யார் இங்கே வரச் சொன்னது? சாக ஆசையாக இருக்கிறதா?''

மறு நாளிலிருந்து, சஞ்சலா தன் குட்டிகளுக்கு வேட்டைப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தது. தினம் அவைகளைத் தன்னுடன் அழைத்துப் போகும். முன்னால் பாங்கடு, நடுவில் குட்டிகள், பின்னால் சஞ்சலா இப்படி அணிவகுத்துச் செல்வது வழக்கம். பராக்குப் பார்த்துக்கொண்டு குட்டிகள் பாதையை விட்டு விலகும்போதெல்லாம், சஞ்சலா அதட்டி வழிக்குக் கொண்டுவரும். பிலகங்கா நதிக் கரையில், பாறை இடுக்கில் குட்டிகளைப் பத்திரப்படுத்திவிட்டு, பெரியவை இரண்டும் வேட்டைக்குப் போகும். இரவு முழுவதும் குட்டிகள் அங்கேயே இருக்கும். விடிவதற்கு முன்னால், இரண்டும் வேட்டைப் பொருள்களுடன் வந்து சேரும். குட்டிகளுக்கு நல்ல இறைச்சிகள் தினம் கிடைத்து வந்தன.

ஒரு நாள் சஞ்சலாவும் பாங்கடுவும் குரங்குக் கூட்டத்தை வேட்டையாடியதை மூத்த குட்டி பநாபர் பார்த்துக் கொண்டிருந்தது. இப்போது அது ஆறு மாதத்துச் சிறுத்தை. தானும் இப்படி வேட்டையாட வேண்டுமென்று அதற்கு ஆசை ஏற்பட்டது.

சிறுத்தைக் குடும்பத்துக்கு அந்தக் காட்டில் போதுமான உணவு கிடைக்கவில்லை. குரங்கு, முயல், காட்டுக்கோழி இவைதான் தாராளமாகக் கிடைப்பவை. உள்ள பசியை வளர்க்கத்தான் இவை பயன்பட்டன. ஆடு எப்போதாவது அரிதாகத்தான் சிக்கும். இப்படி வயிற்றுப்பாட்டுக்குக் கவலைப் பட்டுக்கொண்டிருக்கும்போது தான், ஒரு நாள் பெரிய பசு ஒன்று வழி தவறி அந்தப் பக்கம் வந்து சேர்ந்தது. பாங்கடுவும் சஞ்சலாவும் பசுவைத் தாக்கப் புதர் மறைவில் பதுங்கியிருந்தன. பிலகங்கா நதித் துறைக்கு வந்ததும், பசுவைக் குபீரென்று பாங்கடு பாய்ந்து தாக்கியது. சஞ்சலாவும் பின்பக்கமாக வந்து தாக்கியது. சில கணங்கள் மன்றாடிவிட்டு, சாதுப் பசு பலியாயிற்று.

அன்று அந்தச் சிறுத்தைக் குடும்பத்துக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. வயிறாரக் குருதியும் இறைச்சியும் புசித்தன. வெகு நேரம் வரைக்கும் அந்த விருந்தில் ஈடுபட்டபின், எஞ்சியதை இழுத்துச் சென்று, ஒரு புதருக்குள் மறைத்து வைத்தன. இதற்குள் நிணநாற்றத்தை மோப்பம் பிடித்துக்கொண்டு, சில ஓநாய்களும் கழுகுகளும் படையெடுக்கத் தொடங்கின. ஆனால், பாங்கடுவின் உறுமலைக் கேட்டதுமே, அவை ஓடிவிட்டன.

மறுநாள் மாலையில் சிறுத்தைக் குடும்பம், பத்திரப்படுத்தியிருந்த விருந்தை உண்ணப் புறப்பட்டது. குட்டிகளுக்கு உற்சாகம் தாங்கவில்லை. சஞ்சலா மெல்ல அடித்து அவற்றை அடக்க வேண்டிய

தாயிற்று. புதருக்கு அருகே வந்ததும், பாங்கடுவுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. தன் துணைவியையும் குழந்தைகளையும் எச்சரிக்கையாக ஒதுங்கி இருக்கச் சொல்லிவிட்டு, பாங்கடு மட்டும் பதுங்கிப் பதுங்கி முன்னேறியது. புதருக்குள் சென்றதும், அதற்கு வியப்பாக இருந்தது; திகிலும் ஏற்பட்டது. பத்திரப்படுத்தியிருந்த பசுவின் உடலை அங்கே காணவில்லை. சுற்றும் முற்றும் பார்த்த போது, எதிரே மைதானத்தில் அது கிடந்தது.

இதற்குள் பசுவின் உடலை ஒரு சிறுத்தைக்குட்டி பார்த்து விட்டது; தாயின் கட்டுக்காவலை மீறிக் கொண்டு, அங்கே பாய்ந்தது. பாங்கடு தன் குட்டியை இழுத்து வர ஓடியது. அவ்வளவுதான்; 'டுமீல்!' என்ற பயங்கர ஒலி எதிரொலித்தது; பாங்கடுவின் கழுத்தில் குண்டுகள் பாய்ந்துவிட்டன. வந்த ஆத்திரத்தில், குட்டிச் சிறுத்தையை ஓங்கி அறைந்தது பாங்கடு. அந்தச் சிறுத்தைக் குட்டி சுருண்டு விழுந்துவிட்டது; இடுப்புப்பூட்டு ஒடிந்து அது அங்கேயே மரித்தது.

நிலைமையை உணர்ந்துகொண்டதும், சஞ்சலா தன் இரு மைந்தர்களையும் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டது. பசுவின் சொந்தக்காரன் வேட்டைக்காரர்களுடன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தான்; செத்த சிறுத்தையையும் குட்டியையும் இழுத்துக்கொண்டு போனான்.

சஞ்சலா அன்று பிடித்த ஓட்டத்தில், அந்தக் காட்டையே துறந்துவிட்டு, 'கௌடியா'க் காட்டுக்கு வந்து குடியேறியது.

நெருக்கமான கானகம் இது; பல சிறிய பெரிய பிராணிகள் நிறைந்த இடம். சிறுத்தைக் குடும்பத்துக்கு முன் மாதிரி உணவுத் திண்டாட்டம் கிடையாது.

ஒரு நாள், மலை ஆடு ஒன்று பநாபரின் பார்வையில் பட்டுவிட்டது. பநாபருக்கு இதுதான் முதல் வேட்டை. தந்திரங்களையெல்லாம் அது தன் தாயிடம் கற்றுக்கொண்டு விட்டது. சட்டென்று மரத்தின் மேல் ஏறிக்கொண்டு, தாக்க வாகான வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அப்பாவி ஆடு மேய்ந்துகொண்டே அந்த மரத்தடிக்கு வந்து சேர்ந்தது. சரியான குறியில் அது வந்ததும், மரத்திலிருந்து பநாபர் குபீரென்று பாய்ந்தது. ஆடு நிலை குலைந்து தரையில் மல்லாந்தது; தொடர்ந்து பநாபரின் கூரிய பற்கள் அதன் கழுத்தைக் கவ்விக் கிழித்தன. பீரிட்ட குருதியை ஆசை தீரக் குடித்தது பநாபர். இதற்குள் அதன் தாயும் உடன் பிறந்த குட்டியும் வந்து சேர்ந்தன. முதல்முதல், தன் வீரப் புதல்வனின் சம்பாத்தியத்தில் பங்கு பெற்றது சஞ்சலா. ஒரு வயசு நிரம்பிய பநாபருக்கு, அன்று தன் வலிமையில் திட நம்பிக்கையும் பெருமிதமும் ஏற்பட்டன.

வேறொரு நாள், பநாபர் வேட்டைக்குச் சென்றபோது, காட்டுப் பன்றிகளின் கூட்டம் ஒன்று எதிர்ப்பட்டது. பநாபர் மறைந்திருந்து ஒரு பன்றிக் குட்டியைத் தாக்கியது. அது போட்ட கூச்சலைக் கேட்டு, பெரிய பன்றி ஓடி வந்தது. பநாபரை முட்டித் தள்ளியது; அதன் கோரப் பல் பநாபரின் உடலில் ஆழமாகப் பதியவே, பநாபர் நடுங்கிக் கொண்டே பக்கத்து மரத்தில் ஏறி, உயிர் தப்பியது. பன்றி கீழே இருந்தபடியே ஏதோ சவால் விட்டுவிட்டு தன் கூட்டத்துடன் சேர்ந்துகொண்டு போய்விட்டது; நல்ல காலம்!

இப்படிச் சில மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் சஞ்சலாவுக்குப் புதிய காதலனாக ஒரு சிறுத்தை வந்து சேர்ந்தது. அதைக் காணவே பநாபருக்கும் அதன் தம்பிக்கும் பிடிக்கவில்லை. வந்த சிறுத்தையும் இளஞ்சிறுத்தைகளை வெறுக்கத்தான் வெறுத்தது. சஞ்சலா இரு தரப்புக்கும் நல்லதனமாக நடந்துகொள்ள முற்பட்டது. ஆனால், இருதரப்புக்கும் மனக்கசப்பு வளர்ந்துகொண்டே தான் இருந்தது. ஒரு நாள், பநாபர் தன் தாயிடம் கொஞ்சிக்கொண்டிருக்கும்போது, அந்த முரடு வந்துவிட்டது. அது பநாபரை

ஓங்கி அறைந்து, அப்புறப் படுத்தியதை, சஞ்சலா அமைதியாய்ப் பார்த்துக்கொண்டுதான் இருந்தது; தடுக்க முயலவில்லை. பநாபர் கோபித்துக்கொண்டு, தன் தம்பியையும் கூட்டிக் கொண்டு, வேறு காட்டுக்குப் போய்விட்டது. கடக்கியாவால் என்ற கிராமத்துக்கு அருகே உள்ள கிராமம் இது. நாகினி நதிக்கரையில், இரண்டும் இடம் பிடித்துக் கொண்டன. முன்பு இருந்த 'கௌடியா'க் காட்டைப்போல், வேட்டைப் பிராணிகள் இங்கே அதிகம் கிடைப்பதில்லை. இருந்தாலும், சுதந்தர வாழ்க்கை; சுயேச்சையாகத் திரியலாம், வாழலாம்.

இரு சிறுத்தைகளும் வெகு தூரம் வரைக்கும் போய், வேட்டையாடி வந்தன. வெள்ளாடு, செம்மறி ஆடு, காட்டு ஆடு, எல்லாம் நிறையக் கிடைத்தன. இரண்டு சிறுத்தைகளும் கொழுத்து வளர்ந்தன.

ஒரு நாள் பக்கத்துக் கிராமத்தின்மீது இரு சிறுத்தைகளும் படையெடுத்தன. ஆட்டு மந்தை ஒன்று தென்பட்டது. இரு சிறுத்தைகளுக்கும் வெறி பிடித்துவிட்டது. காலையில் மந்தையை ஆயன் சுற்றிப் பார்க்கும்போது, அவனுக்கு வயிறு எரிந்தது. இருபது ஆடுகள் செத்துக் கிடந்தன; பன்னிரண்டு ஆடுகள் குற்றுயிரும் குலையுயிருமாகத் தவித்தன. சிறுத்தைகளுக்குப் பசி அடங்கியும், வெறி அடங்கவில்லை. ரத்தத்தை மட்டும் குடித்துவிட்டு, பல ஆடுகளைப் பிணமாக்கிவிட்டுப் போயிருக்கின்றன. இடையன் ஓலமிட்டுக்கொண்டே ஓடிப்போய்க் கிராமத்தாரிடம் முறையிட்டான்.

பநாபருக்கு இரண்டு ஆண்டுகள் நிறைந்தன. அதன் தம்பி ஒரு நாள் வேட்டைக்காரர்களின் பொறியில் சிக்கி உயிர் இழந்தது. பநாபர் உற்சாகம் இல்லாமல் சில தினங்கள் முடங்கிக் கிடந்தது; ஆனால் வயிறு ஓய்ந்திருக்க விடவில்லை. தம்பியைக் கொன்றதற்குப் பழிவாங்குவது போல், அக்கம் பக்கத்துக் கிராமங்களி லெல்லாம் படையெடுக்கத் தொடங்கியது, பாவம்! ஏழை இடையர்களின் பாடுதான் பரிதாபமாகிக்கொண்டிருந்தது. பிறகு, அந்த இடத்தை விட்டுத் தெற்கே புறப்பட்டது பநாபர். 'பகோட்' பகுதிக் காட்டில் வசிக்கத் தொடங்கியது. இங்கே நல்ல வேட்டைகள் கிடைத்தன.

பநாபருக்கு நல்ல காலம் தொடங்கிவிட்டது ஒரு நாள் பெண் சிறுத்தை ஒன்று தற்செயலாக அதன் பார்வையில் பட்டது. பருவத் துடிப்புடன் இணை தேடி அலையும் இரண்டும் மகிழ்ச்சி அடைந்தன. பநாபர் மல்லாந்து படுத்து, கைகளை ஆட்டித் துணைவியை வரவேற்றது. சிறிது நேரம் பிணக்கு, தளுக்கெல்லாம் காண்பித்த பிறகு, பெண் சிறுத்தை 'பம்போ' அன்பனின் அரவணைப்புக்கு இசைந்து வந்தது. இரண்டும் புது மண வாழ்க்கை தொடங்கின.

மாலை மறைந்ததும், இரண்டும் வேட்டைக்குப் போகும். உண்டு களித்துவிட்டு, புலரி புறப்படுவதற்குமுன் இருப்பிடத்துக்கு வந்து சேரும். ஒரு தினம், மாற்றுப் புலி ஒன்று 'பம்போ'வைக் காம வெறியுடன் முறைத்துப் பார்த்தது. அருகில் இருந்த துணையான பநாபருக்கு இது பொறுக்குமா? வெறி கொண்ட மாற்றானை விரட்டப் பாய்ந்தது. இரண்டுக்கும் போர் மூண்டது. கடைசியில் வெற்றி பநாபருக்குத்தான். நெறி கெட்ட அந்த வெறிச் சிறுத்தை ஓடி உயிர் பிழைத்தது.

சில மாதங்கள் ஆனதும், ஒரு நாள் பம்போ வேட்டைக்கு வர மறுத்துவிட்டது. ரகசியத்தை அறிந்துகொண்ட பநாபர் துள்ளிக் குதித்துக்கொண்டு காட்டுக்குள் மறைந்தது. விடிகாலையில், தன் அன்புத் துணைவிக்கும் ஆகாரம் எடுத்துக்கொண்டு திரும்பியது. புதருக்குள் எட்டிப் பார்த்தபோது, பநாபருக்கு ஆனந்தம் பொங்கியது. பால் பருகும் மூன்று குட்டிகளையும் அணைத்தபடியே அதன் துணைவி பம்போ படுத்திருந்தது. அருகே வர முயலும் பநாபரை, பம்போ கை வீசி, உறுமி, அதட்டி

யது. பநாபர் பரமசாதுவாகப் பணிவுடன் ஒதுங்கிக்கொண்டது. பிறகு, மூன்று தினங்கள் வரைக்கும் பம்போ வேட்டைக்குப் போகவில்லை.

எட்டு மாதங்கள் கடந்து விட்டன. பநாபர், பம்போ இரண்டும் தங்கள் குட்டிகளையும் கூடவே கூட்டிச் செல்லத் தொடங்கின. பல சோதனைகள் குறுக்கிட்டன.

சில நாளாகப் பநாபர் தனியாகத் தலைமறைவாகவே இருப்பது வழக்கமாகிவிட்டது. ஒரு நாள், பம்போ தன் குட்டிகளுடன் வேட்டைக்குப் போய்க்கொண்டிருக்கும்போது, பநாபர் புதிய சிறுத்தை ஒன்றைத் துணை சேர்த்துக்கொண்டு திரிந்துகொண்டிருப்பது தெரிந்தது. பம்போ தன் சக்களத்தியை வெறுக்கவில்லை; பம்போவுக்குப் பநாபர் தேவை. பிரிந்தவை கூடி வாழத்தொடங்கின.

ஒரு நாள் வேட்டைக்காரர்களின் படையெடுப்பு நடந்தது. அன்று குகையில், பநாபரின் புதுத் துணைச் சிறுத்தையும், அதன் குழந்தைகளும் இருந்தன. வேட்டைக்காரர்களின் ஆரவாரத்தைத் தொலைவிலிருந்தே கேட்ட பநாபரும் மூத்த பம்போவும் ஓடிவிட்டன. குகையிலிருந்த புதிய பெண் சிறுத்தை ஆத்திரத்துடன் வெளியே வந்தது. கூட்டத்தைக் கண்டதும், பக்கத்துப் புதரில் புகுந்துகொண்டு விட்டது. வேட்டைக்காரர் ஒருவர் புதரில் சுட்டார். பெண் சிறுத்தையின் துடையில் குண்டு பாயவே, அது சீறிக்கொண்டு மனிதர்களைத் தாக்கியது. எதிர்ப்பட்ட ஒருவனைக் கிழித்துப் போட்டுவிட்டது. இதற்குள் பல ஈட்டிகள் பாய்ந்து வந்து தாக்கவே, சிறுத்தையின் ஆவி பிரிந்தது. வேட்டைக்காரர்கள், அதன் உடலை எடுத்துக்கொண்டதோடு, குட்டிகளையும் பிடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

பநாபரும் பம்போவும் கூடி வாழ்ந்து வந்தன. போதாத காலம் தொடங்கிவிட்டதோ என்னவோ, ஒரு நாள் ஒரு குரங்கைப் பிடிக்க மரத்தின்மேல் ஏறியபோது, பநாபர் பெரிய தேனடை ஒன்றைக் கலைத்துவிட்டது. அவ்வளவுதான், தேனீக்கள் பயங்கரமாகத் தாக்கின. இரு சிறுத்தைகளும் வெகு தூரம் ஓடின. தேனீக்கள் விடவில்லை. அந்தத் தாக்குதலிலேயே, பெண் சிறுத்தை பம்போ உயிர் இழந்தது.

பநாபர் பித்துப் பிடித்தது மாதிரி, நிலை கொள்ளாமல் அலைந்தது. ரிஷிகேசத்துக்கு அடுத்த சுவர்க்காசிரமம் என்ற காட்டுக்கு வந்து குடியேறியது. இங்கும் அதற்குச் சில காதலிகள் கிடைத்தார்கள். வம்சம் பெருகியது; காலமும் குஷாலாகக் கழிந்தது.

தன்மேல் மூப்பு ஆதிக்கம் புரியத் தொடங்கிவிட்டதைப் பநாபர் உணர்ந்தது - காட்டுப் பன்றியுடன் ஒரு நாள் சண்டையிட்டுத் தோற்றபோதுதான். அந்த அதிர்ச்சி அதை நடைப்பிணம் ஆக்கிவிட்டது. பயமும் கிலியும் அதை ஆட்கொண்டன. தன் இனப் புலிகளின் கண்ணில் படாமல் ஒளிந்து வாழத்தொடங்கியது பநாபர். இத்தனை வருஷத்து அநுபவமும் அதற்குத் துணை புரிந்து வந்தது. வேட்டைக் கலையில் பநாபருக்கு ஈடு இணை கிடையாது. தன் உடல்நலத்துக்கு ஊறு ஏற்படாமல், வேட்டைப் பிராணியின் சக்தியை முன் கூட்டி அறிந்துகொண்டு, மிகவும் தந்திரமாகத் தாக்கி வெற்றி பெறுவது கிழச் சிறுத்தையின் தனிக் கலை. பநாபர் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

பநாபர் கடைசியாகச் சுவைத்த அரிய விருந்து என்ன தெரியுமா? புல் வெட்ட வந்த ஒரு ஸ்திரீ.

அடுத்த சில நாளைக்குப் பிறகு, மற்றொரு புல்லுக்காரி தென்பட்டாள். ஆவல் உந்த, அருகில் வந்து பார்த்தபோதுதான் உண்மை தெரிந்தது. நிஜமான மங்கை இல்லை; பதுமை மடந்தைதான்! வெறுப்புடன் திரும்பத் தொடங்கியபோது, 'டுமீல்' என்ற வெடிச் சப்தம் பநாபரை நடுங்க வைத்தது; உடனே அது கீழே சுருண்டு விழுந்தது. பாவம்! அடுத்த கணத்தில் சிறுத்தை பநாபர் பிணமாகிவிட்டது.

# சரத்சந்திரரின் உள்ளம்

அவனீ நாத ராய்

வங்காள நாவல் மன்னர் என்று போற்றத்தக்க சரத் சந்திரரின் பல நாவல்கள் தமிழருக்கு அறிமுகமானவையே. அவருடைய கதைகளில் காணும் அதே உணர்ச்சிக் குழைவை அவருடைய வாழ்விலும் காணலாம்.

முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அப்போது கல்கத்தாவில் வில்லியம் கோட்டையிலே செக்ரடேரியட்டில் வேலை பார்த்து வந்தேன். சரத்சந்திரரின் கதைகளையெல்லாம் அப்போதே படிப்பது உண்டு. அதோடு 'பாரத வர்ஷ,' 'விசித்ரா' என்ற பத்திரிகைகளில் அவருடைய நாவல்கள் தொடர்ச்சியாக வெளிவந்தன. அவைகளை வெகு ஆவலோடு படிப்பேன். இப்படிப் படிக்கும்போது, ''சரத்சந்திரரும் மனிதர்தான்; நாமும் மனிதர்தான். அவருக்கும் உற்றார் உறவினர், நண்பர்கள் இருக்கிறார்கள்; நமக்கும் இருக்கிறார்கள். ஆனாலும் அவருடைய புஸ்தகங்களில் வரும் பாத்திரங்கள் எவ்வளவு இனிமையாகவும் உருக்கமாகவும் பேசுகிறார்கள்; நம்மால் அப்படி ஏன் பேச முடிகிறதில்லை? அவரும் அப்படித்தான் இருப்பாரா, வேறு விதமாக இருப்பாரா? தம் கதைகளில் வரும் 'இந்திரநாதன்', 'அன்னதா அக்கா', 'அபயா' இவர்களைப் போல் அவருடைய உள்ளத்திலும் பகவான் அன்பு வடிவமாக இருந்து கண்ணீர் வடிப்பாரா?'' என்றெல்லாம் தோன்றும்.

சில தினங்களுக்கெல்லாம் அவரை நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. மிருணால் சர்வாதிகாரி, ஹீரேன் பானர்ஜி, சைலேன் கோஷ் என்ற எழுத்தாளர்கள் என்னிடம் வந்து, ''சரத் பாபுவைப் பார்க்கப் போகிறோம். நீயும் வருகிறாயா?'' என்றார்கள். உடனே, ''சரி; புறப்படலாம்'' என்று அவர்களோடு கிளம்பிவிட்டேன். சரத் சந்திரர் அப்போது ஸாம்தாபேட் என்ற கிராமத்தில் இருந்து வந்தார்; அந்தப் பெயரே அவர் இட்டதுதான்; அதற்கு முன்னால் அந்த ஊருக்கு வேறு என்னவோ பெயர். அவருடைய சகோதரி அநிலா தேவி அங்கேதான் தம் கணவரான முகர்ஜியுடன் வசித்து வந்தார். சகோதரியிடம் உள்ள பாசத்தினால்தான் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தார் சரத்சந்திரர். இருவருடைய வீடும் அருகருகில்தான் இருந்தன. 'குந்தலீன்' தைலக் கம்பெனியார் வைத்த கதைப் போட்டிக்கு அநிலா தேவியின் பெயரால்தான் முதல் முதலாகக் கதை எழுதி அனுப்பினார் சரத்சந்திரர்; அதற்குப் பரிசும் கிடைத்தது!

காலை ரெயில் வண்டியில் ஹாவுராவிலிருந்து நாங்கள் நாலு பேரும் கிளம்பினோம். தேவுல் என்ற ஸ்டேஷனில் இறங்கும்போது வெயில் ஏறிவிட்டது. அங்கிருந்து மண் பாட்டையில் மூன்று, நாலு மைல் தொலைவு

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி: ஆகஸ்ட் '58), கல்கத்தா.

நடக்கவேண்டும். நல்ல கோடைக் காலம். உடம்பெல்லாம் வேர்த்து வழிய மேடும் பள்ளமுமாக இருந்த பாட்டையில் நடந்தோம். அவர் வீட்டுக்குப் போய்ச் சேருவதற்குள் மணி பத்துக்குமேல் ஆகிவிட்டது. ரூபநாராயண் ஆற்றங்கரையில் இருந்தது அவர் வீடு; முன் பக்கம் மண் சுவரின்மேல் துத்தநாகத் தகடு போட்டிருந்தது. அறைக் குள் அமர்ந்தபடி ஜன்னல் வழி யாகப் பார்த்தால் ஆறு தெரியும்; அதன் மெல்லொலியும் கேட்கும். சரத் பாபு அப்போது அறைக் குள்ளேதான் இருந்தார்; ஆனால் எழுதிக்கொண் டிருக்கவில்லை. பெட்ரோமாக்ஸ் விளக்கு ஒன்றைச் சரி செய்துகொண்டிருந்தார். இதை ஏற்றி வைத்துக்கொண்டுதான் இரவு முழுவதும் கதை எழுது கிறார் என்று பின்னால் கேள்விப் பட்டேன். பட்டிக் காடு; அங்கே மின்சார விளக்குக்கு எங்கே போவது? மண்ணெண்ணெய் விட்ட லாந்தர் வெளிச்சம் அவருக்குப் போதவில்லை.

நாங்கள் நாலு பேரும் அவர் வீட்டுத் தாழ்வாரத்தில் வந்து சேர்ந்தோம். எங்கள் செருப்புச் சத்தம் நன்றாகக் காதில் விழுந் திருக்கலாம்; ஆனாலும் அவர் என் னவோ எங்களைக் கவனிக்காமல் விளக்கைச் சரி செய்வதிலேயே மும்முரமாய் ஈடுபட்டிருந்தார். உண்மையிலேயே 'இவ்வளவு தூரம் வழி நடந்து அலுத்து வந்தோமே! இப்படி மௌனமாக இருக்கிறாரே, மனுஷர்! சுத்தமாக நன்றாயில்லை!' என்றுதான் எனக்குப் பட்டது; தம் காரியத்தைப் பாதி யில் விட்டுவிட்டு ஆவலோடு எங்களை வரவேற்பார் என்றுதான் எதிர்பார்த்தேன். அந்த மாதிரி ஒன்றும் நேரவில்லை.

சரத் பாபுவைப்பற்றிப் பலர் பல விதமாகப் பேசிக்கொள்வது உண்டு. சிலர், ''யாராவது தம் வீட்டுக்கு வந்தால் அவர் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்'' என்பார்கள். சிலர், ''ஆகா! யாராவது வீட்டைத் தேடி வந்தால் என்ன அன்பாய் உபசரிப் பார், தெரியுமா!'' என்பார்கள். எங்கள் அதிருஷ்டம் முதல் சாரார் சொன்னபடிதான் நேரும் என்று தோன்றியது.

ஆனால் சில நிமிஷத்துக்கெல்லாம் அவர் எங்களைக் கவனித்தார். நாங்கள் வணக்கம் தெரிவித் தோம். அவர் தாழ்வாரத்தில் இருந்த மரப்பெஞ்சியில் எங்களை உட்காரச் சொல்லி, எங்கள் பெயரை விசாரித்தார். மிருணால் பாபு, ஹீரேன் இவர்களைப்பற்றி அவருக்கு ஏற்கனவே தெரியும். நான் என் பெயரைச் சொன்னதும், ''முன்னேயே பழக்கமான பெயர் போல் இருக்கிறதே?'' என்றார். ''ஆமாம். . ஒரு சந்தர்ப்பத்தில் அதைப் பார்த்திருப்பீர்கள்'' என்றேன். பிரபல எழுத்தாளரான பிரபோத ஸான்யால் பதிப்பித்து வந்த 'ஸ்வதேச்' என்ற மாதப் பத்திரிகையில் ஒரு கடிதம் வெளி யாயிற்று: கதாசிரியர் அன்னதா சங்கர் ராய் பிரபோத பாபுவுக்குத் தனிப்பட எழுதிய கடிதம் அது; அச் சிட்டு வெளியிடுவதற்காக எழுதிய கடிதம் இல்லை. அதில் சரத் பாபு வின் 'கடைசிக் கேள்வி' என்ற புத்தகத்தைக் கடுமையாகத் தாக்கி யிருந்தார் அன்னதா சங்கர்; 'ஐரோப்பாவில் ஐம்பது ஆண்டு களுக்கு முன் பிரசாரம் செய்து வந்த ஒரு கொள்கை இது. இதைப் பலர் பரீட்சித்துப் பார்த்துக் கை விட்டு விட்டார்கள். இதைப் போய்த் தம் நாவலில் சரத் பாபு புகுத்தியிருக்கிறாரே!' என்று எழுதியிருந்தார். அந்தக் கடிதம் வெளியானதற்கு அடுத்த இதழில் நான் அன்னதா பாபுவின் கருத்தை மறுத்து ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். சரத் பாபு விடமும் அவர் கொள்கைகளிலும் உள்ள அபிமானத்தால் எழுதினதே தவிர அதில் அப்படி ஒன்றும் வாதத் திறமையைக் காண முடி யாது. இருந்தாலும், இதைத் தான் சரத் பாபு பார்த்திருப்பார் என்று எனக்குத் தோன்றியது. அவரும், ''ஆமாம். அன்னதா பாபுவுக்கு நீ எழுதியிருந்த பதிலைப் படித்திருக்கிறேன்'' என்றார்.

பிறகு தமக்குள்ளேயே சொல் வது போல், ''அது சரி; இந்தக்

கருத்துக்களைப்பற்றி யெல்லாம் வெகு நாளாக யோசித்து வருகிறேன். ஆனால் வாசகர்கள் ஒரு தடவை படித்ததுமே, 'இது சரிதான்,' 'இது நடக்காத காரியம்' என்று எப்படி முடிவு கட்டி விடுகிறார்கள்? அதுதான் புரியவில்லை'' என்றார்.

''ஒருத்தருக்குக் 'கடைசிக் கேள்வி' கட்டோடு பிடிக்கவில்லை; ஆனால் இன்னொருத்தர்-பம்பாயில் ஜட்ஜாக இருக்கும் க்ஷிதீச சந்திர ஸேன், ஐ. ஸி. எஸ்., எப்படி எழுதியிருக்கிறார், பாருங்கள்!'' என்றதும், ஒரு தகர டிரங்கை எடுத்து வந்தார். அதைச் சற்று நேரம் குடைந்து பார்த்து அதன் அடியிலிருந்து க்ஷிதீச சந்திரரின் கடிதத்தை எடுத்தார். நாங்கள் அதை ஆவலோடு வாங்கிப் படித்து விட்டு, பின்னால் 'இங்கித' என்ற பத்திரிகையில் வெளியிட்டோம். (இப்போது அந்தப் பத்திரிகை நின்றுவிட்டது). அப்போது சைலேன் கோஷ் அதன் ஆசிரியர் என்று போட்டிருந்தாலும் அவர் ரகுநாதபுர் என்ற ஊரில் தலைமை உபாத்தியாயராக வேலை பார்த்து வந்ததால் நான் தான் கல்கத்தாவிலிருந்து பத்திரிகை அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. சரத் பாபுவின் வீட்டுக்குப் பின்னால் ஒரு குளம் இருந்தது. அதில் குளித்தோம். இதற்குள் சரத்பாபு பூஜையை முடித்துக்கொண்டு நெற்றியில் சந்தனப் பொட்டுடன் காட்சியளித்தார். 'இவரைப் பல பேர் நாஸ்திகர், எதையும் லட்சியம் செய்வதில்லை என்கிறார்களே! இப்போது பார்த்தால் ஆசாரம் உள்ளவராகத்தானே தெரிகிறது' என்று எண்ணினேன்.

அவருக்குச் சுபாஷ் சந்திரபோஸ், திலீப் குமார் ராய் இந்த இருவரிடமும் எவ்வளவு அன்பு தெரியுமா? ''சுபாஷின் உள்ளத்தைக் கோட்டை மைதானத்துக்கு ஒப்பிடலாம்: மிகவும் பரந்த நோக்கம் உள்ளவர் அவர்!'' என்று பாராட்டினார். அறையில் பீரோ நிறையப் புஸ்தகங்கள் இருந்தன. அவைகளில் முக்கால்வாசி சமூக இயல் சம்பந்தமானவை. ''சரித்திரம், சமூக இயல் இவைகளைப்பற்றிப் படிப்பதென்றால், எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால் இலக்கியங்களைப் படிப்பதே இல்லை என்று அர்த்தமில்லை; ஆனால் கவிதைகளைத்தான் படிப்பேன்'' என்றார்.

பிறகு, ''பாவம், என் புஸ்தகங்களை 'ப்ரூப்' பார்ப்பவர்கள் பாடுதான் மிகவும் சங்கடம்; நான் எழுதியிருப்பதில் ஒரு பதத்தை மாற்றிவிட்டாலும், உடனே எனக்குத் தெரிந்து விடுகிறது. ஒவ்வொன்றும் அப்படி மனப்பாடம் ஆகிவிடுகிறது. என் புஸ்தகம் எதிலிருந்தாவது ஓர் இடத்திலிருந்து கேள்; தொடர்ந்து அப்படியே ஒப்பிக்கிறேன், பார்.. என் புஸ்தகம் மட்டுமில்லை, ரவீந்திரநாதருடைய 'கோரா' முழுவதையுங்கூட அப்படியே ஒப்பிக்கத் தயார்!'' என்றார்.

''உங்களை ஒன்று கேட்கவேண்டும்: நீங்கள் இன்று ஒரு புஸ்தகத்தின் 5-ஆம் அத்தியாயத்தை எழுதிவிட்டுத் திடுமென்று நாளைக்கு 33 - ஆம் அத்தியாயத்தை எழுதுவீர்களாமே? இப்படிச் சொல்லிக்கொள்கிறார்களே: இது உண்மைதானா?'' என்று கேட்டேன்.

சற்றே சிரித்தபடி அவர், ''உண்மைதான்; இன்று எனக்குப் பிடித்த இடத்தில் தொடங்குவேன். நாளைக்கு அதைத் தொடர்ந்து எழுதுவேன் என்பது நிலை இல்லை. நீ சொல்வது போல் 33 - ஆம் அத்தியாயத்திலிருந்து தொடங்கினாலும் தொடங்குவேன். எல்லாம் அந்தச் சமயம் இருக்கும் மனநிலையைப் பொறுத்தது. ஆனாலும் மொத்தத்தில் கதையின் அமைப்பு என் மனசில் ஏற்கனவே திட்டமிட்டபடிதான் இருக்கும். அதில் மாறுதல் ஒன்றும் இராது. ஆகவே, எந்த இடத்திலிருந்து தொடங்கினாலும் வேகம் குறையாது'' என்றார்.

இதற்குள் சாப்பாடு தயாராக இருந்தது. நாங்கள் இலையில் உட்கார்ந்தோம். அவர் மட்டும் எங்களோடு சாப்பிடவில்லை. அவர் ராத்திரி ஒரே வேளைதான் ஏதோ சிறிது சாப்பிடுவது வழக்க

மாம். மற்றச் சமயங்களில் டீ தான் குடிப்பாராம்; டீயின் மேல் அவ்வளவு மோகம் அவருக்கு!

பிறகு ஆற்றங்கரையிலுள்ள ஒரு சமாதியருகில் எங்களை அழைத்துப் போனார். சரத்சந்திரருடைய தம்பி ஸ்வாமி வேதானந்தரின் சமாதி அது. தம்பியைப்பற்றிச் சொல்லும் போது அவர் கண்கள் கலங்கின. குரல் தழுதழுத்தது. ''ராமகிருஷ்ண சங்கத்தில் இருந்தான். உடல் நிலை மோசமாக இருக்கும்போதே அவனை மதுராவுக்கு அனுப்பினார்கள்; அங்கே தன் சக்தியையும் மீறி வேலை செய்தான். அப்போது படுத்ததுதான்; இங்கே வந்து என் மடியில் உயிர் போயிற்று'' என்றார். அவருக்குத் தம் தம்பியிடம் எவ்வளவு பாசம், அவர் இறந்ததால் எவ்வளவு வருத்தம் என்பதை உணர்ந்துகொண்டோம்.

''நீங்கள் எந்த வேளையில் எழுதுவீர்கள்?'' என்று கேட்டார் ஒரு நண்பர். சரத் சந்திரர், ''இரவு பன்னிரண்டு மணிக்கு மேல்'' என்றார். ரூபநாராயண் ஆற்றைப் பார்த்தாற்போல் அமர்ந்து அவர் எழுதும் நாற்காலி மேஜைகளைக் கண்டோம். பெட்ரோமாக்ஸ் விளக்கொளியில்தான் அவர் எழுதி வந்தார். மசி நிரப்பிய நாலைந்து பேனாக்களும், சில மூக்குக்கண்ணாடிகளும் அங்கே இருந்தன. அவர் எழுதி வந்தது அதிக விலையுள்ள கெட்டித் தாள். இந்த மாதிரி விஷயங்களில் அவர் சிக்கனம் பார்ப்பதில்லை. ''இதோ பாருங்கள்: கண்டதற்கெல்லாம் வீணாகப் பணம் செலவழிப்போம். ஆனால் எழுதும் சமயத்தில் மட்டும் சிக்கனம் வந்துவிடும். உடைந்த பேனா, மட்டிக் காகிதம், தண்ணீர் கலந்த மசி இப்படியெல்லாம் உபயோகிக்க ஆரம்பித்துவிடுவோம். ஸரஸ்வதி தேவியை வழிபடும் போது அதை முறையாகச் செய்ய வேண்டாமா?'' என்றார்.

சற்று நேரங் கழித்துப் பறவை வேட்டை சம்பந்தமாகப் பேசும் போது, ''முன்னெல்லாம் துப்பாக்கியால் பறவைகளைச் சுடுவதுண்டு. குறி தவறவே தவறாது. ஒரு சமயம் ஜோடியாக இருந்த பறவைகளில் ஒன்றைச் சுட்டுவிட்டேன். சுட்ட பறவை கீழே விழுந்து இறந்தது; அப்போது மற்றொன்று கீழே விழுந்து இறந்த பறவைமேல் விழுந்து கதறிய கதறலைப் பார்க்க வேண்டுமே! எனக்கு வருத்தம் தாங்கவில்லை. அதிலிருந்து துப்பாக்கியைத் தொடுவதே யில்லை'' என்றார்.

''புதிதாக ஏதாவது எழுதியிருக்கிறீர்களா?'' என்று நாங்கள் ஆவலோடு கேட்டோம்.

''ஒரு நாவல் எழுதினேன். ஆனால் அதோ ஆற்றங்கரை மணலில் அதை ஒரு நாள் கொளுத்திவிட்டேன்'' என்றார்.

''ஏன்?'' என்று விசாரித்தோம்.

ஆனால் அவரிடமிருந்து பதிலே வரவில்லை.

நாங்கள் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு மாலை ரெயிலுக்குப் புறப்படும்போது அவரும் கூடவே வந்து எங்களை வழி அனுப்பினார்.

இதற்குப் பிறகு பேஹாலாவில் இருந்தபோது அடிக்கடி அவரைப் பார்த்திருக்கிறேன். அற்ப விஷயமாக இருந்தாலும் அக்கறையோடு விசாரிப்பார். ''அண்ணா!'' என்றுதான் அவரை அழைப்பேன். நான் ரவீந்திரருடைய பக்தன் என்று அவருக்குத் தெரியும். அதனால் அவரைப்பற்றிக் கிண்டலாக ஏதாவது கேட்டு எனக்கு ஆத்திரமூட்டப் பார்ப்பார். ''ஏன் அப்பா, அவனி, இப்போது மணி சாயந்தரம் ஐந்து அடித்து ஐந்து நிமிஷம் ஆகிறது. உங்கள் குருதேவர் இப்போது என்ன செய்துகொண்டிருப்பார்? நகத்துக்கு மெருகு தீட்டிக்கொண்டிருப்பார் போல் இருக்கிறது, இல்லையா?'' என்பார்.

நான் முகத்தைத் துமுதுமு வென்று வைத்துக்கொண்டு, ''அவர் ஒன்றும் அப்படியெல்லாம் செய்துகொள்வதில்லை'' என்பேன்.

சரத் பாபு மிகவும் வியப்புற்றவர் போல், ''என்ன, அப்படிச் செய்துகொள்வது இல்லையா?'' என்று கேட்பார்.

உடனே அங்கே கூடியிருப்பவர்கள் எல்லாரும் கொல்லென்று சிரித்துவிடுவார்கள். இவையெல்

லாம் தமாஷே ஒழிய உண்மையில் அவருக்கு ரவீந்திரரிடம் பக்தி, சிரத்தை உண்டு. சரத் பாபுவின் 'ஸ்ரீகாந்தன்' என்ற நாவலை, பிரெஞ்சு பாஷையில் டாக்டர் காளுயி காங்குலி என்பவர் மொழி பெயர்த்து, "இதை நோபெல் பரிசுக்கு அனுப்பி வைக்கவேண்டும். இதற்குமுன் ஒரு நிபந்தனையைப் பூர்த்தி செய்தாக வேண்டும். ஏற்கனவே நோபெல் பரிசு பெற்ற ஒருவர் சிபாரிசு செய்ய வேண்டும்" என்று எனக்கு எழுதியிருந்தார். நான் ரவீந்திரரிடம் போய் இதைச் சொன்னதும் அவர் உடனே, அப்படியே செய்வதாக வாக்களித்தார். ஆனால் இரண்டொரு தினத்துக்கெல்லாம் சரத் பாபு படுத்த படுக்கை யாகி விட்டார். சில நாளைக்குள் இறந்து போய்விட்டார். எங்கள் முயற்சி கைகூடவில்லை. அவர் ஒரு சமயம் டில்லிக்கு வந்திருந்தார்; நாங்கள் எல்லாரும் அவருடன் ஆக்ராவுக்கு மோட்டாரில் புறப்பட்டுச் சென்றோம். அங்கே வந்ததும் நாங்கள் தாஜ் மகலைப் பார்க்கக் கிளம்பினோம். ஆனால் அவர், "நான் பல தடவை பார்த்தாயிற்று; வரவில்லை. இங்கேயே இருக்கிறேன்" என்று சொல்லி விட்டார்.

எல்லாரும் போனதும் ஒரு பிச்சைக்காரச் சிறுவன் அவருடைய காரைச் சுற்றி வட்டமிட்டுத் தொந்தரவு செய்துகொண்டிருந்தானும். இதை டிரைவர் சொன்னுன். அந்தப் பயலை டிரைவர் அடித்து விரட்டினுன்; சரத் பாபுவுக்கு டிரைவரின்மேல் கோபம் வந்துவிட்டதாம். பையனை அருகில் அழைத்து, அவனை விசாரித்துப் பையனின் கையில் பத்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தாராம். அவன் இதை எதிர்பார்க்கவே யில்லை.

அப்போது டிரைவர், "இதென்ன, ஸார், குப்பைக்காரப் பயல்! அவனுக்குப் போய் இப்படி வழங்குகிறீர்களே?" என்றுனும்.

அதற்கு அந்தச் சிறுவன், "குப்பைக்காரப் பயலாக இருந்தால் என்ன, ஐயா?" என்று கேட்டுவிட்டுப் போய்விட்டானும்.

சரத் சந்திரர் அதைக் கேட்டதும் யோசனையில் ஆழ்ந்துவிட்டார். நாங்கள் தாஜ் மகலைப் பார்த்துவிட்டு வந்ததும், திரும்ப மனம் இல்லாமல் டில்லிக்குப் புறப்பட்டோம். வழி நெடுகச் சரத் பாபு, அந்தச் சிறுவன் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி, "அவன் சொன்னதில் என்ன தப்பு?..நம் சமூகம் இந்தத் தீண்டாதாரை எவ்வளவு மோசமாக நடத்துகிறது!" என்று சொல்லி உள்ளூற வருந்தினர்.

இலக்கியக் கூட்டங்களில் பேசும் சரத் சந்திரரையோ, நண்பர்களோடு பேசும்போது கிண்டல் செய்யும் சரத் சந்திரரையோ அசல் சரத்சந்திரர் என்று சொல்ல முடியாது. பிறர் படும் துயரத்தைக் கண்டு உள்ளம் வருந்தித் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் சரத்சந்திரரையே உண்மையான சரத்சந்திரர் என்று கொள்ளவேண்டும்.

## உள்ளேயும் வெளியேயும்

ஒக்லஹாமா மாகாணத்தில் உள்ள ஆர்ட்மோர் என்ற நகரத்தில், ஓர் ஆபீஸ் வாசலில் ஓவியர் ஒருவர் தம் ட்ரக்கை நிறுத்தினர். "உள்ளே ஓவியர் வேலை செய்துகொண்டிருக்கிறுர்" என்ற சீட்டை விண்ட் - ஸ்க்ரீன்மீது ஒட்டிவிட்டு, கட்டிடத்துக்குள்ளே புகுந்தார்.

உள்ளே வேலையெல்லாம் முடிந்த பிறகு, வெளியே வந்தார். அப்போது விண்ட் - ஸ்க்ரீனைப் பார்த்தால், அவர் ஒட்டிய சீட்டை அதில் காணவில்லை. அது இருந்த இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் பார்க்கிங் டிக்கட் ஒட்டியிருந்தது. அதோடு ஒரு சீட்டும் இருந்தது. அதில் இப்படி எழுதியிருந்தது: "வெளியே போலீஸ்காரன் வேலை செய்துகொண்டிருக்கிறுன்."

—'காப்பர்ஸ் வீக்லி'

# நகுஷன் வரலாறு



அர்ஜுனன் சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றான்; மற்றத் தேவர்களிடமிருந்தும் பல அஸ்திரங்கள் கிடைத்தன. தன் தந்தை இந்திரனின் ஆணைப்படி அர்ஜுனன் தேவலோகம் சென்றான். நிவாதகவசன் போன்ற அசுரரை வென்றான். தேவ சபையில் தேவேந்திரனோடு சிம்மாசனத்தில் அமர்ந்து தேவர்களால் கௌரவிக்கப் பெற்றான். இந்திரன் அளித்த பல்வேறு அஸ்திரங்களையும் கைக்கொண்டான். ''போரில் பீஷ்மாதிகள் உனக்கு நிகராக மாட்டார்கள்'' என்று தேவராஜன் அவனுக்கு ஆசி கூறினான். பிறகு கந்தமாதன மலைக்கு வந்து, தமையன் தம்பிமார்களோடு சேர்ந்தான். அவனுடைய வீரச் செயல்களைக் கேட்டு யுதிஷ்டிரர் முதலியோர் மகிழ்ச்சி அடைந்தார்கள். அர்ஜுனன் தன் அஸ்திரங்களைத் தமையனுக்குக் காட்டப் போனான். அப்போது இந்திரனிடமிருந்து வந்த நாரத முனிவர் அர்ஜுனனைத் தடுத்தார். ''உன் அஸ்திரங்களை உன் சகோதரர்கள் போரில் பார்த்துக்கொள்ளட்டும். இப்பொழுது இவற்றைப் பிரயோகித்தால் உலகமே அழிந்துவிடும்'' என்றார். பிறகு அனைவரும் கந்தமாதன மலையிலிருந்து இறங்கி, மீண்டும் துவைதவனம் வந்தார்கள். அங்கே ஸரஸ்வதி நதிக்கரையில் இன்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள் பீமன் கையில் வில்லும் இடுப்பில் கத்தியும் தோளில் அம்பறாத் தூணியுமாக வேட்டையாடப் புறப்பட்டான். சித்தர்களும் தேவர்களும் கந்தர்வர்களும் வாழ்ந்துவரும் அந்தக் காட்டைச் சுற்றிப் பார்த்தான். சகோரம், உபசக்ரம், கோகிலம் முதலிய புள்ளினங்கள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. பூக்கள் பூத்துப் பொலிவுற்ற மரங்கள் அங்கு அடர்ந்திருந்தன.

மகாபாரதத்தில் வரும் உபாக்கியானங்களும் சரி, பாத்திரங்களும் சரி, பல வகை. ஒவ்வொரு கதையிலும் ஒரு பேருண்மையைக் கண்டறியலாம்; ஒவ்வொரு பாத்திர வர்ணனையும் தனித் தனிக் குணசித்திரம் ஆகும்.



தேவதாரு மரங்களும் சந்தன மரங்களும் அந்தக் காட்டை அழகுபடுத்தின. பீமன் பாணங்களைத் தொடுத்து அங்கே விலங்குகளை வேட்டையாடினான். அங்கே பீமன் மலையின் பள்ளத்தில் ஒரு பெரிய பாம்பைக் கண்டான். அதைப் பார்த்தவர் திகைத்து மயிர் சிலிர்ப்பார்கள். மலை போன்றது அதன் உடல். பலவிதமான புள்ளிகள் அதன் உடலை அழகுபடுத்தின. அதன் மேனியின் நிறம் மஞ்சள். குகை போன்ற வாய். அதில் நான்கு கோரப் பற்கள். நாக்கால் அடிக்கடி வாயின் ஓரங்களை நக்கிக்கொண்டிருந்தது. பார்த்தவரை நடுங்க வைத்தது அதன் தோற்றம். யமனே உருவெடுத்ததுபோல் இருந்தது அதைக் காண. அதன் சீற்றம் கேட்டு எல்லாப் பிராணிகளும் நடுக்கமுற்றன. அந்தப் பாம்பு பசியுடன் பீமன்மேல் பாய்ந்து அவன் கைகளைக் கவ்விக்கொண்டது. பீமன் மயக்கம் அடையும் நிலைக்கு வந்துவிட்டான். அந்தப் பாம்பு பெற்ற வரத்தினாலேயே இப்படி நேர்ந்தது. பதினாயிரம் யானைகளும் பீமன் கைகளுக்கு நிகர் ஆகா; அப்படிப்பட்ட பீமனே இந்தப் பாம்பிடம் சிக்கிப் பற்கள் துடிக்க ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தான் என்றால், அதற்குமேல் கேட்பானேன்! எவ்வளவோ முயன்று பார்த்தான்; பலிக்கவில்லை. பாம்பின் ஆச்சரியமான பலத்தை எண்ணிப் பலவாறு சிந்தித்தான்.

பீமன் பாம்பைப் பார்த்துப் பேசலானான்:

''சர்ப்ப ராஜனே! நீ யார்? என்னைப் பிடித்து நீ என்ன செய்யப் போகிறாய்? நான் பாண்டுவின் மகன் பீமசேனன். தர்மருக்குத் தம்பி. பதினாயிரம் யானைகளின் வலிமை கொண்டவன். நீ என்னை எப்படி வசப்படுத்திவிட்டாய்? போர்களில் சிங்கங்களும் புலிகளும்

யானைகளும் எருமைகளும் கூட்டங் கூட்டமாக வந்திருக்கின்றன; அவற்றை நான் எளிதில் கொன்றிருக்கிறேன். நாகர், பிசாசர், யட்சர், ராட்சசர் எல்லாருங்கூட என் தோள் வலியைத் தாங்காமல் ஓடுவார்கள். உனக்கு மந்திரத்தின் பலம் ஏதாவது இருக்கிறதா? அல்லது யாராவது உனக்கு வரம் கொடுத்திருக்கிறார்களா? என்ன தான் முயன்றும் உன்னிடமிருந்து விடுபட முடியவில்லையே! மனிதரின் பலமே நிலையானதன்று'' என்று பீமன் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே, அந்தப் பாம்பு தன் உடலால் அவனைச் சுற்றி இறுக்கிக் கொண்டது. அவன் கைகளை விட்டது. பிறகு அவனிடம் கூறியது:

''பசியுற்ற எனக்குத் தெய்வ வசமாக நீ கிடைத்தாய். இல்லாவிட்டால் என் உயிர் போயிருக்கும். உயிர் என்றால் எல்லாருக்குந்தான் பிரியம். நான் பாம்பாக ஆனதைச் சொல்லுகிறேன், கேள். அப்படிச் சொன்னால் எனக்கு முனிவர் கொடுத்த சாபமும் நீங்கும். நகுஷன் என்ற அரசனைப் பற்றி நீ கேட்டிருப்பாய். அவன் உன் முன்னோர்களில் ஒருவன். அவன் ஆயு என்ற அரசனுடைய மகன். அவன்தான் நான். அந்தணர்களை அவமதித்துச் சாபம் பெற்று இந்த நிலையை அடைந்தேன். அழகான உன்னை இப்பொழுது தின்றுவிடப் போகிறேன். என் பிடியில் சிக்கியவன் விடுபட முடியாது. இது எனக்கு முனிவர் கொடுத்த வரமாகும். நான் என் சரீரத்தால் சுற்றிக் கொண்டவுடன் எவ்வளவு பலவானுக்கும் பலம் குறைந்துவிடும் என்று முனிவர் எனக்கு அருள் புரிந்தார். மேலும், நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறுபவனே என்னைச் சாபத்திலிருந்து விடுவிப்பான் என்றும் அவர் கூறிச் சென்றார். நான் அந்த நல்ல காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு நரகம் போன்ற இந்த நிலையில் இருக்கிறேன்.''

பீமன் பாம்பைப் பார்த்து, ''சர்ப்ப ராஜனே, எனக்கு உன் மேலும் சரி, என் மேலும் சரி கோபம் இல்லை. தெய்வந்தான் எல்லாவற்றுக்கும் மேலானது. வீரம் இருந்தும் பயனில்லை, பார்; தெய்வ வசத்தால் என் வீரம் சிறிதும் உபயோகமற்றதாகி விட்டது! என் சகோதரர்கள் ராஜ்யத்தை இழந்து காட்டில் திரிகிறார்கள். இந்த இமாலயத்தில் என்னைத் தேடி அலைவார்கள். எங்கள் ராஜ்யத்தின்மேல் பேராசை கொண்ட துரியோதனன் எங்களைக் காட்டில் விரட்டிவிட்டான். நான் இல்லாவிட்டால் என் சகோதரர்கள் வருந்துவார்கள். ஆனால் அர்ஜுனன் ஒருவன் மட்டும் வருந்த மாட்டான். அவன் தனியாகவே துரியோதனாதியரை வென்று ராஜ்யத்தைக் கைப்பற்றி விடுவான். தேவேந்திரனைக்கூடச் சிம்மாசனத்திலிருந்து கீழே தள்ளும் ஆற்றல் அவனுக்கு உண்டு. துரியோதனனை ஏன் வெல்லாமல் போகிறான்! என் தாய் குந்திக்காகத்தான் வருத்தப் படுகிறேன். பகைவரை நிச்சயம் வெல்லுவேன் என்று என்னிடம் அவள் நம்பிக்கை வைத்திருக்கிறாள். அவளுடைய விருப்பமெல்லாம் வீணாகி விடுமே என்றுதான் நான் வருந்துகிறேன். நகுலனும் சகதேவனும் என் கையால் வளர்ந்தவர்கள். நான் போய்விட்டால் அவர்கள் வாடுவார்கள்'' என்றான்.

இப்படிப் பலவாறு புலம்பிக் கொண்டு பீமன் பாம்பின் பிடியிலிருந்து விடுபட முடியாமல் இருந்தான். இதற்கிடையில் யுதிஷ்டிரர் என்ன என்னவோ அபசகுனங்களைக் கண்டார். தமக்கு ஏதோ தீங்கு நேரப் போவதை உணர்ந்தார். பாஞ்சாலியிடம் பீமன் எங்கே என்று கேட்டார். அதற்கு அவள், ''அவர் வெளியே சென்று வெகு நேரம் ஆகிவிட்டது'' என்றாள்.

உடனே யுதிஷ்டிரர் தௌம்யருடன் புறப்பட்டார். அர்ஜுனனிடம் பாஞ்சாலியைப் பார்த்துக் கொள்ளும்படியும், நகுலனையும் சகதேவனையும் அந்தணர்களையும் காக்கும்படியும் கூறினார். ஆசிரமத்திலிருந்து கிழக்குத் திசை நோக்கிப் புறப்பட்டார். பீமனின்

காலடி அடையாளம் படிந்த பூமி யைப் பார்த்தார். வேகமாக ஓடும் பொழுது அவன் கால் பட்டு முறிந்த மரங்களைப் பார்த்தார். அப்போதுதான் பாம்பு பிடித்திருக் கும் பீமனைக் கண்டார். ''உனக்கு ஏன் இந்த நிலை வந்தது?'' என்று பரிவுடன் கேட்டார். பீமன் நடந்ததைக் கூறினான். அப் பொழுது யுதிஷ்டிரர் பாம்பை நோக்கி ''சர்ப்ப ராஜனே, உனக்கு என்ன கொடுத்தால் பிடிக்கும்? சொல், கொடுக்கிறேன். என் தம்பியை விட்டுவிடு'' என்றார்.

இதைக் கேட்டதும் பாம்பு, ''நான் நகுஷன் என்ற அரசன். சந்திரனுக்கு ஐந்தாவது தலைமுறை யில் பிறந்தவன். என் தந்தை ஆயு மகாராஜா. யாகத்தாலும் தவத்தாலும் மூவுலகுக்கும் அரசன் ஆனேன். அதனால் கர்வம் என்னை ஆட்கொண்டது. ஆயிரம் அந்தணர்கள் என் பல்லக்கைத் தூக்கினார்கள். நான் அவர்களை அவமதித்தேன். அகஸ்தியர் எனக்கு இந்த நிலை ஏற்படும்படி சபித்தார். அவருடைய அருளால் தான் இந்தப் பீமன் எனக்கு உணவாகக் கிடைத்திருக்கிறான். இவனை விட மாட்டேன். என் கேள்விகளுக்குப் பதில் சொன்னால் விடுவேன்'' என்றது பாம்பு.

தர்மர், ''என்னால் முடிந்தால் பதில் சொல்லுகிறேன். சர்ப்ப ராஜனே! கேள்'' என்றார்.

பாம்பு: அந்தணனுக்கு உரிய குணங்கள் எவை? அவன் அறிய வேண்டியது என்ன?

தர்மர்: சத்தியம், தானம், பொறுமை, ஒழுக்கம், கொடுமை யின்மை, தவம், தயை இவை அந்தணனுக்கு உரிய குணங் களாகும். சுகம், துக்கம் இரண்டுக் கும் அப்பால் உள்ள பிரம்மத்தை அவன் அறியவேண்டும்.

இப்படிப் பாம்பு பல கேள்விகள் கேட்கத் தர்மர் தக்க பதில் கூறி, அதற்கு மகிழ்ச்சி ஏற்படும்படி செய்தார். பிறகு அவர் பாம்பைப் பார்த்து, ''நீ வேதங்களிலும் வேதாங்கங்களிலும் தேர்ச்சி பெற் றவனாகத் தோன்றுகிறாய்! எந்தச் செயலால் சிறந்த நிலை அடை யலாம்?'' என்றார்.

பாம்பு: நல்ல பாத்திரத்தில் தானம் செய்ய வேண்டும். பிரிய மாயும் உண்மையாகவும் பேச வேண்டும். அஹிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டும். இப்படி இருப்பவன் நற்கதியை - சொர்க் கத்தை - அடைவான்.

யுதிஷ்டிரர் பாம்பு கூறியதைத் தொடர்ந்து, ''தானம், சத்தியம் இந்த இரண்டில் எது பெரிது? அஹிம்சை, பிரியம் இரண்டில் எது வலிது?'' என்று கேட்டார்.

''காரியங்களின் தராதரத்துக்கு ஏற்றபடி சந்தர்ப்பத்தைக் கொண்டு ஒன்று பெரிதும், மற் றொன்று சிறிது ஆகின்றன'' என்று பாம்பு பதில் உரைத்தது.

முடிவில் பாம்பு கூறியது. ''யுதிஷ்டிரா, நான் செல்வச் செருக்கால் கீழ்நிலையை அடைந் தேன். நீ எனக்குப் பேருதவி செய்தாய். என் சாபம் நீங்கியது. உன் பேச்சின் மகிமை இது! முன்னே என் விமானத்தை ஆகா யத்தில் பிரம்ம ஞானிகளான முனி வர் தூக்கிச் சென்றார்கள். அவர் களுக்கு நடுவே இருக்கும் அகஸ்திய முனிவரைக் காலால் உதைத்தேன். அதன் விளைவாக இந்த நிலையை அடைந்தேன். பிறகு அவர் தயை கூர்ந்து, 'தர்மராஜா யுதிஷ்டிரர் உன்னைச் சாபத்திலிருந்து ஈடேற்று வார்' என்றார். அகஸ்திய முனிவ ரின் அந்தச் சக்தியைப் பார்த்து வியப்புற்றதால்தான் நான் உன் னிடம் அந்தணனுக்கு இருக்கவேண் டிய குணத்தையும் அவன் அறிய வேண்டியதையும் கேட்டேன். உன் தம்பியை இதோ விட்டுவிட்டேன். நீங்கள் இருவரும் க்ஷேமமாகப் போய் வாருங்கள்.''

இப்படி இருவரும் பேசிக்கொண் டிருக்கும்போதே அங்கே ஒரு விமா னம் வந்தது. நகுஷன் பாம்பின் உருவத்தைவிட்டுத் திவ்விய உரு வத்துடன், தான் செய்த நல்வினை களுக்கு ஏற்ற உலகை அடைந் தான். தர்மர் பீமனுடனும் தௌம்யருடனும் ஆசிரமம் திரும்பி வந்து, நடந்ததை மற்ற வருக்குக் கூறினார்.

பெருங் கீர்த்தி பெற்ற பிரதாபருத்திரனின் பாட்டியும் சிறிய தாயும் புரிந்த வீரச் செயல்கள் பிரமிக்கத் தக்கவை.

# வீரப் பெண் ருத்திரமாதேவி

★

ஆந்திரப் பிரதேசத்தில் சுமார் எழுநூறு வருஷங்களுக்கு முன் காகதிய வம்சத்து அரசர்கள் ஆட்சி செலுத்தி வந்தார்கள். அதன் ராஜதானி ஓரங்கல் நகரம். அதையே இப்போது வாரங்கல் என்று சொல்லுகிறோம். இது ஹைதராபாதுக்கு அருகே இருக்கிறது. காகதிய அரசர்களுக்குள் கணபதி தேவன் என்னும் அரசன் மிகவும் பிரசித்தி பெற்றவன்.

ராஜா கணபதி தேவன் வீரனாக இருந்ததோடு, கல்வியை வளர்ப்பதிலும் ஆசை கொண்டவன். இவன் பண்டிதர்களையும் கவிஞர்களையும் மிக ஆதரித்து வந்தான். இவன் ஆண்ட காலத்தில் குடிகள் கவலையின்றிச் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு குறையும் இல்லை.

இவனுடைய மனைவியின் பெயர் சோமாம்பா. இந்தத் தம்பதிக்கு ஆண் குழந்தை பிறக்கவில்லை. ஒரே ஒரு பெண்மட்டும் பிறந்தாள். அரசனுக்கு, ராஜ்யம் ஆள ஆண் குழந்தை பிறக்கவில்லையே என்று குறையாகத்தான் இருந்தது. ஆனால் அரசனுக்கு அந்தக் குறை வேண்டாம் என்று ராஜ குருவான விசுவேசுவர சிவதேசிகர் உறுதி சொன்னார். பிறந்த பெண் குழந்தைக்கு ருத்திரமா தேவன் என்று ஆண்பால் பெயரையே இடச் சொன்னார். புத்திரன் பிறந்ததாகவே ஊரெங்கும் பறை அறைவிக்கச் சொன்னார். அவருடைய தீர்க்க தரிசனம் நூற்றுக்கு நூறு பலன் அளித்தது என்பதைச் சரித்திரமே சொல்லுகிறது.

ருத்திரமா தேவி எப்போதும் ஆண் உடையே தரித்து வந்தாள். இவளுக்கு அரசியலுக்கு வேண்டிய எல்லா வித்தைகளையும் மந்திரியாக இருந்த கோவிந்தஜீ கற்பித்தார். ராஜநீதி, வில்வித்தை, கத்திச் சண்டை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய எல்லா வித்தைகளிலும் ருத்திர மாதேவி ஒப்பற்ற திறமை பெற்றாள்.

தந்தையான கணபதி தேவன் தன் மகள் ஓர் அரசிளங்குமரனுக்கு இருக்க வேண்டிய எல்லாச் சிறப்புக்களையும் பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான். தர்பாரிலும் மகளைத் தன்னுடனே அரியணையில் அமர்த்திக்கொண்டான். அவளும் அரசாங்க அலுவல்களில் பங்கெடுத்துக்கொண்டு வந்தாள். அரசன் ருத்திர மாதேவிக்கு யுவராணிப் பட்டம் கட்டினான்.

கணபதி தேவன், தன் ஆட்சிக் காலத்தில், தெற்குப் பகுதியின் அரசர்களைத் தோற்கடித்தான்; காஞ்சீபுரத்தை ஆள, கண்ட கோபாலன் என்பவனைத் தனக்குப் பிரதிநிதியாக நியமித்தான். ராஜா கணபதி தேவனுக்கு முதுமை வந்து செயலாற்றும் சக்தி குறைந்ததனால், எதிரி அரசர்கள் காஞ்சீபுரத்துப் பிரதிநிதியை எதிர்த்துத் தோற்கடித்து ஆந்திரத்திலும் நுழைந்தார்கள்.

அரசன் தன் கண்ணெதிரிலேயே தன் ராஜ்யம் வீழ்ச்சியுறத் தொடங்கியதைக் கண்டு இடிந்து போனான். ஆனால் யுவராணி கொஞ்சமும் மனம் கலங்கவில்லை. "நானே போதிய படைகளுடன் சென்று எதிரிகளை வென்று வருகிறேன்" என்று சொல்லித் தந்தையிடம் உத்தரவு கேட்டாள். முதலில் அரசன் மறுத்தாலும் கடைசியில் அவளுக்குச் சண்டை செய்ய அனுமதி கொடுத்தான்.

மூலம்: ஆந்திர மகிளா (தெலுங்கு: ஜூலை '58), சென்னை.

பெரிய சேனையுடன் ருத்திரமா தேவி தென்னாட்டு அரசர்களை எதிர்த்தாள். போர் பலமாக மூண்டது. யுவராணி போர் முனையில் வீராவேசத்துடன் போரிட்டாள். அவளுடைய வீர தீரங்களைக் கண்டு பகையரசரும் வியப்புற்றார்கள். அவர்களைத் தோற்கடித்துத் தந்தையின் ராஜ்யத்தை மீட்டாள் ருத்திரமா தேவி.

ருத்திரமா தேவியைச் சாளுக்கிய வம்சத்து அரசனான வீரபத்திரேசுவரனுக்குக் கணபதி தேவன் மணம் செய்து வைத்தான். ராணி ருத்திரமா தேவிக்கு மும்மடாம்பா, ரூயம்பிகா என்ற இரண்டு பெண்கள் பிறந்தார்கள். தந்தையைப் போலவே இவளுக்கும் ஆண் சந்ததி இல்லை. பெண்கள் பிறந்த பின், வீரபத்திரேசுவரன் ஒரு சண்டையில் இறங்க நேர்ந்தது. மணம் ஆன சில வருஷங்களுக்குள்ளேயே ருத்திரமா தேவி இதனால் கைம்பெண்ணானாள்.

ருத்திரமா தேவியின் பெரிய பெண்ணான மும்மடாம்பாவுக்கு மணம் நடந்தது. அவள் பெற்ற குழந்தைதான் பிரசித்தி பெற்ற பிரதாபருத்திரன். ருத்திரமா தேவி இந்தப் பேரனைத் தன்னுடனேயே வைத்துக்கொண்டாள்.



கணபதி தேவன் இறந்துவிட்டான். அதற்குப் பின் ருத்திரமாதேவியின் விருப்பப்படி மந்திரியான கோவிந்தஜீ அவளையே நாட்டுக்கு அரசியாக்கிப் பட்டம் கட்டினார். ஒரு பெண் சிம்மாசனம் ஏறுவதா என்று சிலருக்கு ஆத்திரம் ஏற்பட்டது. முராரி என்பவனும் ஹரிஹர தேவன் என்பவனும் அவளுக்கு விரோதமாகக் கலகம் செய்தார்கள். ஆனால் முன் யோசனை உள்ள மந்திரி கோவிந்தஜீ, புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டார். ஆனால் கலகக்காரர்கள் சும்மா இருப்பார்களா? முராரியும் ஹரிஹர தேவனும் காகதீய ராஜ்யத்தை விட்டு வெளியேறினார்கள். ஓரங்கல்லின் எதிரியான யாதவராஜனுடன் சேர்ந்துகொண்டார்கள். இதற்கெல்லாம் ருத்திரமா தேவியா பயப்படுகிறவள்? வைர நெஞ்சம் படைத்த அந்த வீரப் பெண்மணி தைரியமாகவே இருந்தாள்.

யாதவ அரசன் என்றோ ஒரு நாள் திடீரென்று ஓரங்கல்லை முற்றுகை இடுவான் என்பதை ருத்திரமா தேவி எதிர்பார்த்துத்தான் இருந்தாள்; கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்தி, படைகளையும் கூட்டித் தயாராகவே இருந்தாள். எதிர்பார்த்தபடியே தேசத் துரோகிகளான முராரி, ஹரிஹர தேவன் இருவருடனும் யாதவ அரசன் வந்து ஓரங்கல்லை முற்றுகை இட்டான். அவன் திடீரென்று படையெடுத்த அந்தச் சமயத்தில், ருத்திரமாதேவி கோட்டைக்கு வெளியே இருந்தாள். இது எதிரிகளுக்குச் சாதகமாக முடிந்தது. அவர்கள் நாட்டுக்குள் நுழைந்துவிட்டார்கள். மலை இடிந்து விழுந்தாலும் நிலை கலங்காத ராணி சீக்கிரத்திலேயே தன் படைகளுடன் சேர்ந்துகொண்டு மும்முரமாகப் போரிட்டாள். அதனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் யாதவ அரசன் கோட்டையை இழந்தான். அதற்கு இன்னொரு காரணமும் சேர்ந்துகொண்டது. புலிக்குப் பிறந்தது பூனை ஆகாது அல்லவா? ருத்திரமா தேவி

யின் இளைய பெண்ணான ருயம்பிகா யுத்த சமயத்தில் ஆண் வேஷம் போட்டுக்கொண்டு போரிட்டதால், ராஜ்யத்தைத் திரும்பப் பெற்றதோடு ருத்திரமா தேவி எதிரிகளை விரட்டியடிக்கவும் முடிந்தது. இந்த யுத்தத்தில் எதிரிகள் சிதறி ஓடுவதற்கு இந்த இரண்டு பெண்களுமே காரணம் என்றால் அதிசயமாக இல்லையா இப்படி நாட்டில் அடிக்கடி ஏற்படும் போர்களையும் புரட்சிகளையும் எதிர் நின்று அடக்கியும் வெற்றிகொண்டும், அமைதியை நிலை நாட்டி ஏறக்குறைய முப்பத்தைந்து வருஷ காலம் (1261-1295) காகதீய ராஜ்யத்தை ருத்திர மாதேவி ஆண்டிருக்கிறாள்.

பாரதத்தின் வீரப் பெண்கள் கூட்டத்தில், சுய சாமர்த்தியமும் சக்தியும் கொண்ட ருத்திரமாதேவி சிறந்தஸ்தானத்தைப் பெறுகிறாள்.

## இலக்கியப் பாடம்

நியூ இங்கிலாந்தில் உள்ள சிறிய நகரம் ஒன்றுக்குப் புதிதாக ஒரு குடும்பம் சென்றது. குடும்பத் தலைவி அந்த ஊர் லைப்ரரிக்குச் சென்றபோது, லைப்ரேரியன் சரியாகப் புத்தகங்கள் கொடுக்கவில்லையாம்; இதைப்பற்றி அவள் தன் சிநேகிதியிடம் புகார் செய்தாள். லைப்ரேரியனிடம் போய்ச் சொல்லட்டும் என்பது அவளுக்கு எண்ணம்.

அடுத்த தடவை இதே புதிய குடும்பத்தலைவி, லைப்ரரிக்குச் சென்றபோது, லைப்ரேரியன் அன்போடு இவளை வரவேற்றாள். இவளுக்கென்றே பொறுக்கி வைத்திருந்த இரண்டு சிறந்த நாவல்களையும் இவளுடைய புருஷன் படிப்பதற்காகப் புதிய ஜீவிய சரித்திரம் ஒன்றையும் இவளிடம் அளித்தாள்.

இவள் வீட்டுக்கு வந்ததும், அந்தச் சிநேகிதியிடம் இதையெல்லாம் தெரிவித்து, "நான் உன்னிடம் அவளைப் பற்றிக் கூறிய புகாரை நீ அவளுக்குச் சொல்லிவிட்டாய் போல் இருக்கிறது" என்றாள்.

"அதுதான் இல்லை. நான் அவளிடம் சொன்னதைக் கேட்டு நீ கோபப்பட மாட்டாய் என்று நினைக்கிறேன். 'இந்தச் சின்ன ஊரிலே அவள் எவ்வளவு அற்புதமான லைப்ரரியை வளர்த்துவிட்டாள்!' என்று உன் கணவர் சொன்னதாகவும், 'புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் அவளுக்கு அபாரமான சுவை இருக்கிறது!' என்று நீ சொன்னதாகவுமே அவளிடம் கூறினேன்" என்றாள் சிநேகிதி.

—'ஏ. எம். ஏ. ஜர்னல்'

## திருடனும் ஜவானும்

மிச்சிகன் மாகாணத்தில் ஹைலாண்ட் பார்க் என்ற இடத்தில் ஒரு திருடன் ஓடுவதைப் போலீஸ் ஜவான் ஒருவன் கண்டான். தன் கையிலே இருந்த இரண்டு மூட்டை மளிகைச் சாமான்களை அப்படியே கீழே போட்டான். திருடனைத் துரத்திக்கொண்டு ஓடினான். இரண்டு வீடு தாண்டியிருப்பான். அதற்குள் திருடன் மாயமாய் மறைந்துவிட்டான். ஜவான் திரும்பி வந்து பார்த்தான். மூட்டைகள் இரண்டும் திருட்டுப் போய்விட்டன!

—ஃப்ரான்ஸெஸ் ராட்மான்

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிருர். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

ராமசந்திரன், சென்னை.

கேள்வி: இறந்துபோன முதல் தாரத்தின் மூலம் எனக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. இவர்களில் மூத்த குழந்தைக்குப் பத்து வயசு. பள்ளியில் பிற குழந்தைகளுடைய புத்தகம், பென்சில், காசு முதலியவற்றை மிகவும் தந்திரமாய்த் திருடிவிடுகிருள். பள்ளியிலிருந்து புகார் வந்துகொண்டிருக்கிறது. இவளுடைய தங்கைக்கு எட்டு வயசு. காரணம் இல்லாமல் மயக்கம் போட்டு விழுந்துவிடுகிருள். சுமார் அரை மணி நேரங் கழித்து மயக்கம் தெளிகிறது. இது ஏன்? இதற்குப் பரிகாரம் வேண்டும்.

இவர்கள் தாயில்லாக் குழந்தைகளாயிற்றே என்பதனுல் எனக்கு மிகவும் கவலையா யிருக்கிறது. என் இளைய சம்சாரத்தைக் கவனிக்கவே எனக்கு முடியவில்லை. அவள் மூலமாகவும் எனக்கு இரண்டு குழந்தைகள் உண்டு.

வி: குழந்தைகள் இந்த வயசுகளில் திருடுவது தாற்காலிக குணமாக இருந்து, பிறகு மறைந்துவிடக் கூடும். மூத்த குழந்தையா யிருந்தால் பெற்றேர்களின் முன்னேயே பொருள்களை எடுத்துக் கொள்ளும். பின்னுல் பிறக்கும் குழந்தைகள் ஒளிவு மறைவாய்த் திருடும். இரண்டாவது, மூன்ருவது குழந்தைகளுக்கு இந்த மாதிரி குணம் ஏற்படும். பொருள்கள் - காசு உட்படத்தான் - பிள்ளைகளுக்குப் பெற்ரேருடைய அன்பின் அறிகுறியாகும். முதல் குழந்தையிடம் பெற்ரேர் காட்டும் அளவு அன்பு பின்வரும் குழந்தைகளுக்குக் கிடைக்காது. இதனுல் உண்டாகும் பொருமை காரணமாகவே இரண்டாவது குழந்தை சிறு சாமான்களைத் திருடத் தொடங்கும்.

நண்பர் ராமசந்திரனுடைய குழந்தைகளுக்கு அதிகப்படியான குறை ஏற்பட்டிருக்கிறது. தாயின் அன்பு இல்லை; தந்தையின் அன்பு சிறிய தாயாரின் குழந்தைகளிடம் சென்றுவிட்டது. தந்தையின் அன்புக்குப் பதிலாகப் பொருள்களைத் திருடி அந்தக் குறையை மூத்த குழந்தை ஈடு செய்துகொள்கிருள். இளையவளுக்கோ தந்தை, சிறிய தாயார் இருவருடைய கருத்தையும் ஆதரவையும் திருப்புவதற்கு மயக்கம் போட்டு விழுவது ஓர் உபாயமாகும். ஒருவேளை இவளுடைய தாய்க்கு இந்தமாதிரி மயக்கம் வந்து எல்லோரும் அவளிடம் அதிகப்படியான இரக்கம் காட்டியதை இவள் பார்த்திருக்கலாம்; சூழ்நிலை எப்படிக் குழந்

தைகளுடைய குணத்தைத் திருப்பி விடுகிறது என்பதை இதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

இந்தச் சூழ்நிலையில் பரிகாரம் கடினம். தந்தை அதிக நேரம் இந்தக் குழந்தைகளிடம் செலவு செய்யவேண்டும்.

**கோ. வெ. குருமூர்த்தி, கோவை.**

கே: என் நண்பன் விளையாடி முடிந்ததும் அடி வயிற்றைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விடுகிறான். பிறகு வலிக்கிறது என்கிறான். விளையாடும்போதோ உற்சாகமாகவே இருக்கிறான். என்ன காரணம்?



வி: ஓடி விளையாடும்போது பெருமூச்சு விடவேண்டியிருக்கிறது. அப்போது வயிற்றுத் தசைகள் உள்ளடங்கி இறுகி நிற்கும். இந்தத் தசைகளின் அழுத்தமே வயிற்று வலிக்குக் காரணம். கால்சியம் என்ற சுண்ணும்புச் சத்துக் குறைவு காரணமாயிருக்கலாம். பால் வகைகளை அதிகமாய்ச் சாப்பிடவேண்டும்.

**கருணாகரன், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.**

கே: நான் ஆண்டுக்கு 10 முதல் 20 பவுண்டு வரையில் எடை கூடி வருகிறேன். நெய் சாப்பிடுவதில்லை. பொதுவாகச் சாப்பாடே குறைவுதான். என்னை என் சகாக்கள் பரிகாசம் செய்கிறார்கள். எடைக்குத் தக்கபடி உயரம் இல்லை.

வி: எடை அதிகமாவது குடும்பவாகாயிருக்கலாம். வயசு பதினெட்டுக்குள்ளேதான் இருக்குமென்று நினைக்கிறேன். இன்னும் இரண்டு வருஷத்துக்குள் பருமன்



அதிகமாவது நின்றுவிடும். வைத்தியரை நேரில் கண்டு உணவு ஜாபிதா தயாரித்துக்கொள்ளுவது நலம்.

**பி. ஏ. ஸாமி, உதகமண்டலம்.**

கே: என் மனைவிக்கு வயசு 26. கல்யாணமாகி ஏழு வருஷமாகிறது. முதல் இரண்டு வருஷ காலம் வயிற்று வலி வந்து கஷ்டப்பட்டாள். பின்பு முதல் பிரசவம் குறைப்பிரசவமாக நான்கு மாதத்தில் ஏற்பட்டது. மேலும் இரண்டு குறைப் பிரசவங்கள் ஏற்பட்டு, பிறகு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. திரும்பவும் குறைப் பிரசவங்கள் ஏற்பட்டு, பிறகு ஒரு குழந்தை பிறந்தது. மறுபடியும் இடுப்பு வலி, வயிற்று வலி என்று கஷ்டப்படுகிறாள். இதற்கு நிரந்தரமான வைத்தியம் வேண்டும்.

வி: கருப்பை தளர்ந்து சற்று முதுகு நோக்கிச் சரிந்திருப்பதே இதற்குக் காரணமாயிருக்கும். பெண் வைத்திய நிபுணரைக் கண்டு தக்க சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். ஆப்பரேஷன் செய்துகொண்டால், குணம் உண்டாகலாம்.

**வேலுச்சாமி, வேடசெந்தூர்.**

கே: எனக்கு மூன்று வயசுப் பையன் ஒருவன் இருக்கிறான். பிறந்த ஆறு மாதத்துக்கெல்லாம் அவனுக்கு ஜன்னி போன்ற (கால், கை, உடல் எல்லாம் இழுப்பு) நோய் ஏற்பட்டது. அன்று முதல் இன்றுவரைக்கும் தொடர்ந்து நாட்டு வைத்தியமும் ஆங்கில வைத்தியமும் செய்து வருகிறேன்.

பயனில்லை. நடப்பதோ, பேசுவதோ, சாமான் எதையும் கையில் பிடிப்பதோ முடியாத நிலையில் இன்னும் இருக்கிறன். எந்த நேரமும் அழுதுகொண்டே இருக்கிறன். சில சமயம் ஜன்னி போன்ற இழுப்பு வந்துவிடுகிறது.

இந்த நோயின் வகை என்ன? இது குணமாகுமா? எங்கே சிகிச்சை பெற்றல் நல்லது?

**வி:** மூளையில் உள்ள நரம்புகளுக்குக் கேடு ஏற்பட்டுவிட்டது. முதலில் தோன்றிய ஜன்னி நோய் இளம்பிள்ளை வாதம் போன்ற நோய். மூளை ஓரளவு வளர்வதற்கு முன் அந்த ஆருவது மாதத்தில் மூளைக்குக் கேடு ஏற்பட்டதால் இப்படி ஆகியிருக்க வேண்டும். எனக்குத் தெரிந்தமட்டும் இதற்குப் பரிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை. என்றலும், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி நரம்பு வைத்திய நிபுணரிடம் சென்று காட்டிப் பரிகாரம் உண்டா என்று கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

**ஆனந்தகுமார், பாளையங்கோட்டை.**

**கே-1:** *சாதாரணமாக எண்ணெய் தேய்த்துக்கொண்டபின் குளிப்பது நல்லதா? குளித்தபின் எண்ணெய் தேய்த்துக்கொள்வது நல்லதா?*

**வி:** குளித்தபின் உடம்பில் எண்ணெய் தேய்த்துக்கொள்கிறவர்களை நான் பார்த்ததில்லை. பொதுவாக, எவரும் எண்ணெயை முதலில் தேய்த்துக்கொண்டு உடனே குளிப்பதுதான் வழக்கம். குளித்தபின் தலைக்குமட்டும் தைலம் தடவிக்கொண்டு சிலர் வாரிக்கொள்வார்கள்.

**கே-2:** *பாதரசம் பூசிய குளிர்ச்சிக் கண்ணுடியை அணிவதால் கெடுதல் உண்டா?*

**வி:** நம் கண்களில் இயற்கையாகவே கடுமையான ஒளியைச் சமாளித்துக்கொள்ளத் தக்க அமைப்பு இருப்பதால், குளிர்ச்சிக் கண்ணுடிக்கு அவசியமே கிடையாது. அப்படிப் போட்டுக்கொள்வதானல், பாதரசம் பூசிய கண்ணுடியைப் போட்டுக்கொள்ள வேண்டாம்.

**கே-3:** *தாவர உணவு, மாமிச உணவு இவற்றில் எது அதிகப் பயனுள்ளது? ஏன்?*

**வி:** பிராணி வகையிலிருந்து உற்பத்தியான ஆகாரம் இல்லாமல் ஆரோக்கிய நிலையை நாம் அடைய முடியாது. ஆயினும், மாமிசம் சாப்பிடாமலே ஆரோக்கியம் பெற முடியும். தாவர உணவு, மாமிச உணவு இரண்டிலும் எது அதிகப் பயனுள்ளது என்று கேட்டால், சொல்ல இயலாது. பிராணி வகை உணவு மாமிசமாகவோ பாலாகவோ இருந்து, அதோடு தாவர வகை உணவையும் சேர்த்துச் சாப்பிடுவதே உடலுக்கு முழு ஆரோக்கியத்தைத் தரும்.

**முருகப்பச் செட்டியார், திருச்சி.**

**கே:** *என் வீட்டில் வௌவாலின் கொடுமை சகிக்க முடியவில்லை. ஏராளமான வௌவால் பெருகிவிட்டது. மாடியில் எவ்வளவோ முள்ளை எல்லாம் கொண்டு வந்து வௌவால் புகாதபடி அடைத்து வைத்தும் பயன் இல்லை. இதையும் மீறி இரவெல்லாம் வௌவால்*



*வந்து ஊஞ்சலாடுகிறது. பகல் முழுவதும் அடைந்து கிடக்கிறது. வீடு முழுவதும் ஒரே துர்நாற்றம். வேடுவர்களைக் கூட்டி வந்து வலை போட்டுப் பிடித்தாலும் மறு நாளே வந்து நிரம்பி விடுகின்றன. இதைத் தடுக்கச் சிறந்த வழி வேண்டும்.*

**வி:** நண்பருடைய வீட்டின் அமைப்பைப்பற்றி உள்ளக்கண் முன்னே சித்திரித்துப் பார்க்கிறேன். ஓட்டுக் கூரை; உயரமானது. மாடியில் சூரியவெளிச்சம்

ஏராளமாய்ப் புக வழி குறைவு. வௌவால் வந்து தொங்குவதற்கு ஓட்டுக்கூரையில் வசதி உண்டு. மாடி ஒரே ஹால் போல் இருக்கும் என்று தோன்றுகிறது. வீட்டினருகில் கனி நிறைந்த மரங்கள் இருக்கும். இவை எல்லாம் வௌவாலுக்கு வசதியான நிலை. இந்தக் கேள்வி வைத்தியம் சம்பந்தமானது அல்ல வாதலால், என்னால் பரிகாரம் கூற முடியவில்லை. பெரிய ஜன்னல்கள் வைப்பதுடன் கூரையைத் தட்டொட்டியாக அமைப்பது பரிகாரம் ஆகலாம்.

எம். கங்காதரம், இலங்கை.

கே: என் மகள் பிறந்து பத்து மாதம் ஆகிறது. குழந்தைக்குத் தாய்ப்பால் தவிர ரஸ்க், ஹலிபாரஞ்சு இவற்றைக் கொடுத்து வருகிறேன். ஆயினும், இந்தப் பத்து மாத காலத்தில் எதிர்பார்க்கக் கூடிய அளவைவிடக் குழந்தை மிகக் கேவலமாகவும் மெலிந்தும் தோன்றுகிறது. தவிர, விசித்திரமான ஒரு வியாதியும் அதைப் பீடித்திருப்பதாகத் தோன்றுகிறது. நிமிர்ந்திருக்கும் சமயங்களிலும் நிறுத்திப் பிடித்திருக்கும் சமயங்களிலும் தலையை முன் நோக்கி வெடுக்கென்று அடிக்கிறது. கழுத்து வரைக்கும் தலை தரையை நோக்கி வெடுக்கென்று திரும்புகிறது. இந்த நிகழ்ச்சி கணப்போதில் நிகழ்ந்துவிடுகிறது. ஆரம்பத்தில் இது குறைவாக இருந்தது; இப்போது அடிக்கடி தென்படுகிறது. இது நோயா, பரம்பரைக் குறைபாடா?

வி: இந்தக் குழந்தையின் உள்ளம் சுறுசுறுப்பா யிருக்கிறது. ஆனால், இதற்கு உடலாரோக்கியம் போதாது. தாய்ப் பாலில் சத்துக் குறைவு. பசுவின் பாலைத் தண்ணீர் விடாமலே கொடுக்கவேண்டும். கனி வகையை உணவில் சேர்க்கவேண்டும். ஹலிபாரஞ்சு கொடுப்பதைவிட மீனெண்ணெயைத் தனியாகவும், ஆரஞ்சைத் தனியாகவும் கொடுப்பது மேல். வெளியே காற்றும் சூரிய வெளிச்சமும் படும்படி குழந்தையை எடுத்துக்கொண்டு போகவேண்டும். குழந்தை ஆரோக்கியம் பெறும்போது இந்த விசித்திரமான நோய் குணமாகிவிடும். வேறு வகைச் சூழ்நிலைக் குறையும் ஏதாவது இருக்கலாம். பெற்றோருக்கு இது எத்தனாவது குழந்தை? வீட்டிலுள்ளவர்கள் குழந்தையை அதிகமாய்ச் சீராட்டிப் பாராட்டுகிறார்களா? அதிகமாய்க் குழந்தையைப் பற்றிக் கவலைப்படுகிறார்களா? இந்த விவரமெல்லாம் தெரிந்தால், மேலும் பரிகாரம் சொல்ல முடியும்.

எஸ். வி. ஏ. ஹோன்ஸிஸ்,
திருப்பத்தூர்.

கே: ஒரு பெண் குழந்தை பிறந்து ஒரு வருஷம் நாலு மாதம் ஆகிறது. குழந்தையை ஐந்தாறு மாதத்தில் உட்கார வைத்துப் பழக்கியதில், சிரமப்பட்டே உட்கார்ந்து வந்தது. ஒரு வயசாகியும் முற்றும் உட்கார அதனால் முடியவில்லை; அது தவழவுமில்லை. குழந்தைக்கு அவ்வளவாக வளர்ச்சியும் இல்லை. வெகு நேரம் தூங்குகிறது. குழந்தையைத் தூக்கினால், அதன் கை பின்னே வளைந்து போகிறது. உணவை ஊட்டினால், நன்றாக உண்கிறது. சுறுசுறுப்பாகவே இருக்கிறது. தாய்ப் பால் குடிப்பது ஆறு மாதத்தில் நின்றுவிட்டது. இது என்ன நோய்?

வி: இந்தக் குழந்தைக்கு எலும்பில் பலம் போதாது. கணை நோயினால் இந்தக் கோளாறுகள் நேர்கின்றன என்று நினைக்கிறேன். டி-வைட்டமின் குறையால் ஏற்படுவது கணை நோய். தினம் மீனெண்ணெய் கொடுத்துவந்தால் நோய் குணமாகும் என்று நினைக்கிறேன். குழந்தைக்கு ஆறு மாதமானவுடனேயே, மீன் எண்ணெய் கொடுக்க ஆரம்பித்திருக்க வேண்டும்.

பெருமாள், சித்தனூர்.

கே - 1: எலும்பு நன்றாய் வளர என்ன என்ன பொருள்களை உண்ணவேண்டும்?

வி: எலும்பு வளரக் கால்சியமும் ஃபாஸ்ஃபரஸும் வேண்டும்; இவை காய்கறிகளிலிருந்து கிடைக்கும். பால் முக்கியம். டி-வைட்டமின் அடங்கிய எண்ணெய் அருந்தவேண்டும்.

கே - 2: பாம்பு கடித்தவனுக்கு இன்னும் கொஞ்சம் விஷத்தை ஊசி மூலம் செலுத்தினால், பிழைத்துக்கொள்வானா? (அதாவது காய்ச்சல் வந்தவன் சூடான பொருள்களை உபயோகிப்பதுபோல்.)

வி: பாம்பு கடித்த ஒருவனைப் பிழைக்கச் செய்ய அந்தப் பாம்பையே கொண்டு கடிவாயிலேயே திரும்பக் கடிக்கச் செய்தால் பிழைத்து விடுவான் என்றொரு நம்பிக்கை உண்டு. இதற்கு ஆதாரம் இல்லை. அதே பாம்பைப் பிடிப்பதும் எளிதல்ல. அப்படி அது அகப்பட்டாலும் அதை முன்னே கடித்த இடத்திலேயே கடிக்கச் செய்வதும் சாத்தியமில்லை.

பாம்பு விஷம் மிகவும் அபாயமானது என்பதை நாம் அறிவோம். விஷம் புகுந்த உடலில் மேலும் விஷத்தைப் புகுத்துவது மடத்தனம். ஒருவரும் அப்படிச் செய்ய மாட்டார்கள்.

திருவேங்கடம் செட்டியார்,
திருச்சிராப்பள்ளி.

கே: என் சகோதரியின் பெண்ணுக்கு வயசு 30. சென்ற வருஷம் அவளுக்கு எட்டு மாதம் வயிற்றில் வளர்ந்த குழந்தை ஒன்று பிறந்து இறந்து போயிற்று. அதுமுதல் அவள் படுத்திருக்கும்போது கழுத்திலும் தாடையிலும் காதிலும் வீக்கம் ஏற்படுகிறது. நடந்தாலும் காலைத் தொங்கவிட்டாலும் வீக்கம் ஏற்படுகிறது. பத்து நிமிஷ நேரம் சென்றவுடன் வீக்கம் வடிந்து விடுகிறது. சில நாட்களில் வயிறு உப்பிக்கொள்கிறது. பத்து மாதமாக மாதவிலக்கில்லை. என்ன பரிகாரம்? பழைய ரத்தத்தை நீக்கிப் புதிய ரத்தம் செலுத்த முடியுமா?

வி: ரத்த நாளங்களில் ஏற்பட்டிருக்கும் குறையாலேயே இந்த வீக்கம் தோன்றியிருக்கிறது. நோயாளியை வைத்தியசாலையில் அநுமதித்து ரத்தப் பரீட்சை முதலிய சோதனைகளைச் செய்து, ரத்தம் புகுத்தியோ அல்லது வேறு விதமாகவோ குணப்படுத்தலாம்.

பி. எஸ். ஜகந்நாதன்,
செங்கல்பட்டு.

கே: 49 வயசான என் தாய்க்குச் சில ஆண்டுகளாக நரம்பு மண்டலத்தைச் சேர்ந்த நோய் உண்டாகியிருக்கிறது. நாள் முழுவதும் நடுக்கம். வேலை செய்தால் இசிவு வலி ஏற்படுகிறது. இது இரண்டு அல்லது மூன்று நிமிஷந்தான் இருக்கிறது. ஆயினும், திரும்பவும் சுகநிலை பெறப் பத்து நாள் ஆகிறது. சிலவேளை கட்டை மாதிரி மூன்று முதல் நான்கு மணி நேரம் வரையில் கிடக்கிறாள்.

வி: இது ஒரு வகை அதிர்ச்சி நோய். மன நோய் வைத்தியரிடம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## நிபுணரின் ஆலோசனை

விவசாய நிபுணரின் ஆபீஸ் டெலிபோன் மணி அடித்தது. போனை எடுத்துக் காதில் மாட்டினார் நிபுணர்.

''ஹல்லோ!'' என்று இனிமையாகக் கூவினார்.

வந்தது ஒரு கிழவியின் குரல்: ''என்னிடம் பல பெட்டைக் கோழிகள் இருக்கின்றன. அவற்றுக்கு நடுவே சேவலை விட்டால், முட்டைக்கு எவ்வளவு காலம் நான் காத்திருக்க வேண்டும்?''

''ஒரு நிமிஷம் இருங்கள்'' என்று மிக்க மரியாதையாகச் சொன்ன நிபுணர், சம்பந்தப்பட்ட முக்கியமான புஸ்தகத்தைத் தேடி விஷயத்தைக் கண்டு பிடிப்பதற்காக, டெலிபோனைக் கீழே வைக்கப் போனார்.

அதே நிமிஷம், ''வந்தனம்'' என்று சொல்லி, கிழவி போனை மாட்டிவிட்டாள்.

—'தி வாக்கின் டங்'

மரத்திலேயும் செடியிலேயுந்தான் இது விளைகிறது; ஆனால் நாம் நினைப்பதுபோல் அல்ல.

# ஜவ்வரிசியின் கதை

## வி. பாலு

செடி கொடிகளில் ஏராளமாக உள்ள வெளுப்பான ஒரு பொருள் 'ஸ்டார்ச்'. இதற்கு ருசி இல்லை. இது வழவழப்பா யிருக்கும். அநேகமாக எல்லாச் செடிகளின் தண்டுகளுக்குள்ளும் சிறு பொடியாக இது தென்படுகிறது.

பொதுவாக அரிசி, கோதுமை, சோளம், ஜோவார் போன்ற தானியங்களிலிருந்துதான் ஸ்டார்ச் கிடைக்கிறது. பனைமர வகைகளிலிருந்தும் பல கிழங்குகளிலிருந்தும் ஸ்டார்ச் எடுக்கலாம். இப்படிப் பல மூலங்களிலிருந்து எடுக்கும் ஸ்டார்ச்சுகளை ஒன்றாய்க் கலந்துவிட்டால், பிரித்து வித்தியாசம் காணமுடியாது. ஆயினும், ஒவ்வொரு பொருளிலிருந்தும் எடுக்கும் ஸ்டார்ச்சுக்குத் தனிப்பட்ட அடையாளங்கள் இருப்பதால், பூதக் கண்ணாடியின்மூலம் வித்தியாசத்தை அறிந்துகொள்ளலாம்.

பல வித ஸ்டார்ச்சுகளை ஜலத்தில் ஊற வைத்து யந்திரங்களில் போட்டு ஒன்றுபடுத்தினால், வட்டமான சிறுசிறு மணிகளின் (குளோபூல்) உருவத்தை அடைகிறது. அதை உலர்த்தி வறுத்து எடுத்தால், ஜவ்வரிசி (ஸாகோ) ஆகிவிடும். 'ப்ராஸஸ்' செய்தோ பாதி வேகவைத்தோ எடுத்ததுதான் ஜவ்வரிசி. அதுவும் ஒரு தானியம் என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இது தவறு.

மெட்ரோக்ஸிலோன் என்ற தாவர சாஸ்திர நிபுணரின் பெயரால் வழங்கும் ஜவ்வரிசிதான்முன் நமக்குக் கிடைத்து வந்தது. ஒரு வகைப் பனைமரத்தின் நாரில் உள்ள சோற்றை ஜலத்தில் இட்டுப் பிழிந்து எடுத்தது இது.

கிழக்கிந்தியத் தீவுகளில் பள்ளமான சதுப்பு நிலங்களில் ஸாகோ பனை தழைத்து வளர்கிறது. அதன் அடிமரம் நல்ல பருமனாயிருக்கும். மிக உயரமான மரம் முப்பது அடி வரைக்கும் வளர்ந்திருக்கும். பதினைந்து ஆண்டுகளில் இந்தப் பனை முற்றிப் பூக்கிறது. இந்தச் சமயம் மரத்தின் உட்பகுதியில் ஸ்டார்ச் நிறைந்திருக்கிறது. காய்த்துப் பழம் பழுக்காவிட்டால், இந்த ஸ்டார்ச் முழுவதும் பழத்துக்காகச் செலவழிந்து, மரத்தின் உள்ளே வெறும் மூங்கில்போல் சூன்யமாகிவிடும். எனவே, இந்தப் பனைகளைப் பூத்த உடனேயே வெட்டி ஸ்டார்ச் செய்கிறார்கள். கொஞ்ச காலமாகப் பல வேர்



காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 3-8-'58), கோழிக்கோடு.

களிலிருந்தும் கிழங்குகளிலிருந்தும் ஜவ்வரிசி செய்கிறார்கள். பனையிலிருந்து எடுக்கும் ஸ்டார்ச்சின் குணந்தான் கிழங்கு வர்க்கத்திலிருந்து எடுக்கும் ஸ்டார்ச்சிலும் இருக்கிறது. ரசாயன ரீதியில் பார்த்தாலும் சரி, உடல் போஷணை முறையில் பார்த்தாலும் சரி, இந்த ஸ்டார்ச்சுகளுக்குள் வேற்றுமை இல்லை. ஆகவே, எல்லா ஸ்டார்ச்சுகளிலிருந்தும் 'ஜவ்வரிசி' செய்யலாம்.

அரிசி, கோதுமை போன்ற தானியங்களிலிருந்து செய்யும் ஜவ்வரிசி வெந்து பக்குவப்படத் தாமதமாகும். வெந்த பிறகு கெட்டியான இதைப் பார்த்தால், அரிசியை அளிய வைத்ததுபோல் தோன்றும். வேர்களிலிருந்தும் கிழங்குகளிலிருந்தும் எடுக்கும் ஜவ்வரிசி எளிதில் வெந்துவிடும். அப்போது கண்ணாடி மணி ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டதுபோல் மாறிவிடுகிறது. இதனால்தான் இதை ஜவ்வரிசி (ஒட்டிய அரிசி) என்று நாம் குறிப்பிடுகிறோம்.

ஒரு காலத்தில் மரச்சீனி ஜீர்ணமாவது கஷ்டம் என்ற அபிப்பிராயம் இருந்து வந்தது. ஆனால் ஜவ்வரிசி மரத்திலிருந்து எடுக்கும் ஸ்டார்ச்சைவிட மரச் சீனியிலிருந்து எடுக்கும் ஸ்டார்ச் விரைவில் ஜீர்ணமாகிறது என்பதை அமெரிக்கரின் விஞ்ஞான ஆராய்ச்சி தெளிவுபடுத்தி யிருக்கிறது. ப்ராஸஸ் செய்யாத வேறு சில பொருள்களிலிருந்து உருவாகும் ஜவ்வரிசிகள், எந்த அளவு ஜீர்ணமாகின்றன என்பதுபற்றிய ஆராய்ச்சி இப்போது மைசூரில் நடந்து வருகிறது.

இதற்கு 'ஸாகோ' என்ற பெயர் ஏற்பட்டதற்குக் காரணம், இது முதலில் ஸாகோ பனையிலிருந்து உண்டானதுதான். பம்பாய், கேரளம், பஞ்சாப், வங்காளம் இந்த ராஜ்ய சர்க்கார்கள் ஸாகோ என்ற பெயருக்குக் காரணம் கூறியிருக்கின்றன. பல தரப்பட்ட ஸாகோ மரங்களிலிருந்து செய்வது ஸாகோ என்பதுதான் பலருடைய கருத்தும். மத்திய உணவு ஆராய்ச்சிக் கமிட்டியார் 1953-இல் மரச்சீனியிலிருந்து எடுக்கும் ஸாகோவுக்கு மரச்சீனி ஸாகோ என்று பெயர் வைக்க வேண்டும் என்றார்கள். 1954-இல் அதே கமிட்டியார் ஸாகோ என்ற சொல்லின் முந்திய அர்த்தத்தை மாற்றி, ஸாகோ பனை, மரச்சீனி எல்லாவற்றிலிருந்தும் எடுக்கும் பொருளை ஸாகோ என்று குறிக்கலாம் என்று தீர்மானித்தார்கள்.

முதல் உலக மகாயுத்தத்துக்கு முன்பு சிங்கப்பூரிலிருந்தும் பினங்கிலிருந்தும் ஜவ்வரிசி நம் தேசத்தில் இறக்குமதியாகி வந்தது. அந்த நாடுகள் ஜப்பானுக்கு வசப்பட்டது முதல், அங்கிருந்து அது வருவதில்லை. இதனால் மரச்சீனியிலிருந்து ஜவ்வரிசி செய்ய ஆரம்பித்தார்கள். வறட்சி மிகுந்த சேலம் ஜில்லாவில் இப்போது சிறிதும் பெரிதுமான நூற்றுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் ஜவ்வரிசி உற்பத்தி செய்கின்றன. சேலம் ஜில்லாவிலும் மலையாளத்திலும் உற்பத்தியாகும் மரச் சீனிகள்தான் அந்த ஆலைகளில் ஜவ்வரிசி செய்யப் பயன்படுகின்றன. அவற்றில் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி ஆறாயிரம் டன் ஜவ்வரிசி தயாராகிறது. இந்தத் தொழிற்சாலைகள் அங்கே வாழும் அநேக ஆயிரம் மக்களுக்கு வேலை கொடுக்கின்றன.

ஜவ்வரிசி செய்வது சுலபம். மரத்தில் சீனியுள்ள பகுதியைத் தோல்சீவி யந்திரத்தில் இட்டு நன்றாகப் பொடியாக்குவார்கள். பிறகு ஜலம் சேர்த்து அரித்து, நாரையும் சிறு குச்சியையும் அகற்றுவார்கள். மிகுந்த சீனியைப் பெரிய பாத்திரத்தில் இட்டு ஊற வைப்பார்கள். ஜலத்தின் மேலே மிதந்து வரும் திராவகத்தை அகற்றி, அடியே உறைந்திருக்கும் ஸ்டார்ச்சைத் தனியாக எடுத்து, கொஞ்சம் உலர்த்திப் பொடித்து, துணிப்பையிலோ யந்திரத்திலோ போட்டு, மணி மணியாக உருட்டுவார்கள். ஒரே தரமான மணிகளைப் பிரித்து எடுப்பதற்காகச் சல்லடையில்

போட்டுச் சலிப்பார்கள். அப்புறம் கொஞ்சம் எண்ணெய் தடவிப் பளபளப்பும் உறுதியும் ஏற்படும்வரைக்கும் வறுப்பார்கள். வறுத்தெடுத்த மணிகளை வெயிலில் காயவைத்து, யந்திரங்களின் உதவியால் மணிகளைத் தரம் பிரிப்பார்கள்.

மரச் சீனியிலிருந்து ஜவ்வரிசி செய்யும் தொழிலை இந்தியாவில் ஆரம்பித்துப் பதினைந்து ஆண்டுகள் தான் ஆகின்றன. இதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே மலேயா, ஜாவா, இண்டோனீசியா போன்ற நாடுகள் ஜவ்வரிசி செய்வதில் ஈடுபட்டுவிட்டன.

நம் நாட்டில் வீடுகளில் ஜவ்வரிசி பலவிதமான பட்சணங்கள் செய்ய உதவுகிறது. நோயாளிகளுக்கு ஓர் உணவாகவும் இருக்கிறது. விரத தினங்களில் பம்பாய் போன்ற ராஜ்யங்களில் மக்கள் இதை விசேஷமாக உபயோகிக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ஏழாயிரம் டன் ஜவ்வரிசி நம் நாட்டில் செலவாவதாக, 'இண்டியன் டாரிஃப் போர்டி'ன் அறிக்கை கூறுகிறது.

வியாபாரத்துக்காகத் தயாராகும் ஜவ்வரிசியில் பெரும் பகுதி ஸ்டார்ச், சிறிது கால்ஸியம், தாதுப்பொருள் மூன்றும் இருக்கின்றன. சுத்தமாகத் தயாரிக்காவிட்டால் ஜவ்வரிசியில் பொடியும் நாரும் கலந்திருக்கும். இதைத் தயாரிக்கும்போது ஜீர்ணத்துக்குக் கேடான பூச்சிகள் இல்லாமலும் வெளி அழுக்குச் சேராமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் உற்பத்தியாகும் ஜவ்வரிசியின் தரம் குறைந்ததல்ல. எனவே, இந்தத் தொழிலை மேலும் மேலும் வளர்த்து முன்னுக்குக் கொண்டு வருவது அவசியம். சர்க்கார் இதற்குத் தனி நிலவாரம் ஏற்படுத்தியிருப்பதும், மைசூர் உணவு ஆராய்ச்சிச் சாலையில் நடக்கும் ஆராய்ச்சியும் இந்தக் காரியத்துக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

## சரியான மரியாதை

பிரபல அமெரிக்க நகைச்சுவை ஆசிரியரான மார்க் ட்வேன் எப்போதும் சொகுசை விரும்புகிறவர். படித்தாலும் சரி, எழுதினாலும் சரி, படுக்கையில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டேதான் அந்த வேலையைச் செய்வார். ஒரு நாள் காலையில் யாரோ ஒரு பத்திரிகை நிருபர் இந்த ஆசிரியரைப் பேட்டி காண வந்தார். நிருபரைத் தம்முடைய படுக்கை அறைக்கு அனுப்பிவிடும்படி மனைவியிடம் மார்க் ட்வேன் சொன்னார்.

மனைவி ஆட்சேபித்தாள்: ''நீங்கள் படுக்கையில் படுத்திருக்க, எதிரே வந்து அவர் நிற்பதா? இதுவா மரியாதை?'' என்றாள்.

ஆசிரியர் ஒரு கணம் யோசித்தார். பிறகு, ''நீ சொல்வதும் நியாயந்தான்'' என்று ஒப்புக்கொண்டார். மேலும் தொடர்ந்து, ''இந்த விஷயத்தைப்பற்றி நான் நினைக்கவேயில்லை. ஒரு காரியம் செய்: வேலைக்காரியைக் கூப்பிட்டு, இங்கே இன்னொரு படுக்கை போடச் சொல்'' என்றார்.

—'ஈவினிங் க்ராணிக்கிள்,' ஆலென் டவுன்.

நாவல் சுருக்கம்:

# அன்னையின் குரல்

மூல ஆசிரியர்: **ஆலன் பேடன்**

தமிழாக்கியவர்: **சி. சீனிவாசன்**

''கடந்த பத்தாண்டுகளில் வெளி வந்துள்ள நாவல்களிலெல்லாம் சிறந்த ஒன்று 'க்ரை தி பிலவட் கண்ட்ரி' (அன்புத் தாயகமே, அழு) என்ற இந்த நூல்'' என்று இதன் தமிழாக்க முகவுரையில், பிரஸிடென்ஸி காலேஜ் ஆங்கிலப் புரொபஸர் ஸ்ரீமதி ஜி. பார்த்தசாரதி கூறுகிருர். ஆப்பிரிக்க நாட்டில், வெள்ளையரும் சுதேசிகளும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளாத அறியாமையால் நேரும் விபரீதத்தைச் சித்திரிப்பது இது. ஆயினும், இரு தரத்தவரும் மனிதர்கள்தான், மனிதப் பண்பு நிறைந்தவர்கள் தான் என்பதை இதிலே ஆசிரியர் விளக்குகிருர். தெளிவான மொழிபெயர்ப்பு.

---

காப்பிரைட்: அன்னையின் குரல் (தமிழ் மொழிபெயர்ப்பு நாவல்); வெளியிட்டது: ஜோதி நிலையம்,
திருவல்லிக்கேணி, சென்னை-5;

# அன்னையின் குரல்

★

ஆவிகளின் கற்பனைக்கும் எட்டாத அளவு எழில் கொழிக்கும் மரகத மலைகள். அவற்றினூடே, நம் சிந்தையை அள்ளிச் செல்கிறது ஓர் அழகிய சாலை. அது இகோபாவில் துவங்கி, ஏழு மைல் தூரம் மலைமீது ஏறுகிறது. அதன் முடிவில் உள்ளது காரிஸ்ப்ரூக். பனிப்படலம் போர்த்திராதபோது ஆப்பிரிக்காவின் வனப்புமிக்க பள்ளத்தாக்குகளில் ஒன்றை அங்கிருந்து பார்க்கலாம். சுற்றிலும் எங்கெங்கு நோக்கினும் பசும் புல்வெளி; டிடிஹோயா என்னும் புள்ளினத்தின் புலம்பலும் கேட்கிறது. கீழே விரிந்து கிடக்கும் பள்ளத்தாக்கின் இடையே ஊர்கிறது டிராகன்ஸ்பர்க்கிலிருந்து கடலை நோக்கி வளைந்தோடும் உம்ஜிம்குலு நதி. அதற்கப்பால் அடுக்கடுக்காக மாமலைகள். அவற்றுக்கும் அப்பாலோ கிழக்குக் கிரிகாலந்து மலைத்தொடர்களின் நெடிதுயர்ந்த சிகரங்கள்.

மாதா கோயிலை நோக்கி ஓடுகிறாள் ஒரு சிறுமி. அவளுடைய கையிலே ஒரு கடிதம்; முகத்திலே ஒரு பெருமிதம். ஆலயத்தையடுத்து ஒரு வீடு. அதன் கதவை மெள்ளத் தட்டுகிறாள் சிறுமி. மேஜைக்கு முன் அமர்ந்து எழுதிக்கொண் டிருக்கும் பூஜ்யர் குமாலா நிமிர்ந்து, அவளை உள்ளே வரச் சொல்கிறார். பெரிய மனிதர் வீடாயிற்றே என்று பயப்படுகிறவள் போல, மிகுந்த எச்சரிக்கையுடன் கதவைத் திறந்து கொண்டு, தயங்கியபடியே நுழைகிறாள் அந்தச் சின்னஞ்சிறு குழந்தை.

''கடிதமொன்று கொண்டு வந்திருக்கிறேன், சாமி!''

''கடிதமா? எங்கிருந்து, மகளே?''

''கடையிலிருந்துதான், சாமி. உங்களிடம் கொடுக்கச் சொல்லி அந்த வெள்ளைக்காரர் தந்தார்.''

''நல்லது; போய் வா.''

பிறகு மனைவியை அழைத்து, ''அந்தக் குழந்தை ஒரு கடிதம் கொண்டு வந்தாள்; நீயே பார்!'' என்றார் குமாலா.

உறையைக் கையிலெடுத்தாள் அவள். முகவரியை மெதுவாகப் படித்தாள்: 'பூஜ்யர் ஸ்டீபன் குமாலா, அர்ச். மார்க் ஆலயம், இண்டாட்ஷேனீ, நேட்டால்.'

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மனைவி சொன்னாள்: ''இது நம் மகனிடமிருந்து வந்ததல்ல.''

''இல்லை, நம் மகனிடமிருந்து வரவில்லை இது'' என்று பெருமூச்சுடன் கூறினார் குமாலா.

''கெர்ட்ரூடினிடமிருந்து வரவில்லை இது.''

''ஒருகால், என் தம்பி ஜான் எழுதியிருக்கலாம்.''

''இல்லை, ஜானிடமிருந்து வந்ததல்ல.''

சற்று மௌனத்துக்குப் பிறகு அவள் சொன்னாள்: ''கடிதத்துக்காகத் தவம் கிடக்கிறோம். ஆனால், அது வந்துவிட்டாலோ, திறந்து பார்க்க அஞ்சுகிறோம்!''

''பயப்படுவது நான் அல்ல! திறந்து படி; நான் கேட்கத் தயார்.''

உஷாராக உறையைக் கிழித்துக் கடிதத்தை அவள் வெளியில் எடுத்தாள். மெதுவாக, கவனமாக, வாசிக்கத் தொடங்கினாள்:

''மிஷன் விடுதி,
ஸோபியா டவுன்,
ஜோஹான்னிஸ்பர்க்.
செப்டம்பர் 25௳ 1946.

ஏசுவின் தொண்டரே, என் சகோதரரே! இங்கே ஓர் இளம் பெண்மணியை நான் சந்திக்க நேர்ந்தது. அவள் பெயர் கெர்ட்ரூட் குமாலா. அவள் தங்கள் சகோதரி என்று அறிகிறேன். கடும் நோய்வாய்ப்பட் டிருக்கிறாள்.

ஆகவே, தாங்கள் இங்கே விரைந்து வரவேண்டு கிறேன். மேலே உள்ள முக வரியில் என்னைச் சந்தித்தால், மேலும் சில விஷயங்கள் கூறு கிறேன். தங்க அதிகச் செலவில்லாத இடமும் தேடித் தருகிறேன்.

—தியோபிலஸ் இம்ஸிமாங்கு.''

மனைவி கேட்டாள்: ''என்ன செய்யப் போகிறீர்கள், ஸ்டீபன்?''

''எப்படியோ, நமக்கு இருப்பது ஒரே பிள்ளை. ஜுலூக்களிடையே குழந்தைகளுக்குப் பஞ்சமில்லை. ஆயினும், நமக்கு என்னவோ ஒரே மகன்தான். போனால் யாரும் திரும்ப மாட்டாரென்று நீ சொன்ன ஜோஹான்னிஸ்பர்க்குக் குப் போய்விட்டான் அவன். என் சொந்தப் பிள்ளை, என் உடன் பிறந்த தங்கை, என் சொந்தத் தம்பி - எல்லாருமே சென்று விட்டார்கள். ஒரு வரிகூட எழுதாமல் இருக்கிறார்கள். நம் மனவருத்தத்தை அவர்கள் அறியாதிருக்கிறார்களோ, அறிந் தும் அதைப் பொருட்படுத்தாம லிருக்கிறார்களோ, தெரிய வில்லை.'' அவர் குரல் சற்று ஓங்கியது. சற்று நின்று, ''சரி, எப்போது போகலாம்?'' என்று கேட்டார்.

''நாளைக்கே!''

''பிஷப்புக்கு இப்போதே எழுதி விடுகிறேன். திரும்பி வர எவ் வளவு நாளாகுமோ தெரியாது என்றும் சொல்லிவிடுகிறேன்.''

ஒரு வழியாக ஜோஹான்னிஸ் பர்க் பெரும் பயணம் முடி வடைந்துவிட்டது. நம்பிக்கை யூட்டும் இந்த இளைஞர் இம் ஸிமாங்கைக் குமாலாவுக்குப் பிடித்துவிட்டது.

''நண்பரே, டிடெபி என்ற கிழவியின் வீட்டில், நீங்கள் தங்கு வதற்கு ஏற்பாடு செய்திருக் கிறேன். அவளும் நம் மதப் பிரிவைச் சேர்ந்தவளே; நல்ல பெண்மணி. இம்ஸீடு வகுப்பின ளாக இருந்தபோதிலும் அவளுக்கு ஜுலூ மொழி நன்றாகத் தெரியும். ஒரு பாதிரியார் தம் வீட்டில் தங்குவதைப் பெருமையாகவே கருதுவாள் அவள். மேலும், வாரத்துக்கு மூன்று ஷில்லிங்தான் வாடகை; மிக மலிவு. மிஷனைச் சேர்ந்தவர்களுடன் நீங்கள் உங்கள் சாப்பாட்டை அங்கேயே வைத்துக் கொள்ளலாம். கையை அலம்பிக் கொண்டு செல்லலாம், வாருங் கள்'' என்றார் இம்ஸிமாங்கு.

சாப்பாடு முடிந்தபின், ''என் தங்கைபற்றி அறிய மிக ஆவலாக இருக்கிறேன்'' என்றார் குமாலா.

''ஆம்; ஆம், உங்களுக்குக் கவலை இருக்கத்தான் இருக்கும். இருந் தாலும் முதலில் இதைச் சொல் லுங்கள்: அவள் ஜோஹான்னிஸ் பர்க்குக்கு எதற்காக வந்தாள்?''

''இங்கே சுரங்கங்களில் வேலை செய்ய வந்தான் அவளுடைய கண வன். வெகு நாள் வரையில் அவன் திரும்பவேயில்லை. அவனிடமிருந்து கடிதமும் வரவில்லை. அவன் உயிருடன் இருக்கிறானா, இல்லையா என்பதே அவளுக்குத் தெரிய வில்லை. ஆகவே, தன் கைக்குழந் தையுடன் அவனைத் தேடி இங்கே வந்தாள்.''

இம்ஸிமாங்கு ஒன்றும் சொல்லா மல் சும்மா இருந்தார். எனவே, கவலையுடன் கேட்டார் குமாலா.

''அவளுடைய நோய் மிகக் கடுமையானதோ?''

இம்ஸிமாங்கு அமைதி யாகவே மறுமொழி கூறினார்: ''ஆமாம், மிகக் கடுமையான பிணிதான் அவளைப் பீடித்திருக் கிறது. ஆனால், நீங்கள் நினைப்பது போன்ற நோய் அல்ல; அதைவிட மோசமானது. உங்களை நான் இங்கே தருவித்ததற்குக் கார ணம், அந்தப் பெண் தனியாக இருக்கிறாள் என்பதுதான். கணவனை அவள் தேடிக் கண்டுபிடித்தாளோ இல்லையோ, அது எனக்குத் தெரி யாது. ஆனால், இப்போது அவளுக் குக் கணவன் இல்லை. இன்னும் உடைத்துச் சொல்லிவிடுகிறேனே: அவளுக்கு இப்போது பல கணவர் கள் இருக்கிறார்கள்.''

''அட ஆண்டவனே!''

''அவள் கிளார்மாண்டில்தான் வசித்து வருகிறாள். இங்கிருந்து அது அதிக தூரம் இல்லை. அங்கே

உள்ள தெருக்களில் சாராயம் ஆருக ஓடும். எங்கே போனுலும் சாராய நாற்றத்தைத் தவிர, வேறென்றும் இராது. இதைத் தயாரித்து விற்பதுதான் அவளுக்கு வேலை. எனக்கு வருத்தத்தைத் தந்தபோதிலும் உங்களிடம் எதையும் நான் ஒளிக்க விரும்பவில்லை: காசு கொடுக்கும் எவனுடன் வேண்டுமானுலும் இரவைக் கழிக்கத் துணிந்தவர்கள் இந்தப் பெண்டுகள். அவள் வசிக்கும் இடத்தில் ஒரு முறை கொலை கூட நடந்திருக்கிறது. குடித்துவிட்டுச் சூதாடுவார்கள். கத்திக் குத்துகளும் அங்கே சகஜம். உங்கள் தங்கை பல தடவை சிறைக்கும் சென்றிருக்கிருள்.''

நாற்காலியில் நன்ருகச் சாய்ந்துகொண்டு மேஜைமீதுள்ள புத்தகத்தை முன்னும் பின்னும் நகர்த்தத் தொடங்கினுர் இம்ஸிமாங்கு.

''இது உங்களுக்கு மிகவும் பயங்கரமான செய்திதான், இல்லையா?''

குமாலா மௌனமாகத் தலையை ஆட்டினுர்.

சற்று நேரம் மௌனம் நிலவியது. கடைசியில் குமாலாதான் பேசினுர்.

''குழந்தை எங்கே இருக்கிறது என்று தெரியுமா உங்களுக்கு?''

''அங்கேயேதான் இருக்கிறது அதுவும். ஆனுல், குழந்தை வசிக்கக்கூடிய இடமா அது? நான் உங்களை வரவழைத்ததற்கு அதுவும் ஒரு காரணம். ஒரு வேளை தாயை மீட்க முடியாவிட்டால் குழந்தையையாவது நீங்கள் காப்பாற்றிவிடலாம் அல்லவா?''

''அந்த இடம் எங்கே இருக்கிறதென்று சொன்னீர்கள்?''

''இங்கேயிருந்து அதிக தூரமில்லை. நாளை உங்களை அந்த இடத்துக்கு அழைத்துச் செல்கிறேன்.''

''என்னை மற்றெரு பெருங் கவலையும் ஆட்டி வைக்கிறது.''

''என்னிடம் நீங்கள் மனம் விட்டுச் சொல்லலாம்.''

''என் மகனைப்பற்றிய கவலை. அப்ஸலோம் என்பது அவனுடைய பெயர். என் தங்கையைத் தேடித்தான் அவன் புறப்பட்டு வந்தான்; திரும்பவும் இல்லை, கடிதம் எழுதவும் இல்லை. அவனுடைய தாயும் நானும் எழுதிய கடிதங்களெல்லாம் அவனை அடையாமலே திரும்பிவிட்டன. நீங்கள் கூறியதைக் கேட்டதும் என் பயம் பல மடங்காகிவிட்டது.''

''அன்பரே, அவனைக் கண்டுபிடிக்க முயல்வோம். ஒருகால் உங்கள் உடன்பிறந்தவளுக்குத் தெரிந்திருக்கலாம் அவனைப்பற்றி.''

''இன்னெரு கவலை எனக்கு. இந்த ஊரிலேதான் என் தம்பியும் இருக்கிருன். அவனிடமிருந்தும் கடிதமே இல்லை. அவனுடைய பெயர் ஜான் குமாலா. தச்சுத் தொழிலாளி.''

''அவரா? அவரை எனக்குத் தெரியும். அவருக்கு ஓய்வேது? அவர் இங்கே பெரிய அரசியல்வாதி. மதம் அவருக்கு ஒரு பொருட்டே அல்ல. தென்னுப்பிரிக்காவுக்குக் கடவுள் செய்யத் தவறிவிட்ட பணியை மனிதன் செய்ய வேண்டும் என்பதே அவருடைய கோஷம்'' என்ருர் இம்ஸிமாங்கு.

குமாலா பெரிதும் வருத்தப்பட்டார்.

பின்பு, கிழவி டிடெபியின் வீட்டில் குமாலாவை இம்ஸிமாங்கு கொண்டுபோய் விட்டார்.

அடுத்த நாள் குமாலாவை அவருடைய சகோதரியின் ஜாகைக்கு அவரே அழைத்துச் சென்ருர்.

''இந்தத் தெருவேதான், தோழரே! பதினேராவது எண்ணுள்ள வீடு. நீங்கள் அங்கே தனியே போகத்தானே விரும்புகிறீர்கள்? அடுத்த வீட்டில் உங்களுக்காகக் காத்திருக்கிறேன். தங்கை வீட்டின் கதவைத் தட்டிக் கூப்பிடுங்கள்'' என்ருர் இம்ஸிமாங்கு.

அந்த வீட்டில் சிரிப்பொலி அலைமோதுகிறது. கேட்கும்போதே கிலியூட்டும் கெக்கெலிச் சிரிப்பு. பல ஆண்களின் பேச்சு முழக்கத்திடையே ஒரு பெண்ணின் குரலும் கேட்கிறது. தயங்காமல் தட்டுகிருர் குமாலா; அவளே வந்து கதவைத் திறக்கிருள்.

''கெர்ட்ருட், நான்தான்.''

அவள் கண்களில் தென்படுவது பயக்குறிதான். ஐயமில்லை!

அங்கேயே நின்றபடி ஒருவரை ஒருவர் உற்றுப் பார்க்கிறார்கள். அவருக்குக் கவலை; அவளுக்கோ அச்சம். மறுபடியும் அறைக் குள்ளே எட்டிப் பார்க்கிறாள். கத வொன்று மூடும் சப்தம் கேட் கிறது. அதற்குப் பிறகே அண் ணனை உள்ளே அழைக்கிறாள். அப் போதுதான் அவரிடம் கையையும் நீட்டுகிறாள். தண்ணென்று, உணர்ச்சியற்று, உயிரற்று இருக் கிறது அந்தக் கை.

இருவரும் அமர்கிறார்கள்.

''எனக்கு நீ கடிதம் எழுதவே இல்லையே!''

''ஆமாம், எழுதத்தான் இல்லை.''

''அது போகட்டும், எங்கே உன் கணவன்?''

''அவரைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை, அண்ணா.''

''அதை நீ ஏன் எனக்கு எழுத வில்லை? எங்களுக்குக் கவலையாக இருக்குமென்று உனக்குத் தெரி யாதா?''

''எழுதுவதற்குப் பணம் இல்லையே, அண்ணா!''

''நீ பெரிய பணக்காரியாகி விட்டதாக அல்லவா கேள்விப் படுகிறேன்!''

''நான் ஒன்றும் பணக்காரி அல்ல.''

''சிறைக்குக்கூட நீ சென்று வந்திருப்பதாகச் சொல்கிறார் களே?''

''ஆம், அது உண்மைதான்.''

''சாராய விஷயமாகத்தானே சிறை சென்றாய்?''

''நான் குற்றம் செய்யவில்லை, அண்ணா. வேறொருத்தியால் வந்த வினை அது.''

''நீ அவளுடன் தங்கியிருந் தாயா?''

''ஆமாம்.''

''அப்படிப்பட்டவளுடன் நீ ஏன் தங்கினாய்?''

''எனக்கு வேறு போக்கிடம் இல்லை.''

''அவள் தொழில் செய்வதற்கு நீ உதவியது உண்மைதானே?''

''எனக்கு என் குழந்தையைக் காப்பாற்றப் பணம் தேவையாக இருந்தது.''

''குழந்தை இப்போது எங்கே?''

''குழந்தையை இதோ அழைத்து வரச் சொல்லுகிறேன், அண்ணா.''

அவள் கண்களிலே மருட்சி. சுவரைத் தடுமாறித் தடவுகின்றன அவளுடைய விரல்கள். அவ ருக்கோ கோபம் கொந்தளித் தெழுகிறது.

''எங்களையெல்லாம் மீளாத அவ மானத்தில் ஆழ்த்திவிட்டாய். சாராயம் விற்பவள்! விபசாரி! அதோடு, குழந்தை வேறு! உன் சகோதரன் ஒரு பாதிரி என்பதை மறந்தேவிட்டாயா? ஏன் இப்படி யெல்லாம் செய்ய துணிந்தாய் நீ?''

சிக்கித் துன்புற்ற மிருகத்தைப் போல் துயரத்துடன் பார்த்தாள் அவள்.

''நான் உன்னைத் திரும்ப அழைத்துச் செல்லத்தான் வந் திருக்கிறேன்.''

அவள் தரையில் விழுந்து கதறு கிறாள்.

''என்னுடன் வருவதற்குச் சம் மதந்தானே உனக்கு?''

''நான் மிகவும் கெட்டவள், அண்ணா. திரும்பி வருவதற்கே தகுதி இல்லாதவள். என்னை மன்னி யுங்கள்.''

குமாலாவின் கண்கள் கலங்கு கின்றன. நெஞ்சில் இரக்கம் பொங்க, மெள்ள அவளைத் தட் டிக் கொடுக்கிறார்.

''கடவுள் இருக்கிறார் மன்னிப் பதற்கு! உன்னை மன்னிக்காதிருக்க நான் யார்? வா, அவரைத் துதிப் போம்.''

இருவரும் கீழே மண்டியிட்டு உட்கார்ந்தார்கள். பிரார்த்தனை செய்து, மன அமைதி பெற்ற இரு வரும் கைகோத்து உட்கார்ந்து கொண்டார்கள்.

''கெர்ட்ரூட், என் பிள்ளையைப் பற்றி ஏதாவது கேள்விப் பட்டாயா?''

''ஜோஹான்னிஸ்பர்க்கில் ஏதோ ஒரு பெரிய இடத்தில் வேலை செய்துகொண்டு ஸோபியா டவுனில் அவன் வசித்து வந்தான். ஆனால் அது எந்த இடம் என்பது எனக்குத் தெரியாது. நம் சின்ன

அண்ணு ஜானின் மகனும் உங்கள் மகனும் இணைபிரியாத நண்பர்கள். ஆகவே, ஜானின் மகனுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். இதோ குழந்தையும் வந்து விட்டான், அண்ணு!''

குமாலாவின் சின்னஞ்சிறு மருமகனை உள்ளே அழைத்து வந்தாள் ஒரு சிறுமி. அவனுடைய உடையெல்லாம் ஒரே அழுக்கு. விரலைச் சுவைத்துக்கொண்டே விரிந்த கண்களால் மாமனைப் பார்த்தான் மருமகன். குமாலா அவனை அலாக்காகத் தூக்கி, மூக்கைத் துடைத்துவிட்டு, முத்தமிட்டார்; கொஞ்சினுர்.

வீட்டிலிருந்து வெளிவந்த அவரை அண்டை அயலார் வெறித்து வெறித்துப் பார்த்தார்கள். பாதிரியார் அல்லவா வந்திருக்கிருர்! காத்துக்கொண்டிருந்த நண்பரிடம் நடந்ததையெல்லாம் சொன்னுர் குமாலா. சாமான்களை லாரியில் ஏற்றி, அங்கிருந்து புறப்பட்டதுந்தான் நிம்மதியான ஆனந்தம் மீண்டது அவருக்கு.

அடுத்த நாள் இம்ஸிமாங்குடன் குமாலா புறப்பட்டார்.

''இதோ இதுதான் உங்கள் தம்பியின் கடை. பலகையில் அவருடைய பெயர் பொறித்திருக்கிறது, பாருங்கள்.''

''ஆமாம், என் தம்பியின் கடைதான் இது.''

அவருடைய சகோதரர் ஜான் உள்ளே ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

''வணக்கம், தம்பி!''

''வணக்கம், ஐயா!''

''என் சொந்தத் தம்பியே! என் தாய்க்குப் பிறந்த மகனே! வணக்கம்!''

ஜான் குமாலா அவரை உன்னிப்பாகப் பார்த்தார்.

''என் உடன் பிறந்தவரா? ஆஹா! ஏன் அண்ணு, ஜோஹான்னிஸ்பர்க்குக்கு எப்போது வந்தீர்கள்? எதற்காக வந்தீர்கள்? சொல்லுங்கள்.''

''ஏன் தம்பி, உன் மனைவி எஸ்தர் சௌக்கியமாக இருக்கிருளா?''

''அவள் என்னை விட்டுப் போய்ப் பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன, அண்ணு.''

''மறுமணம் செய்துகொண்டாயா, என்ன?''

''திருமணம் என்று நம் மதம் கூறும் முறைப்படி இல்லைதான். இருந்தபோதிலும் என்னுடன் இருப்பவள் தங்கமானவள்.''

''இதுபற்றி ஒன்றுமே எழுதவில்லையே நீ?''

''நான் எப்படி எழுத முடியும்? இண்டாட்ஷேனியிலுள்ள உங்களுக்கெல்லாம் இந்த ஜோஹான்னிஸ்பர்க் வாழ்க்கை முறையே புரியாதே!''

அண்ணனை உற்று நோக்கிவிட்டு மேலும் சொன்னுர்: ''ஏதோ புதிதான ஒன்று இங்கே உருவாகி வளர்ந்துகொண்டிருக்கிறது.''

கீழே உட்காரவில்லை அவர். மேலும் பேசிய அவருடைய குரலில் புதுமை புலப்பட்டது.

''இண்டாட்ஷேனியில் உங்களைப் போலவே நானும் ஒரு சாதாரண மனிதன்தான், அண்ணு! அறிவிலியான ஒரு தலைவனுக்கு அங்கே நான் கட்டுப்பட்டவன். இங்கே ஜோஹான்னிஸ்பர்க்கிலோ சற்றுச் செல்வாக்குடைய முக்கியமான மனிதன் நான். இங்கே எனக்கென்று சொந்த வியாபாரம் ஒன்றும் இருக்கிறது. நல்லபடியாகத் தொழில் நடந்தால், வாரத்துக்குப் பத்து அல்லது பன்னிரண்டு பவுனுக்குக் குறையாமல் நான் சம்பாதிக்க முடிகிறது.''

அசைந்தாடியபடி தொடர்ந்து பேசினுர் ஜான். அவருடைய குரல் ஓங்கியது.

''இந்த ஜோஹான்னிஸ்பர்க் நகரிலே எங்கே பார்த்தாலும் சுரங்கங்கள். வானளாவிய இந்தக் கட்டிடங்கள், வியப்பூட்டும் இந்த நகர மண்டபம், எழில் தவழும் வீடுகள் நிறைந்த இந்த அழகுப் பெட்டகமான பார்க் டவுன் - இவை அனைத்துமே சுரங்கத்திலிருந்து தோண்டியெடுத்த தங்கத்தின் பயன்தான்.''

ஜானின் குரல் மாறியது. காளையின் எக்காளம் அல்லது சிங்கத்

தின் கர்ஜனைக்கு அதை ஒப்பிட லாம் இப்போது.

''நம்மில் பலரை இங்கே கொண்டுவந்து, கொட்டடிகளில் அடைத்துப் போட்டு, மூன்று ஷில்லிங் தினக் கூலிக்கு மண்ணைத் தோண்டச் சொல்லுகிறார்கள் வெள்ளையர்கள். அவர்கள் சொல்வது என்ன தெரியுமா? 'சுரங்கங்களே தென்னாப்பிரிக்கா வின் 'செல்வ ஆதாரம். எனவே, இன்னும் தங்கம் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம்' என்கிறார் கள்!''

உறுமலும் உரமும் ஏறிய அவ ருடைய குரல், இடிபோல முழங் கிற்று.

''ஆனால், உண்மையில் சுரங்கங் களா தென்னாப்பிரிக்காவின் செல்வ ஆதாரம்? இல்லவேயில்லை. நம் முதுகுகள், நம் வேர்வை, நம் உழைப்பு இவற்றின் மீதுதான் அது எழும்பியிருக்கிறது. தொழிற்சாலை யாகட்டும், தியேட்டராகட்டும், அழகுமிக்க இந்த வீடுகளாகட்டும், ஒவ்வொன்றும் நாம் கட்டிய வையே.''

சட்டென்று நிறுத்தி மௌனம் சாதித்தார் ஜான். ஸ்டீபனும் இம்ஸிமாங்கும் ஒன்றுமே பேச வில்லை.

ஜான் அவரை நிமிர்ந்து நோக்கி விட்டு மறுபடியும் முழக்கினார்: ''இதெல்லாம் தப்பு என்கிறார் நம் பிஷப். ஆனால், அவர் வசிப்பது பெரிய மாளிகையில். உங்களை நிகர்த்த வெள்ளைப் பாதிரிகளுக்கு உங்களைப்போல் நான்கு, ஐந்து, ஆறு மடங்குகூடச் சம்பளம் கிடைக்கிறது; தெரியுமா, அண்ணா, உங்களுக்கு?''

''நீ சொல்வதில் பெரும்பகுதி உண்மைதான், தம்பி. அது போகட்டும், உன்னை ஒரு செய்தி கேட்க வேண்டும். என் மகன் எங்கே இருக்கிறான்?''

ஜானின் கண்கள் அவருடைய சங்கடத்தைப் பிரதிபலித்தன.

''என் மகனுடன் உங்கள் மகன் சிநேகமாக இருந்தது தெரிந்துதான் இப்படிக் கேட்கிறீர்கள் போல் இருக்கிறது.''

''ஆம், அப்படித்தான் என் காதில் விழுநதது.''

''உங்களுக்குத்தான் தெரியுமே, இளைஞர்களின் சமாசாரம்! என் இரண்டாவது மனைவியுடன் என் மகனால் ஒத்துப் போக இயலவில்லை. எப்படியாவது சரி செய்துவிடப் பல முறை முயன்றேன்; பலிக்க வில்லை. ஆகவே, அவனாகவே 'போய்விடுகிறேன்' என்றான். நான் தடுக்கவில்லை. உங்கள் மக னும் அவனுடனேயே சென்று விட்டான்.''

''எங்கே என்று தெரியுமா, தம்பி?''

''தெரியாது.''

இம்ஸிமாங்கின் துணையுடன் குமாலா தம் மகனைத் தேடிப் பல இடங்களுக்குச் சென்றார். ஒவ்வோர் இடத்திலும் அவன் போய்விட்டான் என்ற செய்தியே கிடைத்தது. அவனுடைய திருட் டுப் புரட்டுகளும் சீர்திருத்தப் பள்ளியில் அவன் சிறைப்பட்டு விடுபட்டதும் பற்றிய தகவல்கள் கிடைத்தன. கடைசியில் அந்தச் சீர்திருத்தப் பள்ளியின் தலைவரான வெள்ளைக்கார இளைஞரும் இவர் தேடுவதற்கு உதவி புரியத் தம் காருடன் துணை வந்தார்.

மூவரும் புலன் விசாரித்துக் கொண்டு காரில் சென்றார்கள். கார் விரைவில் பிம்வில் கிரா மத்தை அடைந்தது.

ஒரு குடிசை வீட்டின் வாசலில் அவர்கள் வந்து நின்றார்கள். வெள்ளைக்காரர் முன்னே செல்ல, பாதிரிமார் இருவரும் பின் தொடர்ந்தார்கள். குமரியா, சிறுமியா என்று ஐயுறத்தக்க ஒரு பெண் அவர்களை வரவேற்றாள்.

''நாங்கள் அப்ஸலோமைப் பற்றி விசாரித்துப் போக வந்திருக் கிறோம். இந்தச் சாமியார்தான் அவன் தந்தை.''

''சனிக்கிழமை யன்று அவர் ஸ்ப்ரிங்ஸுக்குச் சென்றார். இன் னும் அங்கேயிருந்து திரும்பி வரவில்லை.''

இதைக் கேட்டதும் அந்த வெள்ளைக்காரரின் முகம் சிணுங் கியது.

''சனிக்கிழமையன்று சென்றான்? இன்று செவ்வாய்க்கிழமை ஆகி விட்டதே! இதுவரைக்கும் அவனிட மிருந்து தகவலே இல்லையா?''

''ஒன்றும் கிடையாது.''

''எப்போது திரும்பி வருவான் அவன்?''

''எனக்குத் தெரியாது.''

காத்திருப்பதும் பிரிந்து போவதும் பழகிப்போன ஒருத்தி கூறுவது போல, உணர்ச்சியற்று நம்பிக்கை யற்று வெளிவந்தது அவளுடைய பதில்.

''நீ என்ன செய்யப் போகிறாய் இப்போது?''

''எனக்குத் தெரியவில்லை.''

''இன்னொருவனைப் பிடித்துக் கொள்வாய்'' என்றார் இம்ஸிமாங்கு.

தொடர்ந்து, ''இங்கே நீங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை. வாருங்கள், போவோம்'' என்று மற்றவரை அழைத்தார்.

அவரும் வெள்ளைக்காரரும் காரில் ஏறி உட்கார்ந்த பிறகுங் கூடத் தயங்கியபடியே நின்றார் குமாலா.

''உங்களுக்குப் புரியவில்லை. பிறக்கப் போவது என்னுடைய பேரக்குழந்தை; தெரியுமா?''

ஆத்திர வசப்பட்டவராகப் பதில் அளித்தார் இம்ஸிமாங்கு: ''அது உங்கள் பேரக் குழந்தை தான் என்பது என்ன நிச்சயம்? தவிர, உங்கள் மகன் இவளோடு நிறுத்திக் கொண்டான் என்பது தான் என்ன உறுதி? இதுபோல உங்களுக்கு இன்னும் எத்தனை பேரக் குழந்தைகள் இருக்கின்றனவோ? அல்லும் பகலும் அவற்றைத் தேடிக்கொண்டு நாம் அலைய முடியுமா? சொல்லுங்கள்.''

அடியுண்டவர் போலப் புழுதியில் நின்றார் குமாலா. சற்றுக் கழித்து, மேலே ஒன்றும் பேசாமல் காரில் அமர்ந்தார்.

நகரை அடைந்து மூவரும் பிரிந்தபோது, குமாலாவைப் பார்த்து ஆங்கிலத்தில் கூறினார் வெள்ளையர்: ''நாம் அடியோடு நம்பிக்கை இழந்துவிடத் தேவையில்லை. ஒரொரு சமயம், சில பையன்கள் கைதாவதும் காயமடைந்து ஆஸ்பத்திரிக்குச் செல்வதும் உண்டு. நமக்கோ அதெல்லாம் தெரியாமலே இருக்கும். நம்பிக்கையைத் தளர விடாதீர்கள், பாதிரியாரே! தேடும் முயற்சியை நான் விட்டுவிட மாட்டேன்.''

மிஷன் விடுதியில், இன்பமயமான மாலை வேளை. சிவந்த கன்னங்களையுடைய பூஜ்யர் வின்ஸெண்டும் குமாலாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். இண்டாட்ஷேனியையும் அதன் சுற்றுப்புறத்தையும் பற்றியே பேசினார் குமாலா. அந்த வெள்ளைப் பாதிரியோ தம் நாடான இங்கிலாந்தின் எழிலை எடுத்துச் சொன்னார். இந்த வேளையில் நகரிலிருந்து ஓடோடி வந்தார் மற்றொரு வெள்ளைப் பாதிரி. அவருடைய கையில் அன்றைய 'ஈவினிங் ஸ்டார்' பத்திரிகை இருந்தது. 'பார்க் வோல்டில் கொலை; பிரபல எஞ்சினீர் சுடப்பட்டார் - கொலைகாரர்கள் கறுப்பர்' என்று கொட்டை எழுத்துக்களில் அதில் போட்டிருந்த செய்தியைப் படித்தார். அதோடு நிற்கவில்லை. விமரிசனமும் செய்தார்.

''இந்த ஆர்த்தர் ஜார்விஸின் மரணம், தென்னாப்பிரிக்காவுக்கு மிகவும் பெரிய நஷ்டம். தைரியம் மிக்க இளைஞர் இவர். நியாயத்துக்காகப் போராடியவர். நம் இளைஞர்களுள் மிகச் சிறந்த ஒருவர்.''

''ஜார்விஸா? என்ன பயங்கரமான செய்தி இது!'' என்றார் இம்ஸிமாங்கு.

செய்தித் தாளை வாங்கி வாசித்ததும் குமாலாவிடம் கூறினார் வின்ஸெண்ட்: ''ஒருவேளை உங்களுக்கும் அவரைத் தெரிந்திருக்கலாம். காரிஸ்ப்ரூக்கிலுள்ள ஹைப்ளேஸைச் சேர்ந்த ஜேம்ஸ் ஜார்விஸின் ஒரே குமாரர்தான் இப்போது சுட்டுக் கொல்லப்பட்டவர்.''

''தெரியும், அவருடைய தந்தையை நன்றாகத் தெரியும் எனக்கு. பல முறை பார்த்திருக்கிறேன். ஆனால் பேசிப் பழகிய

தில்லை. இண்டாட்ஷேனிக்கு மேலே குன்றுகளின்மீது இருக்கிறது அவருடைய பண்ணை. சில சமயம் எங்கள் மாதா கோயில் வழியாக அவர் சவாரி செய்வதுண்டு. ஆம், இப்போது நினைவுக்கு வருகிறது. ஒரு கெட்டிக்காரச் சிறுவனும் குதிரை மீதேறி, மாதா கோயிலைக் கடந்து போவதுண்டு. படுசுட்டிப் பையன் அவன் என்று ஞாபகம்; ஆனால் அவ்வளவு தெளிவாக நினைவில்லை.''

ஆர்த்தர் ஜார்விஸுக்கு மனைவி தவிர ஒன்பது வயசான ஒரு மகனும் ஓர் ஐந்து வயசு மகளும் உண்டு. நேட்டாலில் ஹைப்ளேஸ் பண்ணையின் உரிமையாளரான ஜேம்ஸ் ஜார்விஸின் ஒரே குமாரர் அவர்; நகரிலுள்ள எஞ்சினீரிங் தொழிலகமான 'டேவிஸ் வான்டர்வால்ட் ஜார்விஸ்' என்பதில் ஒரு கூட்டாளி. சமூகப் பிரச்னைகளில் அவருக்கு இருந்த அக்கறை அனைவரும் அறிந்ததே. வெள்ளையரல்லாதாரின் நல்வாழ்வுக்கு அவர் செய்த முயற்சிகளும் எல்லாருக்கும் தெரியும்.

பேச்சு அறவே நின்று, மயான அமைதி குடிகொண்டது அங்கே. விதியின் விளையாடல்களை ஏந்தி வரும் இந்தச் செய்தித்தாள்களைப் புரட்டினால், அப்பப்பா, ஒவ்வொருவருடைய இதயத்திலும் எவ்வளவு துயரமும் பீதியும் வெறுப்பும் பீரிட்டெழுகின்றன! சிதறிப் போன பழங்குடி மக்களையும் மங்கி மறைந்துவிட்ட சட்டதிட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் எண்ணினால் அழுகையே வருகிறது. ஆம், மரித்துவிட்ட அந்த மனிதனையும் நினைந்து உரக்க அழத்தான் வேண்டும். அதோடு அவனை இழந்து தவிக்கும் அவனுடைய மனைவி மக்களுக்காகவும் கதறி அழு! அழு, தாயகமே! அழு! இந்த மாதிரி நிகழ்ச்சிகள் இன்னும் முற்றுப்பெற்று விடவில்லை. அழகுப் பேழையான இந்த உலகின் மீது, கதிர்களைக் கொட்டுகிறுன் கதிரவன். இதையெல்லாம் அநுபவிக்கத் தெரிவதில்லை மனிதனுககு. அச்சத்தை மட்டுமே அவன் அறிவான்!

மகனைக் குமாலா மீண்டும் பல நாள் தேடினார். போலீசுக்கு ஒளிந்து திரிகிறான் அவன் என்ற தகவல் கிடைத்ததே தவிர, அவன் தென்படவேயில்லை.

அப்புறம் ஒரு நாள் தெருவில் இம்ஸிமாங்கும், அந்தச் சீர்திருத்தப்பள்ளி வெள்ளை இளைஞரும் தம் குடியிருப்பை நோக்கி நடந்து வருவதைப் பார்த்தார் குமாலா.

''வணக்கம், சாமி. நாம் தனியாகப் பேச இங்கே இடம் இருக்கிறதா?''

''என்னுடைய அறைக்கு வாருங்கள்'' என்றார் குமாலா.

மூவரும் அந்த அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டார்கள்.

''நீங்கள் எதைக் கேட்க அஞ்சுகிறீர்களோ, அதைக் கேட்டேன். உண்மைதான் அது.''

கூனிக் குறுகி நின்றார் குமாலா. அவர்களை ஏறிட்டுப் பார்க்கக்கூட அவரால் இயலவில்லை. நாற்காலியில் அமர்ந்து தரையை நோக்கினார்.

''ஜார்விஸின் வீட்டில் நுழைந்த மூவரில், சுட்டவன் உங்கள் மகனே. மற்ற இருவரில் உங்கள் தம்பியின் மகனும் ஒருவன்.'' தம்மால் முடிந்த அளவு சரளமாக இதைக் கூறினார் இம்ஸிமாங்கு.

குமாலா மறுபடியும் தலையை ஆட்டினார். ஒன்று, இரண்டு, மூன்றல்ல; நான்கு தடவை!

''சிறைக்கு வந்து பார்க்க விரும்புகிறீர்களா, சாமி? அதற்கு ஆவன செய்துவிட்டேன் நான்'' என்றார் ஆங்கிலேயர்.

குமாலா தலையை ஆட்டினார்.

கடைசியாக, அதிகாரிகளின் அநுமதி பெற்றுச் சிறையிலே மகன் அப்ஸலோமைக் குமாலா சந்தித்தார்.

''மகனே! மகனே!''

''அப்பா!''

''கடைசியில் உன்னைக் கண்டு பிடித்துவிட்டேனடா.''

''ஆம், அப்பா!''

''ஆனால் காலம் கடந்துவிட்ட நிலையில்.''

பையன் பதில் அளிக்கவில்லை.

''உன்னை நான் தேடாத இடம் இல்லை.''

அதற்கும் பதில் இல்லை.

''மகனே, ஏனடா இந்தக் கொடுஞ் செயலைப் புரிந்தாய்?''

பையனின் கண்களில் கண்ணீர் துளிக்கிறது. பதில் கூறுமல் தலையை இங்குமங்கும் ஆட்டுகிருன்.

''நீ ஏன் துப்பாக்கி வைத்திருந்தாய்?''

''பாதுகாப்புக்காகவே வைத்திருந்தேன். இந்த ஜொஹான்னிஸ்பர்க் ஓர் ஆபத்தான இடம். எப்போது நம்மைத் தாக்குவார்கள் என்பது ஒருவருக்கும் தெரியாது.''

''போலீசாரிடம் நீ என்ன சொன்னுய்?''

''அந்த வெள்ளைக்காரரைக் கண்டதும் பயந்துவிட்டேன்; அதனுல்தான் சுட்டேன்; அவரைக் கொல்ல வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. இதையே கூறினேன்!''

''உன்னுடைய தம்பி, அந்த மற்றவன் - அவர்களைப்பற்றியும் சொன்னுயா?''

''ஆம், சொன்னேன். அவர்கள் என்னுடன் வந்தது உண்மை; ஆனுல் நான்தான் வெள்ளைக்காரரைச் சுட்டேன்!''

''திருடுவதற்காகவா அங்கே போனுய்?''

பதில் இல்லை.

''எங்களுக்கு ஏதுமே எழுதவில்லை. எந்தச் செய்தியும் அனுப்பவும் இல்லை. நீ கெட்ட சகாக்களுடன் சேர்ந்துகொண்டாய்; திருடினுய்; கன்னம் வைத்தாய். மேலும் - ஆம், இவற்றையெல்லாம் செய்யத்தான் செய்தாய்; ஏன் செய்தாய் என்பதையாவது சொல்லேன்!''

''சைத்தான்தான் காரணம்!''

''ஐயோ, மகனே! அந்தச் சைத்தானுடன் போராடியதாகச் சொல்லக் கூடாதா? அல்லும் பகலும் வேர்வை ஆருகப் பெருக, கடைசி மூச்சுள்ள வரையில் அதனுடன் கட்டிப் புரண்டு போராடியதாகக் கூறலாகாதா? செய்த பாவங்களுக்காக அழுது விட்டு, அவற்றுக்கு ஈடு செய்ய உறுதி கொண்டு எழுந்து நின்று, மீண்டும் இடறி விழுந்ததாகக் கூறக்கூடாதா? ஏன் நீ அவனுடன் போராடவில்லை?''

கிழவர், பையன் இருவருமே சளைத்துக் களைத்து விட்டார்கள். பேட்டி நேரமும் அநேகமாக முடிந்துவிட்டது.

''அந்தப் பெண்ணை மணந்து கொள்ள விரும்புகிருயா, மகனே?''

''விருப்பந்தான், அப்பா!''

''அப்படியானுல், என்னுல் முடிந்ததைச் செய்கிறேன். நாம் போக வேண்டிய தருணம் வந்து விட்டது.''

* * *

இகோபோவிலிருந்து கிளம்பி, மலைகளினூடே செல்கிறது அழகியதொரு சாலை. அது ஏழு மைல் தூரம் மேல்நோக்கிச் சென்று காரிஸ்ப்ரூக்கை அடைகிறது, பனிப்படலம் இல்லாதிருந்தால், அங்கிருந்து ஆப்பிரிக்காவின் வனப்பு மிக்க பள்ளத்தாக்குகளில் ஒன்றைப் பார்க்கலாம். ட்ரான்ஸ்பர்க்கிலிருந்து கடலை நோக்கிச் செல்லும் உம்ஜிம்குலு நதியின் பள்ளத்தாக்குத்தான் கீழே பரந்து கிடப்பது. ஆற்றுக்கு அப்பாலும் இப்பாலும் அணி அணியாகப் பெருமலைகள். அவற்றுக்கும் அப்பாலே, இங்கெலி, கிழக்குக் கிரிகாலாந்து மலைத்தொடர்கள்.

இரு மலைகளினிடையே அழகு தவழும் சிறியதொரு பள்ளத்தாக்கு; அதில் ஒரு வீடு. அதைச் சுற்றிலும் சம தரையான வயல்கள். இந்தப் பக்கத்திலுள்ள அருமையான பண்ணைகளில் ஒன்று அது. ஹைப்ளேஸ் என்பது அதன் பெயர். ஜேம்ஸ் ஜார்விஸ் என்பவருடைய பண்ணைதான் அது. அந்த வீட்டில்தான் அவர் வசிக்கிருர். இண்டாட்ஷேனிக்கும், உம்ஜிம்குலு பள்ளத்தாக்குக்கும் மேலே வெகு உயரத்தில் அமர்ந்திருக்கிறது அந்தப் பண்ணை.

உழவு நடந்துகொண்டிருந்தது. இரும்பு போன்ற கடினமான அந்த நிலத்தில் சில இடங்களில் கலப்பை புதையவே இல்லை. ஜோடியில் சென்று நின்றது ஏர். அதில்

பூட்டியிருந்த காளைகள் வேர்த்து விறுவிறுத்து நின்றன.

''ஊஹூம், உபயோகம் இல்லை, எஜமான்.''

''விட்டுவிடாதே, தாமஸ்! தொடர்ந்து முயற்சி செய்! நான் உச்சிக்குச் சென்று, நிலவரம் எப்படியென்று பார்த்து வருகிறேன்.''

ஏதோ சிந்தித்துக்கொண்டே உச்சிப் பகுதிக்கு ஏறினர் ஜார்விஸ். உயர வந்தவுடன், கல் ஒன்றின் மீது உட்கார்ந்து, தொப்பியை அகற்றி, தென்றலின் குளுமையை அநுபவிக்கத் தொடங்கினர். அலுப்புச் சலிப்பே இல்லாமல் பார்த்து ஆனந்திக்கக்கூடிய பெரும் பள்ளத்தாக்கு இந்த உம்ஜிம்குலு. தம் தந்தையிடமிருந்து தமக்குக் கிடைத்த அந்தப் பசிய வளமிக்க குன்றுகளையும் கீழே தாம் விவசாயம் செய்து வசித்துவரும் செழிப்பான பள்ளத்தாக்கையும், அங்கிருந்து அவர் பார்க்க முடிந்தது. தம்முடைய ஒரே மகன் தமக்குப்பின் அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அவருடைய அவா. ஆனல், அந்த இளைஞனுக்கோ வேறு எண்ணங்கள். யந்திர சாஸ்திரம் கற்றுக் கொண்டான் - நல்லது, அவனுக்கு அதிருஷ்டம் கிட்டட்டும்! ஓர் அழகிய பெண்ணை மணந்துகொண்டு, தன்னுடைய தாய்தந்தையருக்கு அருமையான இரண்டு பேரக் குழந்தைகளையும் அளித்திருக்கிறன். ஹைப்ளேஸில் வாழ்க்கை நடத்தப் போவதில்லை என்று அவன் தீர்மானித்தது என்னவோ அவருக்குப் பேரிடிதான். இருந்தும், அவனுடைய வாழ்க்கை அவனுடையதே அல்லவா? வேறு யாருக்கு அதில் குறுக்கிட உரிமை உண்டு?

கீழே பள்ளத்தாக்கில் ஒரு மோட்டார் வண்டி அவருடைய வீட்டை நோக்கிப் போயிற்று. இகோபோவைச் சேர்ந்த போலீஸ் கார் அது என்பதை அவர் அடையாளம் கண்டுகொண்டார். ரோந்து சுற்றும் பின்னென்டிக் தான் அதில் இருக்கக்கூடும்.

காரைச் சந்திப்பதற்காக, அவருடைய மனைவி வெளியே வந்தாள். இரண்டு போலீஸ்காரர்கள் காரை விட்டு இறங்கினர்கள். அவர்களில் ஒருவர் காப்டன் வான் ஜார்ஸ்வெல்டு போல் தென்பட்டார். ஜார்விஸைச் சந்திப்பதற்காகவே அவர்கள் வந்திருப்பது போல் தோன்றியது; ஏனென்றல், அவருடைய மனைவி பீடபூமியைச் சுட்டிக் காட்டினள். அவர் கீழே இறங்க முற்பட்டார். பாதி தூரத்தில் உள்ள இன்னெரு சிறிய மேட்டு நிலத்தை அடைந்த அவர், வான் ஜார்ஸ்வெல்டும், பின்னென்டிக்கும் தம்மை நோக்கி ஏறி வருவதைக் கண்டார். கரடு முரடான பாதை வழியே காரை ஓட்டிக்கொண்டு வந்து, உழவு நடக்கும் நிலத்தருகே நிறுத்தியிருப்பதையும் பார்த்தார். அவர்களும் அவரைக் கண்டுகொண்டார்கள். பின்னென்டிக் பின் தங்கி விட்டார். காப்டன் மட்டுமே அவரைச் சந்திக்க மேலேறி வந்தார்.

''என்ன, காப்டன்! ஏது இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள்?''

இருவரும் கைகுலுக்கினர்கள். காப்டன் அவரைப் பார்த்தார்.

''மிஸ்டர் ஜார்விஸ்!''

''என்ன?''

''உங்களுக்குத் துக்கச் செய்தியொன்றைக் கொண்டு வந்திருக்கிறேன்.''

''துக்கச் செய்தியா?''

ஜார்விஸ் கீழே அமர்ந்தார், அவர் நெஞ்சு படபடத்தது.

''என் மகனைப்பற்றியோ?''

''ஆமாம், மிஸ்டர் ஜார்விஸ்!''

''அவன் இறந்துவிட்டான?''

''ஆம், மிஸ்டர் ஜார்விஸ்!''

காப்டன் சற்று நிறுத்திப் பிறகு சொன்னர்: ''இன்று பிற்பகல் 1-30 மணிக்கு ஜோஹான்னிஸ்பர்க்கில் அவர் சுடப்பட்டு இறந்தார்!''

ஜார்விஸ் எழுந்தார். அவருடைய உதடுகள் துடித்தன.

''சுடப்பட்டு இறந்தான? யாரால்?''

''கறுப்புக் களவாணி ஒருவனல் சுடப்பட்டார் என்று சந்தேகிக்கிறேம்.''

பெருந்துக்கத்துடன் மனைவியை அழைத்துககொண்டு ஊர் போய்ச் சேர்ந்தார் ஜார்விஸ். அங்கே தம் மகனுடைய நாற்காலியில் அமர்ந்தார். அவருடைய மனைவியும் மருமகள் மேரியும் ஹாரிஸன் என்ற நண்பருடைய வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். புத்தகங்கள்! எங்கே நோக்கினாலும் புத்தகங்கள்தான்! மேஜையின் மீது காகிதங்களும் கடிதங்களும் புத்தகங்களும் கிடந்தன.

புத்தகங்களுக்கு இடையே சுவர்களில் நான்கு படங்கள் தொங்கின; ஏசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும் காட்சி, ஆப்ரகாம் லிங்கனின் சித்திரம், கூம்பிய கூரையுடைய வெர்கெலகனின் வெள்ளை வீடு, பனி போர்த்த புல்வெளியினிடையே ஓடும் ஆற்றின் இரு மருங்கிலும் வரியிடும் நாணற் புதரின் வண்ண ஓவியம் - இந்த நான்குந்தான்.

பல காகிதங்கள் மகனின் கையெழுத்தில் இருந்தன. ஏதோ ஒரு கையெழுத்துப் பிரதியைச் சேர்ந்தவையாகத்தான் அவை இருக்கவேண்டும். முதல் வரி ஒரு வாக்கியத்தின் கடைசிப் பகுதியாகவும், கடைசி வரி முற்றுப் பெருமலும் இருந்தன. மீதிப் பகுதியையும் தேடினார் அவர். அது கிடைக்காது போகவே, தம் கையிலுள்ளவற்றையே ஜார்விஸ் படிக்கலானார்:

''ஒதுக்கல் கொள்கை மூலம் பழங்குடிச் சமுதாயத்தை நிலை நிறுத்த முடியுமென்று நாம் நம்பினோம். அது ஏற்கத் தக்கதுதான். ஆனால் அதை நாம் முழுமையாகவும் அகத் தூய்மையுடனும் ஒரு போதும் பின்பற்றவில்லை. ஜனத்தொகையில் ஐந்தில் நான்கு பங்கு உள்ள மக்களுக்கு, நாட்டிலிருக்கும் நிலத்தில் பத்தில் ஒரு பகுதியையே ஒதுக்கினோம். இதன் மூலம் பட்டணங்களை நோக்கிப் பாட்டாளிகள் வருவதைத் தவிர்க்க முடியாததாக்கிவிட்டோம். இதை நாம் உணர்ந்தே செய்ததாகவும் சிலர் கூறுகிறார்கள். எப்படியோ, இதன் விளைவாக நாம் பின்னிய சுயநல வலையில் இன்று நாமே சிக்கித் தவிக்கிறோம். இந்தப் பிரச்னையைக் குறித்துப் பேச யாரும் விரும்பவில்லை. இதற்குப் பரிகாரம் காண்பது எளிது என்று தோன்றச் செய்யும் எண்ணமும் யாருக்கும் இல்லை. நம்மைப் பீடித்திருக்கும் அச்சங்களை லேசாக மதிப்பிடும் விருப்பமும் கிடையாது. எவருக்கு நாம் பயந்திருக்கிறோமோ இல்லையோ, கிறிஸ்துவர்கள் என்ற முறையில், இந்த நன்னெறிப் பிரச்னைகளை நாம் ஒரு நாளும் புறக்கணிக்க முடியாது. இதுவே தருணம்..''

இந்த இடத்தில் முடிந்த பக்கத்துக்குப் பிறகு கையெழுத்துப் பிரதியைக் காணவில்லை. அதைப் படிப்பதில் ஒன்றியிருந்த ஜார்விஸ், மேஜையில் கிடந்த தாள்களினிடையே மறுபடியும் தேடிப் பார்த்தார். ஆனால் ஏதும் கிடைக்கவில்லை.

நீதிபதிப் பெருமகனார் மன்றத்தினுள் வரும்போது மக்கள் எழுந்து நிற்கிறார்கள். எப்போதையும் விட இன்று அவர்களிடம் அதிகச் சிரத்தை தென்படுகிறது. தீர்ப்புக் கூறும் நாள் அல்லவா இன்று? நீதிபதி முதலில் அமர்கிறார். பிறகு, அவருடைய இரண்டு உதவியாளர்களும் உட்காருகிறார்கள். அதற்குப் பின்பே மற்றவர் அமர்கிறார்கள். எதிரிகள் மூவரையும் மன்றத்தின் கீழ்த்தளத்திலிருந்து கொண்டு வருகிறார்கள். அதன் பின் நீதிபதி பேசத் தொடங்குகிறார்:

''அப்ஸலோம் குமாலா, 1946-ஆம் வருஷம், அக்டோபர் மாதம் எட்டாம் தேதி பிற்பகல் ஆர்த்தர் ட்ரெவிலியன் ஜார்விஸை, பார்க்வோல்டிலுள்ள அவருடைய இல்லத்தில் கொலை செய்த குற்றத்தை நீ புரிந்ததாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. மாத்யூ குமாலா, ஜோஹான்னிஸ் பபூரி, நீங்கள் இருவரும் குற்றம் புரியவில்லை என்று இந்த மன்றம் தீர்மானித்து, அதற்கிணங்க உங்களை விடுதலை செய்ய உத்தரவிடுகிறது ''

ஆகவே, அவர்கள் இருவரும் அந்த மற்றவனைத் தனியாக விட்

டுப் படிக்கட்டுகள் வழியே கீழ்த் தளத்துக்கு இறங்கிச் செல்கிறார்கள். அவர்கள் போவதை அவன் பார்க்கிறான்; ''இப்போது நான் மாத்திரந்தான்!'' என்று ஒரு வேளை அவன் எண்ணுகிறானோ என்னவோ!

''அப்ஸலோம் குமாலா, காவலுக்குத் திரும்பி அழைத்துச் செல்லப்பட்டு, இறக்கும்வரையில் கழுத்தில் சுருக்கிட்டுத் தூக்கி லிடப்படுமாறு உன்னைத் தண்டிக்கிறேன். உன் ஆன்மாவிடம் கடவுள் கருணை காட்டுவாராக!''

நீதிபதி எழுந்திருக்கிறார். கூடியிருந்தோரும் எழுகிறார்கள். ஆனால் எல்லோருமே மௌனமாக இல்லை. குற்றவாளி தரையில் விழுந்து விம்மி அழுகிறான். ஒரு பெண் கதறுகிறாள். ''ஆண்டவனே, ஆண்டவனே!' என்று அரற்றுகிறார் ஒரு கிழவர். நீதிபதி இன்னும் அந்த இடத்தை விட்டு அகலாமல் இருந்தும், ''அமைதி, அமைதி'' என்று யாரும் கத்தவில்லை, இப்போது. இதயம் வெடித்து விம்முவதை எவரே தடுக்க வல்லார்?

வழக்கப்படி, வெள்ளையர்கள் ஒரு புறமாகவும் கறுப்பர்கள் மற்றொரு புறமாகவும் நீதி மன்றத்தை விட்டு வெளிவருகிறார்கள்.

பயங்கரமான வானளாவிய அந்தச் சுவரில் இருந்த பெருங் கதவு வழியே பூஜ்யர் வின்ஸெண்ட். குமாலா, கெர்ட்ரூட், இம்ஸிமாங்கு, ஓர் இளம் பெண் ஆகிய ஐவரும் மறுபடியும் புகுந்து சென்றார்கள். அப்ஸலோம் அவர்களிடம் அழைத்து வரப்பெற்றான். ஏதோ ஒரு பெரு நம்பிக்கை கண நேரம் அவனுடைய கண்களில் மிளிர்ந்தது. ஆனால், ''திருமணத்தின் பொருட்டு வந்துள்ளோம்'' என்று அவனிடம் அமைதியாகக் குமாலா கூறினார். அவனுடைய உள்ளத்தில் தளிர்த்த நம்பிக்கை, இதைக் கேட்டதும் கருகிவிட்டது.

''மகனே, உன் மனைவியாகப் போகிறவள் இதோ இருக்கிறாள்.''

ஏதோ அந்நியர்கள் போலவே பெண்ணும் பையனும் முகமன் கூறிக்கொண்டார்கள். ஒருவருக்கொருவர் கைகொடுத்துக் கொண்டாலும் உயிருணர்ச்சி இல்லை, அந்தக் கைகளில்; அவற்றைக் குலுக்கவுமில்லை அவர்கள். தொய்வாகவே பிடித்துக்கொண்டார்கள்.

பூஜ்யர் வின்ஸெண்ட் தம்முடைய உடுப்பை அணிந்து கொண்டு அங்கே காத்திருந்தார். தம் கையில் இருந்த புத்தகத்தில் சில பகுதிகளைப் படித்தார் அவர். பிறகு, அந்தப் பெண்ணை மனைவியாக ஏற்கிறானா என்று அந்தப் பையனையும், அவனைக் கணவனாக ஏற்கத் தயாரா என்று அவளையும் கேட்டார். நன்மையோ தீமையோ, செல்வமோ வறுமையோ, சுகமோ சுகவீனமோ எது வந்துற்றாலும் சாவு பிரிக்கும் வரையில் ஒன்றாக இருப்பதாக அவர்கள் பதில் அளித்த பிறகு, அவர்களுக்கு மணம் செய்து வைத்தார். அவர்கள் ஒருவரிடம் ஒருவர் உண்மையாயிருக்க வேண்டும், அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளைக் கடவுளுக்குப் பயந்து வளர்க்கவேண்டும் என்பவை போன்ற சில உபதேச மொழிகளை அவர்களுக்குக் கூறினார். இப்படியாக அவர்களுடைய திருமணம் நிறைவேறியது; புத்தகத்திலும் தங்கள் பெயர்களை அந்த இருவரும் பதித்தார்கள்.

அது முடிந்த பிறகு, அந்த இரண்டு பாதிரிகளும் மணப் பெண்ணும், தந்தையையும் மகனையும் தனியேவிட்டு அப்பால் சென்றார்கள். பிறகு, குமாலா தம் மகனை நோக்கிச் சொன்னார்: ''உனக்கு மணமானதில் எனக்கு மகிழ்ச்சி.''

''எனக்கும் சந்தோஷந்தான், அப்பா.''

''மகனே, உனக்குப் பிறக்கப் போகும் குழந்தையை என்னுடைய மகனே போல் போற்றி வருவேன்.''

''நீங்கள் இண்டாட்ஷேனீக்கு எப்போது திரும்புகிறீர்கள்?''

''நாளைய தினம், மகனே.''

''நான் அவளை ஞாபகத்தில்

வைத்திருக்கிறேன் என்று என் தாயிடம் கூறுவீர்களா?''

''கட்டாயம் கூறுகிறேன்''

''அப்பா!''

''என்ன, மகனே?''

''எனக்குப் பயமாக இருக்கிறது, அப்பா.''

''தைரியத்தைக் கைவிடாதே, மகனே.''

பையன் ஒன்றையும் மறைக்கவில்லை. அவன் முகம் அழுகையால் தோணிக் கிடந்தது. பொருமிப் பொருமிக் கதறினான்.

இடிந்துபோன குமாலா, ''நன்றாக இரு, மகனே!'' என்றார். ஆனால், பையனின் செவியில் அது விழவில்லை.

இருவரும் பிரிந்தார்கள்.

* * *

மாண்பு மிகுந்த உம்ஜிம்குலு பள்ளத்தாக்கில், கிழக்கு காரிகிலாந்து மலைகளுக்குப் பின்னால் பகலவன் மறைந்துகொண்டிருக்கிறான். குமாலாவின் மனைவி அங்கே காத்து நிற்கிறாள்; சாமியாருடைய மூட்டைகளைத் தூக்கி உதவி புரிய நண்பரும் வந்திருக்கிறார். தம் மனைவியினிடம் விரைந்து சென்று, அவளை ஐரோப்பிய பாணியில் தழுவிக் கொள்கிறார் குமாலா. ஊரைச் சேர்ந்துவிட்டதில் உவகையடைகிறார்.

அவளுடைய பார்வையிலேயே அவள் கேட்க விரும்பும் கேள்வி தொனிக்கிறது. அதை உணர்ந்து சொல்கிறார் குமாலா: ''நம் மகன் இறக்கப் போகிறான். ஒருகால் கருணை காட்டப்படலாம். ஆனால் இப்போது அதைப்பற்றி நாம் பேச வேண்டாம்.''

''நீங்கள் சொல்வது புரிகிறது.''

''கெர்ட்ரூடும் வரவில்லை. அவள் புறப்பட எல்லாம் தயாராக இருந்தன. அங்கே நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில்தான் இருந்தோம். ஆனால் காலையில் எழுப்பச் சென்று பார்த்தபோது அவளைக் காணவில்லை. அதைப்பற்றியும் நாம் இப்போது பேச வேண்டாம்.''

அவள் தலையைக் கவிழ்த்துக் கொள்கிறாள்.

''இதோ இந்தச் சிறுவன்தான் கெர்ட்ரூடின் மகன்; இவள்தான் நம்முடைய புதிய மகள்!''

குமாலாவின் மனைவி அந்தச் சிறுவனை வாரியெடுத்து ஐரோப்பிய பாணியில் முத்தமிடுகிறாள். ''நீ என் குழந்தை'' என்று கொஞ்சுகிறாள். பிறகு அவனைக் கீழே இறக்கிவிடுகிறாள். கையில் காகிதப் பையுடன் அடக்கமாக நின்றுகொண்டிருக்கும் அந்தப் பெண்ணிடம் போகிறாள். ஐரோப்பிய முறையிலேயே அவளையும் அணைத்துக்கொண்டு, ''நீ என் மகள்'' என்று கூறுகிறாள். குபீரென்று அழத் தொடங்கி விடுகிறாள் அந்தப் பெண். ''இந்தா, இந்தா, அழாதே! அழக்கூடாது!'' என்று அவளைத் தேற்றிவிட்டு, குமாலாவின் மனைவி தொடர்ந்து சொல்கிறாள்: ''நம் வீடு எளிமையானது; இங்கே அரிய பெரிய பொருள் ஏதும் இல்லை.'' கண்ணீர்த் திரையினூடே ஏறிட்டுப் பார்த்துக்கொண்டே, ''அம்மா, நான் விரும்புவதெல்லாம் அதுதான்'' என்கிறாள் அந்தப் பெண்ணும்.

இண்டாட்ஷேனி புது வாழ்வு பெறுவதற்காக நாள் தவறாமல் தம் ஆலயத்தில் பிரார்த்தனை செய்யத் தொடங்கினார் குமாலா. அதுமட்டும் போதாது என்பதை அவர் அறிவார். விண்ணுலகம் அருள் சுரப்பது தவிர, இந்த மண்ணுலகிலுள்ளோரும் ஒன்றுகூடி யோசித்து ஏதாவது செய்தாக வேண்டும்.

ஒரு நாள் தம் வீட்டில் அமர்ந்து, கோயில் கணக்குகளுடன் மல்லுக் கட்டிக்கொண்டிருந்தார். அப்போது குதிரையொன்றின் குளம்பொலி கேட்டது. கோயிலுக்கு வெளியே அது நின்றதும் அவர் காதில் விழுந்தது. நாற்காலியிலிருந்து எழுந்து, அந்தப் படை பதைக்கும் வெயிலிலே யார் வந்திருக்கக் கூடும் என்று பார்க்க வெளியே வந்தார். கண நேரம் ஆச்சரியத்தினால் மூச்சடைத்து விட்டது அவருக்கு. அங்கே வந்திருந்தவன், சிவப்புக் குதிரைமீது அமர்ந்த ஒரு வெள்ளைக்

காரச் சிறுவன்! ஆம், முன்னம் இங்கே சவாரி செய்து வந்த சிறுவனின் அச்சாகவே இருந்தான இவன்!

சிறுவன் இவரைப் பார்த்துக் குறுஞ்சிரிப்புச் சிரித்துவிட்டுத் தொப்பியைத் தூக்கி வணக்கம் தெரிவித்தான்.

''வணக்கம், சின்ன எஜமானே! சவாரி செய்வதற்கு இந்த வெயில் ஏற்றதல்லவே!''

''எனக்கு இது வெப்பமாகத் தோன்றவில்லை. அது சரி, இது உங்கள் கோயிலா?''

''ஆம், இது நான் பணியாற்றும் கோயிலே.''

''இதுதான் உங்கள் வீடா?''

''ஆம், இதுதான் என் வீடு.''

''நான் இதற்குள் வந்து பார்க்கலாமா? நான் பாதிரியார் வீடு ஒன்றையுமே உள்ளே சென்று பார்த்ததில்லை - சுதேசிப் பாதிரியார் வீட்டைச் சொல்கிறேன்.''

''நீங்கள் தாராளமாக உள்ளே வந்து பார்க்கலாம், சின்ன எஜமானே!''

சிறுவன் குதிரையிலிருந்து சரிந்திறங்கி, அதை அங்கே நட்டிருந்த கம்பமொன்றில் கட்டினுன். குமாலாவின் வீட்டு வாயிற்படிக்கு வெளியே நைந்து கிடந்த மிதியடியில் கால்களைத் தூசுபோகத் தட்டினுன். பிறகு குல்லாயைக் கழற்றிக் கொண்டு அந்த வீட்டுக்குள் நுழைந்தான்.

''இது ஓர் அருமையான வீடு. இவ்வளவு நேர்த்தியாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.''

குமாலா மெதுவாகச் சொன்னுர்: ''எங்கள் மக்களுடைய வீடுகள் எல்லாமே இப்படி இருப்பதில்லை. ஆனுல் பாதிரிகள் தங்கள் வீட்டை நன்ருகத்தான் வைத்திருக்க வேண்டும்.''

''அதோ இருப்பது நீங்கள் செய்த வேலையா?''

''ஆம், சின்ன எஜமானே!''

''கணக்கு மாதிரி தோன்றுகிறதே அது?''

''ஆம், அது கணக்குத்தான் - கோயிலின் கணக்கு.''

''கோயிலுக்குக்கூடக் கணக்கு உண்டா? இவ்வளவு நாள் எனக்குத் தெரியாமலிருந்துவிட்டதே! கடைகள்தான் கணக்கு வைத்துக் கொள்ளும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.''

குமாலா அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''கொஞ்சம் தண்ணீர் குடிக்க விரும்புகிறீர்களா? வெயிலில் வந்திருக்கிறீர்களே?''

''பால் தந்தால் குடிக்கிறேன்.''

''இண்டாட்ஷேனியில் பால் இல்லையே!''

சிறுவனின் முகம் சிவந்துவிட்டது.

''சரி, தண்ணீரே கொடுங்கள், சாமியாரே.''

குமாலா அவனுக்குத் தண்ணீர் கொண்டுவந்து தந்தார்.

''தண்ணீரை அமான்ஸி என்று தானே சொல்ல வேண்டும், சாமி?''

''ஆமாம், சின்ன எஜமான்.''

''குதிரைக்கு இஹாஷி என்று பெயர்.''

''அதுவும் சரிதான்.''

''வீட்டை இகாய என்று அழைக்க வேண்டும்.''

''சரிதான்.''

''பணத்தை இமாலி என்று சொல்லுவார்கள்.''

''அதுவும் சரியே.''

''பையனை உம்பாஞு என்று கூற வேண்டும்.''

''சரிதான்.''

''பசுவை இங்கோமா என்பார்கள்.''

குமாலா உரக்கச் சிரித்தார்.

''நீங்கள் சீக்கிரமே ஜூலூ பேசுவீர்கள்.''

''ஜூலூ மொழி சுலபந்தான். இப்போது நேரம் என்ன ஆகிறது, சாமி?''

''பன்னிரண்டு மணி, சின்ன எஜமானே.''

''அடேயப்பா! நான் போக நேரமாகி விட்டது. நீங்கள் கொடுத்த தண்ணீருக்காக நன்றி.''

சிறுவன் தன்னுடைய குதிரையை நோக்கிப் போனுன். ''நான் மேலே ஏற எனக்கு உதவுங்கள்'' என்று கூவினுன். குமாலா அவனை அப்படியே தூக்கிவிட்டார்.

"உங்களை மறுபடியும் வந்து பார்க்கிறேன். அப்போது ஜூலூ மொழியில் இன்னும் அதிகமாகப் பேசுவேன், பாருங்கள்."

குமாலா சிரித்தார்.

"நீங்கள் எப்போதும் வரலாம்."

"சாமி, இங்கே ஏன் பாலே இல்லை?"

"மக்கள் ஏழைகளாக இருப்பதால்தான். பால் இல்லாமல் ஒரு குழந்தை இப்போது குற்றுயிராகக் கிடக்கிறது."

சிறுவன் மெல்லிய குரலில், "அப்படியா?" என்றான். பிறகு குல்லாயை உயர்த்தி, "சென்று வருகிறேன், சாமியாரே!" என்று வணக்கமாய்க் கூறினான். சாவதானமாகவே அங்கிருந்து புறப்பட்டான்.

அன்றிரவு குளிர்ச்சியாக அமைந்து வெம்மையிலிருந்து விடுதலை தந்தது. குமாலா, அவர் மனைவி, அந்தப் பெண், சிறுவன் ஆகிய நால்வரும் உணவருந்திக் கொண்டிருந்தபோது, வாசலில் வண்டிச் சக்கரங்களின் ஒலியும் யாரோ கதவிடிக்கும் சப்தமும் கேட்டன.

"சாமி, அம்மா!"

"நண்பரே, வாருங்கள்."

"உங்களுக்கு ஒரு செய்தி கொண்டுவந்திருக்கிறேன்."

"எனக்கா?"

"ஆம், ஜார்விஸ் வீட்டு வெள்ளைக்காரச் சிறுவன் இன்று இங்கே வந்திருந்தானா?"

பையன் யார் என்பதை உணர்ந்த குமாலாவிடம் சற்றே கலக்கம் கண்டது.

"ஆம், வந்திருந்தான்."

"அவர்கள் வீட்டில் பாலில்லாது வருந்தும் குழந்தையைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். வாருங்கள், உங்களுக்கு என்ன கொண்டு வந்திருக்கிறேன் என்பதைப் பாருங்கள்!"

அங்கே வாசலில் நின்ற வண்டியில் பளபளப்பான குவளைகளில் பால் இருந்தது!

அந்த மனிதர் அழுத்திச் சொன்னார்: "சிறு குழந்தைகளுக்காகவே இந்தப் பால். நீங்கள்தான் இதை விநியோகிக்க வேண்டுமாம். மறுபடியும் புல் தழைத்து நமக்குப் பால் கிடைக்க வழி ஏற்படும் வரையில் இப்படி அவர்கள் பால் அளிப்பார்கள்."

கடையிலிருந்து நான்கு கடிதங்களைப் பள்ளிக்கூடத்துக்கு ஒரு குழந்தை கொண்டுவந்து கொடுத்தது. தலைமையாசிரியர் அவற்றைச் சாமியாரின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். நான்கு கடிதங்களும் ஜோஹான்னிஸ்பர்க்கிலிருந்துதான் வந்திருந்தன. முதல் கடிதம் தன் மனைவிக்கும், இரண்டாவது தன் தாய் தந்தையருக்கும் அப்ஸலோம் எழுதியவை. அவை இரண்டுமே ப்ரிடோரியா பெரிய சிறைச்சாலையிலிருந்து வந்திருந்தன. மூன்றாவது கடிதம் இம்ஸிமாங்கிடமிருந்து வந்திருந்தது. நான்காவது, வக்கீல் கார்மைக்கேல் எழுதிய கடிதம். இரக்கம் தோய்ந்த வார்த்தைகளில், "கருணை காண்பிக்கப்படவில்லை" என்று அந்த வக்கீல் அதில் தெரிவித்திருந்தார்; ஆகவே, அவருடைய மகன் அந்த மாதம் பதினைந்தாம் தேதி தூக்கிலிடப்படுவான் என்பதையும் எழுதியிருந்தார் வக்கீல். மேற்கொண்டு ஒன்றையும் படிக்காதவராக, பிரமை பிடித்து ஒரு மணி நேரம்-இரண்டு மணிகூட இருக்கலாம் - அப்படியே உட்கார்ந்திருந்தார் குமாலா. "அப்படியானால் அது வந்துவிட்டதா, ஸ்டீபன்?" என்று மனைவி கேட்கும் வரையில் வெளியுலகமே அவருடைய கண்ணில் படவில்லை; அதன் எந்த ஒலியுமே அவருடைய காதில் விழவில்லை.

அவர் தலையை ஆட்டியபோது அவள், "என்னிடம் கொடுங்கள், ஸ்டீபன்" என்று கேட்டாள். நடுங்கும் கைகளால் அவர் அதை அவளிடம் தந்தார். அவளும் அதைப் படித்தாள். பிறகு எல்லாவற்றையுமே இழந்தவள் போல் உறுத்து வெறித்துப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். அவளுடைய வயிற்றில் உதித்த, அவளுடைய கர்ப்பத்

தில் வளர்ந்த குழந்தையல்லவா அவன்?

குமாலா அடுத்தபடி மகனின் கடிதத்தை எடுத்துப் படிக்க லானார். சுருக்கமான கடிதம்:

''என் அன்புள்ள தந்தையே, தாயே!

''என்னைப்போலவே நீங்களும் உடல் நலத்துடன் இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். நான் செய்த காரியத்துக்கு என்னிடம் கருணை காட்டப்பட மாட்டாது என்று இன்று காலையில் சொன்னார்கள். ஆகவே உங்களையோ, இண்டாட்ஷேனியையோ நான் இனிக் காண முடியாது. என்னை உள்ளே வைத்துப் பூட்டியிருக்கிறார்கள்; ஒருவரும் என்னை வந்து பார்ப்பதோ என்னுடன் பேசுவதோ முடியாது.

''என்னைப் பார்ப்பதற்காக ப்ரிடோரியாவைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் வருகிறார்; கறுப்புப் பாதிரியாரான அவர், என்னை மரணத்துக்குத் தயார் செய்து கொண்டிருக்கிறார்; அவரும் என்னிடம் நல்ல முறையிலேயே பேசுகிறார்.

''இண்டாட்ஷேனியில் உள்ள உங்கள் எல்லாரையும் பற்றியே எனக்கு நினைப்பு. மறுபடி நான் அங்கே வரக்கூடுமானால், ஒரு நாளும் அதை விட்டு நகர மாட்டேன்.

உங்கள் மகன்,
அப்ஸலோம்.''

''குறிப்பு: குழந்தை பிறந்துவிட்டதா? அது ஆண்பிள்ளையாக இருந்தால், அதன் பெயர் பீட்டர் என்று இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். தபால் நிலையப் புத்தகத்தில் என் பெயரில் இருக்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு விட்டீர்களா, அப்பா?''

பிறகு இம்ஸிமாங்கின் கடிதத்தைப் பிரித்து, ஜோஹான்னிஸ் பர்க்கில் நடந்தவை எல்லாவற்றையும்பற்றிக் குமாலா படித்தார். பின்பு மேகங்களைப் பார்ப்பதற்காக வெளியே வந்தார். வாரக் கணக்காக வறுத்தெடுத்த வெயிலுக்குப் பின் அந்த மேகங்களைப் பார்ப்பது மனத்தைப் பரபரக்கச் செய்யாதா?

வரப்போவது சாதாரணப் புயல் மழை அல்ல. பள்ளத்தாக்கு முழுவதும் இருண்டு அச்சுறுத்தியது. இப்போது வயல்களின்மீது மேக நிழலோட்டம் நின்றுவிட்டது. வெளிச்சம் இருந்தால் அல்லவா, நிழல் விழ? உம்ஜிம்குலு பள்ளத்தாக்கின் மறுபுறத்திலோ இடையறாமல் இடியோசை; இடையிடையே, தூரத்தேயுள்ள மலைகளில் மின்னலும் வெட்டியது. அனைவரும் ஏங்கிக் காத்துக்கொண்டிருந்தது இதற்காகத்தானே? அப்பாடா, இறுதியில் மழை வந்தேவிட்டது! ஒற்றையடிப் பாதைகளில் ஓடோடிச் சென்றார்கள் பெண்கள். குழந்தைகளோ திடீரென்று சந்தைக் கூச்சலை எழுப்பிக் கொண்டு பள்ளிக்கூடத்திலிருந்து வெளிப்பட்டார்கள். ''சீக்கிரம் போங்கள், சீக்கிரம் போங்கள்! சாலையிலே பராக்குப் பார்த்துக் கொண்டு நின்றுவிடாதீர்கள்'' என்று தலைமையாசிரியரும் உதவியாசிரியர்களும் குழந்தைகளைக் கெடுபிடி செய்துகொண்டிருந்தார்கள்.

இதுபோன்ற புயல் காண வேண்டியதொன்றே! நீர் நிறைந்த கருமுகில் கூட்டமொன்று உம்ஜிம்குலுவின்மீது நகர்ந்து வந்துகொண்டிருந்தது. குமாலா வெகுநேரம் வரையில் அதைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தார். அதற்குள்ளிருந்து இடி வெடித்தது; மின்னல் சீறிப் பாய்ந்தது, பூமியை நோக்கி. இண்டாட்ஷேனீ பள்ளத்தாக்கில் காற்றுக் கிளம்பி விட்டது வயல்களிலும் சாலைகளிலும் புழுதி சுழன்று சுழன்று அடித்தது. இருள் கனத்தது. விரைவிலேயே உம்ஜிம்குலுவுக்கு அப்பாலுள்ள குன்றுகள் மழையில் மறைந்துவிட்டன. வேலியினருகே அமைதியற்று நின்றுகொண்டிருந்த தம் குதிரையை நோக்கி ஜார்விஸ் விரைந்து செல்வதைக் குமாலா கண்டார். பழக்கத்தால் ஏற்பட்ட லாகவத்துடன் அதன் மீதிருந்த சேணத்தையும் கடி

வாளத்தையும் ஜார்விஸ் அகற்றினார். பிறகு, ஏதோ ஒரு வார்த்தையைச் சொல்லி அதை அவிழ்த்து விட்டுவிட்டு, குமாலா நின்ற இடத்தை நோக்கி வேகமாக நடந்து வந்தார். அருகில் வந்ததும் அவரை, ''சாமி!'' என்று விளித்தார்.

''ஐயா!''

''இந்தக் குதிரைச் சாமான்களை உங்கள் வீட்டு முகப்பில் வைத்துவிட்டு, கோயிலில் நான் தங்கலாமா, சாமி?''

''தடையென்ன, ஐயா? அப்படியே செய்யலாம்! நானும் உங்களுடன் ஆலயத்துக்கு வருகிறேன்.''

அப்படியே இருவரும் கோயிலுக்குள் சென்றார்கள். நுழைந்தது தான் தாமதம், இடி அவர்கள் தலைக்கு மேலே ஒலிக்க ஆரம்பித்து விட்டது; வயல்களின் வழியே விரைவாக நெருங்கி வரும் மழையின் ஓசையும் கேட்டது. அதன் பின் கண நேரந்தான் கழிந்திருக்கும்; ஒருவர் பேச்சு இன்னொருவருக்குக் கேட்க இயலாதபடி செவிடுபடும் சப்தத்துடன் இரும்புக் கூரைமேல் மழை அதிர ஆரம்பித்துவிட்டது. கோயிலில் இருந்த ஒரு விளக்கைக் குமாலா ஏற்ற, பெஞ்சியொன்றில் ஜார்விஸ் அமர்ந்து அப்புறம் இப்புறம் அசையாமல் இருந்தார்.

ஆனால், அந்தப் பழைய - துருப்பிடித்த - கூரையி லிருந்த ஓட்டைகள் வழியே மழைத்தாரை ஊடுருவ, அதிக நேரம் ஆகவில்லை. தம்மேல் அது சொட்டாமல் இருப்பதற்காக ஜார்விஸ் நகரவேண்டியதாயிற்று. இருவரும் இரண்டு கோடியிலே பிரிந்து உட்கார்ந்திருந்தார்கள்.

மழை அநேகமாக ஓய்ந்துவிட்ட தருணத்தில் ஜார்விஸ் எழுந்து வந்து குமாலாவுக்கு அருகிலிருந்த இடைவழியில் நின்றார். கிழவரை நேருக்கு நேராகப் பார்க்காமலே அவர் கேட்டார்.

''உங்கள் மகனுக்குக் கருணை கிடைத்ததா?''

நடுங்கும் கரங்களுடன் தம்முடைய தோல் பையிலிருந்து அந்தக் கடிதத்தை எடுத்தார் குமாலா. கடிதத்தை வாங்கி, அங்கிருந்த மங்கலொளி அதன்மீது விழும்படி நீட்டிப் பிடித்துப் படித்தார் ஜார்விஸ். பிறகு திரும்பவும் அதை உறையிலிட்டுக் குமாலாவிடம் திருப்பிக் கொடுத்தார்.

''எனக்கு இந்த விஷயங்கள் புரியவே இல்லை.''

பலிபீடத்தையும் அதன் மீதிருந்த சிலுவையையும் பார்த்துக்கொண்டே சிறிது நேரம் மௌனமாக இருந்தார் ஜார்விஸ்.

''இந்த மாதம் பதினைந்தாம் தேதி வரும்போது நான் ஞாபகம் வைத்திருப்பேன். போய் வருகிறேன், சாமி.''

உறுதிச் சடங்குக்காக எல்லாம் தயாராக இருந்தன. கோயிலுக்கு வரும் பெண்கள் ஒவ்வொருவரும் வெள்ளை ஆடையுடுத்து, கழுத்தில் பச்சைத்துணி கட்டியிருந்தார்கள். ஊரை விட்டு இன்னும் போய்விடாதவர்களும், அந்தக் கோயிலைச் சேர்ந்தவர்களுமான ஆண்கள் அனைவரும் ஞாயிறன்று தொழுகைக்கு வரும்போது வழக்கமாக அணியும் உடைகளை அணிந்திருந்தார்கள்.

தகிக்கும் அந்த வெம்மையில் பள்ளத்தாக்கின்மீது திரும்பவும் மழை மேகங்கள் கவ்விக்கொள்ள ஆரம்பித்திருந்தன. சிவந்த பூமியின் மேலே கறுத்த பெரு மேகங்கள் மிதந்து சென்றன; செந்நிறமான குன்றுகளின் முகட்டுக்கு மெதுவாக ஏறின. வானத்தையும், பிஷப் வரப்போகும் சாலையையும் மக்கள் மாறி மாறிப் பார்த்தார்கள். ஆதவன் மலைவாயில் விழுவதற்குமுன் குன்றுகளிடையே மின்னல் கீற்றுகள் பளிச்சிடப் போகின்றன; இடியோசையும் அவற்றிடையே எதிரொலிக்கப் போகிறது. சந்தேகம் இல்லை!

கவலையுடன் கூடியவராக, ஆகாயத்தையும், பிஷப் வரப்போகும் சாலையையும் திரும்பித் திரும்பிப் பார்த்தார் குமாலா. இந்த நேரத்திலே, பால் வண்டியை ஓட்டிக்கொண்டு சாலையில் வந்துகொண்டிருந்த நண்பரைக் கண்டதும்,

அவருக்கு வியப்பாக இருந்தது. ஏனென்றால், பால் இவ்வளவு சீக்கிரம் ஒருபோதும் வந்ததில்லை.

''நீங்கள் இன்று நேரத்துக்கு முன்பே வந்துவிட்டீர்கள், நண்பரே!''

நண்பர் விசாரத்துடன் மறுமொழி கூறினார்: ''ஆம். இன்று மேற்கொண்டு நாங்கள் வேலை செய்யவில்லை. எஜமானி அம்மாள் இறந்துவிட்டார்கள்.''

''ஐயோ! கேட்க மிக வருத்தமாக இருக்கிறதே!'?

''பெருந் துக்கந்தான், சாமி.''

குமாலா வீட்டுக்குள் சென்று தம் மனைவியிடம், ''எஜமானி அம்மாள் இறந்துவிட்டார்கள்'' என்று சொன்னார். ''ஐயையோ! உண்மையாகவா?'' என்று அவளும் மற்றப் பெண்டிரும் கூவினார்கள். சிலர் அழுதார்கள். இறுதிச் சடங்கு முடிந்ததும் ஹைபளேஸுக்குச் சென்று, இந்தப் பள்ளத்தாக்கிலுள்ளவர்களின் வருத்தத்தை ஜார்விஸுக்குக் தெரிவிக்கவேண்டும் என்று குமாலா எண்ணினார். ஆனால், இழவு நேர்ந்துவிட்ட வீட்டின் காட்சி அவருடைய மனக்கண் முன்னே விரியலாயிற்று. அங்கே வரிசை வரிசையாக வெள்ளையர்களின் கார்கள் வந்து நிற்குமே! கறுப்பு உடை அணிந்து சிறுசிறு கும்பல்களாக விவசாயிகள் கூடி நின்று வருத்தத்துடன் மெதுவாகப் பேசிக்கொண் டிருப்பார்களே! தாம் அங்கே போக முடியாது; அது வழக்கத்துக்கு விரோதம் என்பது அவருக்குத் தெரியும். அங்கே அவர் தன்னந்தனியாகவே நிற்க நேரிடும். ஜார்விஸே வெளியில் வந்தாலல்லாது எவரும் இவரை ஏன் வந்திருக்கிறீர்கள் என்றுகூடக் கேட்க மாட்டார்கள். பெருமூச்சு விட்டுக்கொண்டே, மேஜையிலிருந்து காகிதம் ஒன்றை எடுத்தார் குமாலா. எழுத ஆரம்பித்தார். அநேகந் தடவை எழுதி எழுதிக் கிழித்து எறிந்துவிட்டுக் கடைசியில் ஒரு வழியாகக் கடிதத்தை முடித்தார்:

''எஜமானே,

''அன்னை இறந்துவிட்டார் என்பதைக் கேட்க இந்தக் கோயிலைச் சேர்ந்த நாங்கள் அனைவரும் வருந்துகிறோம்; அது எத்தகைய நஷ்டம் என்பது எங்களுக்குப் புரிகிறது. ஆகவே, கண்ணீர் பெருக்குகிறோம். நீங்கள் எங்களுக்காகச் செய்திருக்கும் உதவிகள்பற்றிக் காலஞ் சென்ற அவர் அறிவார். அவற்றில் அவரும் பங்கெடுத்துக்கொண்டார் என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அவருடைய ஆன்மா சாந்தியடைய இந்த ஆலயத்தில் பிரார்த்தனை புரிவோம். துயருற்றிருக்கும் உங்களுக்காகவும் தொழுவோம்.

உங்கள் விசுவாச ஊழியன்,
—குமாலா.''

கடிதத்தை மூடி முத்திரையிட்டுவிட்டு, வெளியில் சென்று சிறுவனொருவனைக் கூப்பிட்டு, ''பையா, குலுஸேயின் வீட்டுக்குச் சென்று அவனுடைய குதிரையைப் பெற்றுக்கொள். இந்தக் கடிதத்தை ஜார்விஸ் அவர்களின் இல்லத்துக்கு எடுத்துச் செல். அங்கே அவரைத் தொந்தரவு செய்துவிடாதே! யாராவது ஒருவரிடத்தில் இந்தக் கடிதத்தைச் சேர்த்துவிடு. அங்கே நீ அடக்க ஒடுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும். எஜமானி அம்மாள் காலமாகிவிட்டார்கள். புரிகிறதா உனக்கு?'' என்றார்.

''புரிந்துகொண்டேன், சாமி''

பின்பு பிஷப் வந்தார். இறுதிச் சடங்கும் நடந்து முடிந்தது.

பிஷப் மெதுவாகவும் பிறகு இன்னும் சற்று உரக்கவும் கூப்பிடுகிறார்:

''மிஸ்டர் குமாலா, மிஸ்டர் குமாலா!''

''ஐயா, பிரபுவே!''

''உங்களுக்குத் துயரூட்டுவது எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. என்றாலும், நீங்கள் இங்கிருந்து போய்விடுவது நல்லது. மிஸ்டர் குமாலா, கொலையுண்டவரின் தந்தையான ஜார்விஸ் இங்கே இண்டாட்ஷேனிக்குப் பக்கத்திலேயே வசிப்பது உண்மைதானே?''

''உண்மைதான், பிரபுவே!''

''அந்த ஒரு காரணத்துக்காகவே நீங்கள் இங்கிருந்து போய்விடவேண்டுமென்று எண்ணுகிறேன். நான் கூறுவது புரிகிறதா, மிஸ்டர் குமாலா?''

''புரிகிறது, பிரபுவே!''

''பீட்டர்மாரிட்ஸ்பர்க்கிலுள்ள உங்கள் பழைய நண்பர் இண்டோம்பேலாவிடம் உங்களை அனுப்பிவிடுகிறேன். அங்கே அவருக்கு உதவியாக நீங்கள் இருக்க முடியும்; உங்கள் மனச் சுமையும் அதனுல் குறையும்.''

''நீங்கள் சொல்வது புரிகிறது, பிரபுவே!''

இந்த வேளையில், கதவு தட்டும் ஓசை கேட்டது. செய்தி கொண்டுபோன பையன்தான் திரும்பி வந்திருந்தான். அவன் கொண்டு வந்திருந்த பதில் கடிதத்தைக் குமாலா வாங்கிக்கொண்டார். 'பூஜ்யர் குமாலா, இண்டாட்ஷேனி என்று விலாசமிட்டிருந்தது அது. பையனுக்கு நன்றி செலுத்தி அனுப்பிவிட்டுக் கதவை மூடினுர். பிறகு தம்முடைய நாற்காலிக்குச் சென்று உட்கார்ந்து, பிஷப் பேசுவதைச் செவிமடுக்கத் தயாராஞர்.

''முதலில் கடிதத்தைப் படியுங்கள், மிஸ்டர் குமாலா.''

குமாலா கடிதத்தைப் பிரித்து, தமக்குள் படித்துக்கொண்டார்.

''சாமியார் அவர்களுக்கு,

தங்களுடைய இரங்கற் செய்திக்காகவும், கோயிலில் நீங்கள் நடத்தப் போகும் பிரார்த்தனைகளுக்காகவும் நன்றி. நீங்கள் சொன்னது சரிதான்; இங்கே நடக்கும் காரியங்களைப்பற்றி என் மனைவிக்குத் தெரிந்திருந்தது; அவற்றில் அவளும் பெரும் பங்கு கொண்டிருந்தாள். எங்கள் அன்பு மகனின் நினைவுப் பணிகளாகவே இந்தக் காரியங்களை நாங்கள் செய்தோம். இண்டாட்ஷேனியில் புதிய கோயிலொன்றைக் கட்டவேண்டுமென்பது அவளுடைய கடைசி ஆசை. அதைப்பற்றி உங்களுடன் பேச நான் வருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
—ஜேம்ஸ் ஜார்விஸ்.''

குமாலா எழுந்து நின்றுர். ''இது ஆண்டவனிடமிருந்து வந்துள்ளது'' என்று கூறிய அவருடைய குரலைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தார் பிஷப்.

''அந்த ஆண்டவனின் கடிதத்தை நான் பார்க்கலாமா?'' என்று கேலியாகக் கேட்டார் பிஷப்.

அதை அவரிடம் அளித்துவிட்டு, அவர் படிக்கும்போது பொறுமையிழந்தவராய் நின்றுகொண்டிருந்தார் குமாலா. பிஷப் அதைப் படித்து முடித்தபிறகு சொன்னுர்: ''முட்டாள்தனமாகக் கேலி செய்துவிட்டேன்!'' அதை அவர் மறுபடியும் படித்தார். பிறகு, கலங்கிய கண்ணையும் மூக்கையும் துடைத்துவிட்டு, கையில் கடிதத்தைப் பிடித்தபடியே உட்கார்ந்தார்.

வீட்டிலுள்ளோரிடம் பிஷப் விடை பெற்றுக்கொண்டதும், அவரும் குமாலாவும் ஆலயத்துக்குச் சென்றுர்கள். கோயில் வாசலில் பிஷப் அமைதியாகச் சொன்னுர்: ''நீங்கள் இண்டாட்ஷேனியை விட்டுப் போவது கடவுளுக்கே விருப்பமில்லை என்றுதான் தோன்றுகிறது.''

பிஷப் சென்றபின், தம் வீட்டுக்குள் சென்றுர் குமாலா. அவருடைய மனைவியும் மருமகளும் வேறு சில பெண்களும் மலர் வளையம் ஒன்றைத் தொடுத்துக் கட்டக் கண்டார். வெள்ளை மலர் வளையத்தில் வெள்ளை நாடா ஒன்றைக் கட்டி, ''இண்டோட்ஷேனியிலுள்ள அர்ச் மார்க் கோயிலைச் சேர்ந்த மக்களின் அநுதாபத்துடன் இது வருகிறது'' என்ற சீட்டெழுதி, அதன் ஓரங்களில் கறுப்புக் கோடிட்டு, ஜார்விஸுக்கு அதைக் குமாலா அனுப்பினுர்.

இது பதினுன்காவது நாள். ''மலையேறப் போகிறேன்'' என்று மனைவியிடம் கூறினுர் குமாலா. ''புரிந்துகொண்டேன்'' என்றுள்

அவள். ஏனென்றால், முன்னமே இரண்டு தடவை இதுபோலச் செய்திருக்கிறார் அவர். சிறுவன் அப்ஸலோம் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுவான்போல் தோன்றிய போது ஒரு முறை சென்றார். பிறகு இந்தப் பாதிரித் தொழிலை விட்டு, பெருஞ் சம்பளத்துக்கு பாக்ஸ்டர் என்ற வெள்ளையருக்காக டானிப்ரூக்கில் சுதேசிக் கடையொன்றை நடத்த ஒரு காலத்தில் எண்ணியபோது மீண்டும் ஒரு முறை சென்றார்.

''என்னுடன் நீயும் வருகிறாயா? உன்னைத் தனியாக விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை.''

அவளுடைய உள்ளத்தை இது தொட்டது: ''நான் வர இயலாது, ஸ்டீபன். அந்தப் பெண்ணுக்குப் பிரசவ காலம் நெருங்கிவிட்டது. எப்போது குழந்தை பிறக்குமோ, யாருக்குத் தெரியும்? ஆனால் அதற்காக நீங்கள் போகாதிருக்க வேண்டாம்; போங்கள்'' என்றாள்.

மலை அடிவாரத்தை அவர் அடைந்தபோது அந்தி நேரம். இருள் கவிய ஆரம்பித்துவிட்டது. சுற்றுப்புறத்தில் யாருமே இல்லை. ஆயினும் பெரும் பாறைகளிடையே சென்ற பாதையில் அவர் ஏறத் துவங்கியபோது, அங்கே குதிரைமீது ஒருவர் வீற்றிருக்கக் கண்டார். ''சாமி, நீங்கள்தானா அது?'' என்று ஒரு குரலும் கேட்டது.

''நான்தான், ஐயா.''

''கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போலாயிற்று! உங்கள் கோயிலைச் சேர்ந்தவர்களுக்காக ஒரு கடிதம் வைத்திருக்கிறேன். இதோ என் பையில்தான் இருக்கிறது அது.'' சிறிது தயங்கிவிட்டு, மறுபடி தொடர்ந்து சொன்னார் ஜார்விஸ்: ''நீங்கள் அனுப்பிய மலர்கள் வெகு அழகாக இருந்தன, சாமி!''

''நன்றி, ஐயா.''

''அப்புறம், அந்தக் கோயில் சங்கதி என்ன? புதிய ஆலயம் எழுப்ப விரும்புகிறீர்களா நீங்கள்?''

புன்னகை செய்து தலையை ஆட்டுவதைத் தவிர வேறு ஏதும் செய்யமுடியவில்லை குமாலாவினால்; பேசவே வாய்வரவில்லை அவருக்கு. 'வேண்டாம்' என்று பொருள்பட அவர் தலையை ஆட்டியபோதிலும், ஜார்விஸ் அவருடைய உள்ளக் கிடக்கையை ஊகித்துக்கொண்டார்.

''அதைப்பற்றிய திட்டங்களெல்லாம் உங்களிடம் சீக்கிரமே வந்து சேரும். உங்கள் விருப்பம் அந்த மாதிரியானதுதானா என்பதை நீங்கள் அவற்றைப் பார்த்துச் சொல்ல வேண்டும்.''

''நான் அவற்றைப் பிஷப்பிடம் அனுப்பி வைக்கிறேன், ஐயா.''

''என்ன வேண்டுமோ செய்து கொள்ளுங்கள். என்னைப் பொறுத்த வரையில், அதை விரைவில் செய்து முடிக்க வேண்டும் என்பதே என் ஆவல். ஏனென்றால், நான் இந்த இடத்திலிருந்து போய்விடப் போகிறேன்.''

மனத்தில் அச்சத்தையும் ஏமாற்ற உணர்ச்சியையும் உண்டாக்கிய அந்த வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்றார் குமாலா. இருளாக இருந்தபோதிலும், அவருடைய நிலையை ஜார்விஸ் அறிந்துகொண்டார். ஆகவே, அவர் தொடர்ந்து மளமளவென்று சொன்னார்:

''நான் அடிக்கடி இண்டாட்ஷேனிக்கு வந்து போய்க்கொண்டு தான் இருப்பேன். நான் இங்கே என் வீட்டில் தனிமையாக இருக்கிறேன். அதனால் ஜோஹான்னிஸ்பர்க் சென்று என் மருமகளுடனும், அவளுடைய குழந்தைகளுடனும் வசிக்கப் போகிறேன். அந்தச் சிறுவனை உங்களுக்குத் தெரியும் அல்லவா?''

''நன்றாகத் தெரியும், ஐயா.''

''அவன் தன் தகப்பனைப்போல் இருக்கிறானா?''

''ஆம், அவரைப் போலவே தான் இருக்கிறார். அந்த இளைஞரையும் பாலையும் எங்களுக்கு அளித்ததற்கும், இப்போது கோயிலைக் கட்டிக் கொடுப்பதற்கும் நான் நன்றி தெரிவிக்கு முன் சென்று விடாதீர்கள்!''

சோகமும் உல்லாசமும் கலந்த குரலில் சொன்னார் ஜார்விஸ்

"நீங்கள் கண்டுபிடிக்கும் வரையில் இருளில் உழன்றுகொண்டிருந்த ஒருவன் நான். உங்கள் கட்டளை இதுவானால் மனமொப்பி அப்படியே தங்குகிறேன்."

குமாலா கூறினார்: "உண்மையில் நான் இதுவரைக்கும் அறிந்துள்ள வெள்ளையர்கள் எல்லோரிலும்...."

ஜார்விஸ் இடைமறித்துச் சொன்னார், உக்கிரமாக: "நான் அப்படி ஒன்றும் மனிதருள் மகாத்மா அல்ல!"

"அதைப்பற்றி நான் கூறுவதற்கில்லை. என்றாலும் கடவுளின் கைக்கருவியே நீங்கள்."

ஜார்விஸ் விடை பெற்றுச் சென்றார்.

பிறகு குமாலா மலை உச்சிக்குச் சென்று இறைவனுக்கு நன்றி கூறினார். இரவெல்லாம் பிரார்த்தித்தார். இடையிடையே உறக்கம் வந்தது. துன்பப்பட்டுக்கொண்டிருந்தோர் அனைவரையும் பற்றி எண்ணினார். எல்லாரையும் காட்டிலும் மகன் அப்ஸலோமின் நினைவு மேலெழுந்து நின்றது. இந்த விடியற்சாமத்தில் விழித்துக் கொண்டிருப்பானா அவன்? இல்லை. அவனால் தூங்கத்தான் இயலுமா? "ஐயோ மகனே! என் மகனே!" என்று கதறினார் குமாலா.

இப்படிக் கதறியபின் கைக் கடிகாரத்தைப் பார்த்து மணி ஒன்றாகிவிட்டதைக் கண்டார். ஐந்து மணிக்குச் சற்றுக் கழித்துக் கதிரவன் உதித்துவிடுவான். அப்போதுதான் அது நடக்கும் என்பதைக் கேள்வியுற்றிருந்தார் அவர். பையன், இப்போது தூங்கிக்கொண்டிருப்பானேயானால், அவன் அப்படியே இருக்கட்டும்; அதுதான் நல்லது! "கருணைக்கடலான கர்த்தரே, அவனுக்கு அருகிலேயே இருங்கள்." இப்படி நெடுநேரம் உள்ளமொன்றித் தொழுதார் குமாலா.

அடுத்தபடி அன்புத் தாயகமான ஆப்பிரிக்காவின் நினைவு எழுந்தது. அதன் மக்களையெல்லாம் எண்ணினார். ஆண்டவன் ஆப்பிரிக்காவைக் காப்பாராக! ஆனால், அந்த மீட்சியை அவர் பார்க்கப் போவதில்லை. அது இன்னும் தொலை தூரத்திலேயே இருக்கிறது. ஏனென்றால் அதைக் கண்டு அனைவருக்கும் அச்சம்.

கொஞ்சம் கொஞ்சமாகக் கிழக்கு வெளுத்துக் கொண்டே வந்தது. கடைசியாக அந்தக் குறிப்பிட்ட நேரம் இன்னும் சற்றைக்கெல்லாம் வந்துவிடும் என்பதை உணர்ந்தார். எதிர் பார்த்த அந்த வேளை வந்ததும் எழுந்து நின்று, தொப்பியைக் கழற்றித் தரையில் வைத்தார். பின்பு தம் கைகள் இரண்டையும் தம் முன்னே கோத்துக்கொண்டார். அப்படி அவர் நின்றுகொண்டிருந்த நேரத்திலே, கதிரவன் கிளம்பினான் கீழ்த்திசையிலே!

ஆம், விடிந்து விட்டது! டிடிஹோயா பறவை துயில் கலைந்தெழுந்து வழக்கமான புலம்பலை எழுப்பிக் கொண்டே போகிறது. இங்கெலி, கிழக்கு கிரிகாலாந்து மலைகளின் முடிகள் பகலவனொளியில் பளிச்சிடுகின்றன. உம்ஜிம்குலு பள்ளத்தாக்கு இன்னும் இருளில்தான் மூழ்கிக் கிடக்கிறது; என்றாலும் அங்கும் ஒளி வந்துவிடும்! இண்டாட்ஷேனீ இன்னும் இருளில் ஆழ்ந்துதான் இருக்கிறது. ஆயினும், அங்கும் வெளிச்சம் வந்துவிடும், விரைவிலே! ஆயிரக்கணக்கான நூற்றாண்டுகளாக நாள் தவறாமல் நடந்துகொண்டிருப்பதைப் போலவேதான் இப்போதும் உதயம் உண்டாகியிருக்கிறது. என்றாலும் அடிமைத்தனம் என்ற அச்சத்திலிருந்தும், அச்சம் என்ற அடிமைத்தளையிலிருந்தும் நாம் விடுதலை அடையும் விடிவுவேளை எப்போது வருமோ? யாரே அறிவார், அந்த ரகசியத்தை? ★

EDITED PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN